
# காதல் ஒருவனைக் கைப்பிடித்தேன்



ரமணிசந்திரன்

# காதல் ஒருவனைக் கைப்பிடித்தேன்

**ரமணிசந்திரன்**

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : காதல் ஒருவனைக் கைப்பிடித்தேன்! |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஏப்ரல், 2010 |
| இரண்டாம் பதிப்பு | : ஜூன், 2012 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 184 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை 14. |



# காதல் ஒருவனைக் கைப்பிடித்தேன்

# காதல் ஒருவனைக் கைப்பிடித்தேன்



# 1

“அருமையாக, ஆசைப்பட்டுப் பிறந்த பெண் குழந்தை, எப்படியும் ஒரு காலத்தில் அடுத்த வீட்டில் வாழப் போகிறவள்.. அங்கே எப்படி இருக்குமோ என்னவோ, இங்கே விருப்பம் போல இருக்கட்டும் என்று உனக்குச் செல்லம் கொடுத்தது தப்பாகிப் போயிற்று! சொல்வதைக் கேளாமல், இந்தக் கடைசி நேரத்தில் போய், இப்படி அழிச்சாட்டியம் பண்ணுகிறாயே! இப்போதென்ன, உனக்கு உடனே திருமணம் என்றா, அப்பா முடிவு பண்ணி

விட்டார்? அப்படியில்லையே! முதலில் வருகிறவர் எப்படி இருக்கிறார் என்று, ஆளைப் பார்த்து வைப்போம். ஆனால், நீ சும்மா அவசரப்பட்டு, முதலிலேயே முடிவெடுத்துப் பேச வேண்டாம்'' என்றாள் செந்திரு!

''நான்தான் இப்போது திருமணம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறேனே., அப்புறமும் இந்த முயற்சி செய்வானேன்?'' என்றாள் எரிச்சலோடு மகள்.

''ஆமாம் சொன்னாய். அதற்காக, உனக்குத் திருமணமே செய்யாமலா வைத்திருக்க முடியும்? அல்லது, தலை நரைக்கிற வரை காத்திருப்பதா? பெற்றவர்கள், எங்களுக்கும் என்னென்னவோ ஆசைகள் இருக்கும்தானே? அவைகளை நிறைவேற்றும் கடமை உனக்கும் உண்டுதானே? அதுவும் சும்மா ஏப்பை சாப்பையான இடத்திலா கொண்டு தள்ள முயற்சிக்கிறோம்? இதுவரை நீ மறுத்த மாப்பிள்ளைகளாவது, பெரிய வேலை பார்க்கிறவர்கள்தான் என்றாலும், இதை விட்டாலும், இதைப் போலவேயோ, மேலாகவோ இன்னொன்று கிடைக்கும் என்கிற வகை. அதனாலேயே உனக்குப் பிடிக்காவிட்டால் வேண்டாம் என்று, அப்பாவும் நானும் விட்டு விட்டோம். ஆனால் இந்த இடம் அப்படி அல்லடாம்மா! ரொம்ப வளமான செல்வநிலை, பையன் படித்தவன். ஆளும் மிகவும் நன்றாக இருக்கிறார். உன் நிறம் இல்லை என்றாலும், நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து நின்றால், ஜோடிப் பொருத்தம் பிரமாதமாக இருக்கும். அதுவும் உன் அழகுக்காக, அவர்களே தேடி வருகிறார்கள். எல்லா வகையிலும் சிறந்த இந்த மாப்பிள்ளையை விடக் கூடாது என்று எண்ணித்தான், அப்பா அவர்களை வீட்டுக்கு வரச் சொல்லிவிட்டார்'' என்று கனிவும் கண்டிப்புமாக மகளை ஒத்துக் கொள்ள வைக்க முயன்றாள் தாயார்.

''நீங்கள் என்னதான் சொன்னாலும், அதெப்படிம்மா என்னிடம் கேட்காமல், அவர்களை வரச் சொல்லலாம்? எனக்குப் பிடிக்கவில்லை! அதனால்...''

''சும்மா டேப்பில் பதிய வைத்து ஓட விட்ட மாதிரிச் சொன்னதையே சொல்லக் கூடாது! பெற்றவர்கள் நல்லதற் காகத்தான் சொல்வார்கள் என்று புரிந்து, அதை ஏற்கவும் தெரிய வேண்டும்!'' என்று இப்போது தாயாராக அதட்டிப் பேசினாள் செந்திரு.

மகள் முகம் இறுகி நிற்கவும், பெற்றவளின் மனம் இளகத்தான் செய்தது.

ஆனால் கூடவே, சின்ன வயதில் மருந்து குடிக்க மகள் எப்போதும் அடம் பிடிக்கிறவள் என்பதும், அவளுக்கு நினைவு வந்தது. நல்லது என்று தெரியாமல் மறுக்கிற அதே புத்தி, இன்றுமல்லவா இருக்கிறது!

பிடிவாதமாகக் கையைக் காலை மடக்கிப் பிடித்து மருந்தைப் புகட்டிய மாதிரி இப்போது கட்டாயத் திருமணம் செய்து வைக்க முடியாதுதான். ஆனால், அதற்காக அவளது போக்குப்படி விட்டுக் கொண்டே இருக்கவும் முடியாதே!

மனதின் கனிவைக் காட்டிக் கொள்ளாமல், சற்று அழுத்தத்துடனேயே பேசினாள் பெற்றவள், ''பார் திலோ, இது ரொம்பப் பெரிய இடம்மா. கட்டுமானத் தொழிலில் கொடி கட்டிப் பறக்கிறார்களே, 'கனவு இல்லம்' என்று, அங்கங்கே பெரிய பெரிய கட்டிடங்களில், அவர்களது பெயர் இருப்பதை நீயும் பார்த்திருப்பாய். நம்பிக்கையான நிறுவனம் என்கிறார்கள். அதன் உரிமையாளர்கள் என்றால் சற்று நினைத்துப் பார்! தொழிலில் நல்ல பெயரும் இருக்கிறது. கூடவே பையனைப் பற்றியும் எந்தக் குறையும்

சொல்லவே முடியாதபோது, நீ இந்த மாதிரி பேசினால் எங்களுக்கும்தான் எப்படி இருக்கும்?''

திலோத்தமா வழக்கம்போல உடனேயே மறுக்காததே, செந்திருவுக்குக் கொஞ்சம் நம்பிக்கை அளித்தது.

ஆனாலும், மகளின் மதிமுகத்தில் இருந்த யோசனை யின் முடிவு, நல்லதாக இருக்க வேண்டுமே! மதில் மேல் பூனை, அந்தப் பக்கம் குதித்து விட்டால்?

மூச்சைப் பிடித்துக் கொண்டு, பெற்றவள் காத்திருக்க ''எ... என்ன பெயர் சொன்னீர்கள் அம்மா? ம்ம்... க... கனவு இல்லமா? அந்த நிறுவனத்துக்கு நல்ல பெயர்தான் என்று நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்... அதன் உரிமையாளர் கள் என்றால்... நான் யோசிக்க வேண்டும், அம்மா. நான் முதலில் பையனைப் பார்க்க வேண்டும். அதன் பிறகு... அப்புறமும் எனக்குப் பிடித்தால்தான், மேலே எந்தப் பேச்சும் கூட!'' என்றாள் மகளும், தாயைப் போலவே, சற்று அழுத்தத்துடனேயே.

இந்த அளவுக்கு மகள் இறங்கி வந்ததே, செந்திருவுக்குப் பெரிய விஷயமாகத் தோன்றியது!

''இந்த முறையும் மறுத்து, திலோ ஏதாவது சொன்னாள் என்றால், நான் பொல்லாதவனாக இருப்பேன்'' என்று குதித்துக் கொண்டிருந்த கணவனிடம் நல்ல பதிலைச் சொல்ல முடிகிறதே!

இல்லாவிட்டால், கணவனின் தாண்டவத்தையும், அவள்தானே சகித்தாக வேண்டும்?

'கனவு இல்லம்' நிறுவனத்துடைய உரிமையாளர் என்றதும், நிபந்தனையோடுதான் என்றாலும், ஓரளவு தலையாட்டி வைத்தது தப்போ என்று, அடுத்த இருபத்து

நாலு மணி நேரத்தில் திலோத்தமைக்குப் பலமுறை தோன்றி விட்டது!

என்னவோ, கிட்டத்தட்ட திருமணமே நிச்சயமாகி விட்டது போலப் பெற்றோர் நடந்து கொண்ட விதம், அவளுக்கு வயிற்றில் ஏதோ பிசைந்து, என்னவோ செய்தது!

மாப்பிள்ளைப் பையனைப் பார்க்க வேண்டும். அவ னோடு பேச வேண்டும் என்று, அவள் ஏதேதோ திட்டம் போட்டால், இந்தப் பெற்றோர்கள் திருமணத்தையே நடத்தி, முடித்து விடுவார்கள் போலிருக்கிறதே!

அப்படி நடத்த முடியாதுதான்! ஆனால் பிடிவாதமாக மறுத்தால், குடும்பத்தில் தகராறு நிச்சயம்!

உள்ளூர நெஞ்சு தடதடக்க, வெளியே சாதாரணம் போலக் காட்டிக் கொண்டு வீட்டுப் பெரியவர்களின் சொற்படி, வேண்டா வெறுப்பாக, ஆடிக் கொண்டிருந்தாள், திலோத்தமா!

வேண்டா வெறுப்பாகத்தான்! ஏனெனில், பெற்றோரின் போக்கைப் பார்த்தால், அவள் எண்ணியது நடப்பதற்கு வழியே இல்லாதது போலத்தான் தெரிந்தது!

ஆனால், முயன்றால், முடியாதது இல்லைதானே? ஏதோ ஒரு வாய்ப்பு கிடைக்காமல் இராது!

அப்படியே வாய்ப்பு தானாகக் கிடைக்கவில்லை என் றால், அந்த வாய்ப்பை அவளே உருவாக்கிக் கொள்ள வேண்டியதுதான்!

எப்படியும், உரிமையாளர் என்றால்... பார்க்கலாம்!

ஆனால், பல பணக்காரக் குடும்பங்களில் போல, அப்பன் தேடி வைத்த சொத்து என்ற ஒரே காரணத்தினால்,

நிறுவனத்துடைய உரிமையாளனாக ஆகியிருந்தால், அத்தோடு முற்றுப்புள்ளிதான். அந்த மாதிரி ஆள், அவளுக்குக் கொஞ்சமும் பயன்பட மாட்டான்.

வீட்டைத் தூசி தட்டுவதும், துடைப்பதும், அழகு படுத்துவதுமாகப் பெற்றோர் இருவரும் பரபரத்ததைப் பார்க்கையில் திலோத்தமாவுக்கு வேடிக்கையாக இருந்தது!

ஏதோ ஆளுநர், அமைச்சர் வரப் போகிற மாதிரி, என்ன பெரிய கித்தாய்ப்பு?

அவளுக்குப் படபடப்போ, பரபரப்போ, எந்த உணர்ச்சியும் உண்டாகவில்லை! வரட்டும் பார்க்கலாம் என்பது தான்!

மாலையில் வேண்டுமானால், ஓர் அரை அல்லது ஒரு மணி நேரம் முன்னதாகக் கேட்டுக் கொண்டு வர வேண்டியதுதான் என்று எண்ணியவாறு குளித்துவிட்டு, மறுநாள் அலுவலகத்துக்கு என்று முந்திய நாள் இரவில் எடுத்து வைத்திருந்த ஆடை, அணிமணிகளை அணிந்த வாறு, அவளது அறையை விட்டு வெளியே வந்தால், ''எங்கே கிளம்பி விட்டாய்?'' என்று புருவத்தைச் சுளித்து வினவினார் மணிகண்டன்.

என்ன கேள்வி இது?

''வேலைக்கு அப்பா, வேலைக்கு! எனக்குக் கூட வேலை கொடுத்துச் சம்பளமும் தருகிறார்களே! அந்த அலுவலகத்துக்கேதான்!'' என்று இலகுவான புன்னகை செய்தபடியே தந்தையின் முகத்தைப் பார்த்தால், அதில் சிரிப்பின் சாயல், சிறிது கூட இல்லை!

அது மட்டுமல்ல, அவளிடம் பேச வேண்டும் என்பதற்காக, அறை வாயிலேயே நடை பயின்றிருப்பார் போல!

அப்படித்தான் என்பது போலப் பெற்றவரின் பேச்சு அமைந்தது! “அதெல்லாம் நீ எங்கேயும் போக வேண்டாம். அம்மாவுக்குக் கூடமாட உதவி செய்தபடி, வீட்டிலேயே இரு!” என்று சற்று அழுத்தமான குரலில் கூறினார் அவர்.

ஏறத்தாழ உத்தரவிடுவது போல!

இதெல்லாம் அவள் வீட்டில் பழக்கம் இல்லையே!

வருகிறவர்கள், அப்படியென்ன பெரிய கொம்பு முளைத் தவர்களா?

பணம் என்கிற கொம்பாக இருக்கலாம் என்பதோடு, எப்போதோ நடந்திருக்கக் கூடிய திருமணத்தைப் பல முறை தட்டி விட்டவள் அவளேதானே? அந்த அலுப்பும் இருக்கலாம்! இந்த முறை, அதற்கு இடம் கொடுக்காமல் இருக்கிறாராம்!

அதாவது, அப்படிக் காட்டிக் கொள்கிறார். மற்றபடி, பையனைப் பிடிக்கவே இல்லை என்றால், வற்புறுத்தித் திருமணம் செய்து வைக்கிற வக்கிரம், அவளுடைய அன்பான பெற்றோருக்குக் கிடையாதே!

அப்படி இருந்திருந்தால்தான், என்றைக்கோ அந்த முயற்சி செய்திருப்பார்கள்!

ஆனாலும், மாலை வரை மொட்டு மொட்டென்று சும்மா உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல், “அம்மாவுக்கு நான் என்ன உதவிப்பா, செய்யட்டும்? கேசரிக்கு உப்பு, சமோசாவுக்கு இனிப்பு எல்லாம் சரி பார்த்துச் சொல்லுவதா? பாயசத்தில் கூட, அம்மா போடுகிற காரம் எப்போதுமே சரியாகத்தானே இருக்கும்? இதில் நான் என்ன உதவிப்பா செய்ய முடியும்?” என்று கேலியாக அடுக்கிவிட்டு, “அதைவிட, வேலைக்கே போய், அங்கே கம்ப்யூட்டரில் கொஞ்சம் வீடியோ கேம்

விளையாடிவிட்டு வருகிறேனே" என்று சலுகைக் குரலில் அனுமதி கேட்டாள், மகள்.

ஆனால், அவள் அவ்வளவு வேடிக்கை பேசியும், தந்தை முகத்தில் புன்னகையைக் காணோம்! "அதெல்லாம் வேண்டாம். வெளியே போய் அலைந்து, சோர்ந்து முகத்தைக் கெடுத்துக் கொள்ளாமல், சும்மா வீட்டிலேயே இரு" என்று விட்டு, அவளோடு மேலே நின்று பேசப் பயந்தவர் போல, நகர்ந்து முன்னறைக்குப் போய் விட்டார்!

திலோவுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது! மாலையில், அந்த கும்பல் வரும்வரை, சும்மா எப்படி உட்கார்ந்திருப்பது?

அதுவும், சொன்ன நேரத்துக்கு வருமோ? அல்லது, மாப்பிள்ளை வீட்டார் என்றால், தாமதமாக வந்தால்தான் பெருமை என்று ஆடி அசைந்து, மெள்ளத்தான் வருமோ?

அன்னையின் மூலமாகத் தந்தையை வளைய வைக்கலாமா என்று திரும்பினால், உள்ளிருந்து செந்திரு தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டாள். அன்னையும், அப்பாவோடு கூட்டுதான் என்று சொல்லாமல் சொன்னபடி.

என்ன இது? அவள் அப்படி எங்கே தொலைந்து போய் விடுவாள் என்று இத்தனை காபந்து?

தாயிடம் இன்னும் கொஞ்சம் வெளிப்படையாகவே பேசலாம்.

கோபமாகப் பெற்றவளிடம் விரைந்து, எண்ணியதைக் கேட்டாள்.

மீந்த சப்பாத்தி மாவை அலுமினிய 'ஃபாயிலா'ல் மூடி வைத்துக் கொண்டிருந்த செந்திரு, கைவேலையை முடித்துவிட்டு மெல்ல மகளைத் திரும்பிப் பார்த்தாள்.

மகளின் கோப முகம் அவளது சிறு வயதை நினைவூட்டியதோ, என்னவோ? லேசாக முறுவலித்து, ''அதில்லை கண்ணு. டீ.வி.யில் அப்பா ஒரு படம் பார்த்தாராம், அதில் தன்னைப் பெண் பார்க்க வருவது பிடிக்காமல், கதாநாயகி வேண்டுமென்றே அலுவலகம் முடிந்ததும் வீட்டுக்கு வராமல், ஊர் சுற்றிவிட்டு, ரொம்ப தாமதமாக வந்தாளாம். நீ வேறு, கல்யாணத்தைத் தட்டிவிட்டுக் கொண்டே இருக்கிறாயா? அப்படி ஏதும் செய்து விடுவாயோ என்று, அப்பாவுக்கு ஒரே கவலை. நீ அப்படி செய்ய மாட்டாய், எதுவானாலும் வெளிப்படையாகச் சொல்லி விடுவாய் என்றால், அப்பா கேட்க மாட்டேன் என்கிறார். நீ நல்ல பெண்தான் என்றாலும், இந்த வயது கிறுக்குத்தனமானது என்று... சரி, அதை விடு. இப்போது, அப்பா சொல்வது போல, வீட்டிலேயே இருந்து விட்டுப் போயேன்! அப்படி என்ன அலுவலகத்தில் வெட்டி முறிக்கிற வேலை? அங்கே போய் விளையாடுகிற வீடியோ கேமை, வீட்டிலேயே விளையாடுவது! சரிதானா?'' என்றவளிடம் பதிலே சொல்லாமல், திரும்பிப் போய், அறைக்குள் புகுந்தாள் பெண்.

தந்தையிடம் அவள் சொன்னதைக் கேட்டுவிட்டுச் சொல்கிறாள். மற்றபடி, எதைச் செய்தாலும், நூறு சதவிகித மன ஈடுபாட்டோடு செய்ய வேண்டும் என்று, வேலையில் சேர்ந்தபோது, மகளுக்கு அறிவுரை சொன்னவள் இதே தாய்தான்.

தாய், தந்தை இருவருமே, செய்கிற எதையுமே அலட்சியமாக எண்ணிச் செய்கிறவர்கள் அல்ல. அதிலும், அடுத்தவரிடம் கைநீட்டி ஊதியம் பெறுகிறபோது, அதற்கான முழு உழைப்பையும் கொடுத்தாக வேண்டும்.

இல்லாவிட்டால், அந்தப் பணம் உடம்பில் தங்காது என்பார்கள்.

இள ரத்தம் காரணமாக வேலை பற்றி விளையாட்டு வேடிக்கை பேசினாலும், அவளுமே, பணியில் அலட்சிய மாக இருப்பதில்லை என்பது, அவர்களுக்கும் தெரியும்.

எனவே, திலோத்தமா இப்படிக் கேலி பேசும்போது, கூடச் சேர்ந்து கொஞ்சம் சிரிப்பார்கள்... ஆனால் இன்றைக்கு, முறுவல் மாதிரியாக உதட்டை லேசாக நெளிக்கக் கூடக் காணோம்!

அவள் பலமுறை மறுத்தது, பெற்றோர் இருவரையும் பாதித்திருந்தது!

ஆனால், அதற்காக, மனம் ஒப்பாமல் மணந்து கொள்ள முடியுமா? என்று தன் பக்க நியாயத்தை திலோத்தமா விடுவதாகவும் இல்லை!

பிடிக்கவில்லை என்றால், பிடிக்கவில்லைதான்!

''என்னையெல்லாம், என் பெற்றோர் கேட்கவே இல்லை! இத்தனைக்கும் நான் கல்லூரியில், விடுதியில் தங்கிப் படித்தவள். இறுதி ஆண்டு தேர்வு எழுதி விட்டு வந்தால், இரண்டு வாரத்தில் திருமணம் என்றார்கள். நாங்கள் நன்றாக இல்லையா? சும்மா நுணுக்கி நுணுக்கிப் பார்க்கக் கூடாதும்மா! நீ அமோகமாக வாழ வேண்டும் என்று தானே, நாங்களும் நினைப்போம்?'' என்று கடைசித் தடவை, எந்த விதமான காரணமும் சொல்லாமல், காரணம் என்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லாமலே திலோத்தமா மறுத்தபோது, சற்றே மாறுபட்ட குரலில், செந்திரு கூறியிருக்கிறாள்.

இப்போது தாயார், இன்னும் என்னென்ன சொல்லக் கூடும்?

தந்தையைப் பற்றியோ, கேட்கவே வேண்டாம்! அதிகம் பேசுகிறவர் அல்ல என்றாலும், 'சாது மிரண்டால்...' போல ஆகிவிடக் கூடாதே!

அதையும், திலோவால் தாங்கிக் கொள்ள முடியாதே!

கடவுளே, எல்லாம் நல்லபடியாக முடிய வேண்டும்!

முடியும்!

கடவுள், இதற்கு மேலும் அவர்களை... அவளையும் தான், சோதிக்கக் கூடாது என்று மனதார வேண்டிக் கொண்டு, மாலை வேளைக்காகக் காத்திருக்கலானாள் திலோத்தமா!

வரப்போகிற 'கனவு இல்லம்' உரிமையாளர்களுக் காகவும்! அவர்களாலேனும், அவளது ஆசை நிறைவேறட் டுமே!

'கனவு இல்லம்' உரிமையாளர்கள், நேரம் காக்கிறவர்கள் போலும்!

அதே சமயம், வீட்டினரின் கடைசி நேரத்துப் பரபரப்பு களை உணர்ந்தவர்கள் போலக் "கிளம்பி விட்டோம். இன்னும் அரைமணி நேரத்தில் உங்கள் வீட்டில் இருப் போம்" என்று மணிகண்டன் குடும்பத்துக்கு ஓர் முன்னெச் சரிக்கையும், தயார் நிலையில் இருப்பதற்கு ஓர் அவகாச மும் கொடுத்து விட்டே வந்தார்கள்.

சொல்லப் போனால், அ்துவே திலோத்தமாவை, அவர் களுக்கு ஒரு 'சபாஷ்' போட வைத்தது!

இந்த மாதிரிப் பண்போடு பழகுகிறவர்களோடு பேசுவதும் எளிதாக இருக்கும்! அனாவசியக் கோபதாபங்கள் இல்லாமல், அவளை நல்லபடியாகப் புரிந்து கொள்வார்கள்.

ரொம்ப முக்கியம், அதுதானே?

தெளிந்த... லேசாகி விட்ட மனதோடு, தாயின் விருப்பம் போலத் திலோத்தமா தன்னை அளவோடு அலங்கரித்துக் கொண்டாள்.

அதே போலப் பெண்ணைப் பார்க்கும் சாக்கில், அக்கம் பக்கம் உள்ளவர்கள். அடுத்தடுத்த உறவினர் என்ற கூட்டம் சேர்ந்து வராமல், பையன், பையனுடைய தாயார், தந்தையோடு எடுபிடி போல ஒருவர் என்று நாலு பேர் மட்டுமே வந்தார்கள்.

வந்தவர்களைக்கூட நின்று வரவேற்றுவிட்டு, மணி கண்டன் அவர்களை முன்னறையில் உட்காரும்படி உப சாரம் செய்து கொண்டிருக்க, செந்திரு வேகமாக மகளிடம் வந்தாள்.

''இதோ, இங்கிருந்து பார்த்தாலே மாப்பிள்ளை தெரி கிறார் பார். நன்றாகப் பார்த்துச் சொல்லு. தேடிப் பார்த் தாலும், குறை காண முடியாதபடி, ஆள் பிரமாதமாகத் தானே, இருக்கிறார்?'' என்று கேட்டாள்.

தனக்குள்ளே ஓர் ஆராய்ச்சிக் கண்ணுடனேயே எட்டிப் பார்த்த திலோத்தமாவின் முகம் வியந்து, பூவாய் மலர்ந்தது!

கண்கள் பளிச்சிட, முகம் மகிழ்ச்சியில் விகசிக்கத் தாயிடம் திரும்பினாள். ''அம்மா மாப்பிள்ளையை எனக்குப் பிடித்திருக்கிறது! ரொம்ப ரொம்ப!'' என்றாள் குதூகலத் துடன்.



செந்திருவுக்கு மகிழ்ச்சியில் கண்ணீரே வந்து விட்டது!

அவளுடையது திட்டமிட்ட குடும்பம். ஒரு பெண். ஒரு பிள்ளை! மகள்தான் பெரியவள். அவளை விட, ஐந்து ஆண்டுகள் சின்னவனான நரேந்திரன் கல்லூரிப் படிப்பை முடிக்க, இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும். வெளியூரில், கல்லூரி விடுதியில் தங்கிப் படிக் கிறவன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் திலோத்தமா படித்து முடித்ததுமே, அழகு மகளுக்குத் திருமணம் செய்து பார்த்துவிடும் ஆசை அந்தப் பெற்றவளுக்கு.

ஆனால், மணிகண்டனுக்கோ மகள் சிறிது காலம் வெளியே வேலை பார்த்து, உலகம் அறிய வேண்டும் என்ற ஆசை! பொத்திப் பொத்தி வளர்த்துவிட்டுக் கணவன் வீட்டில் சமாளிக்க முடியாமல் வேதனைப் பட்டுக் கொண் டிருக்கும் உறவுக்காரப் பெண்கள் இருவரை, அவருக்குத் தெரியும். நெருங்கிய உறவுக்காரர்கள் என்பதால், அந்தப் பெண்களுடைய பெற்றோரோடு சேர்ந்து, அவருக்கும் மிகுந்த வருத்தம்தான்.

எந்த விதமான சூழலையும் துணிந்து சமாளிக்கும் திடம் வேண்டும் என்பதற்காகவே, கடைசி விடுமுறையைப்

பாட்டி வீட்டில் சீராடிக் கழித்துவிட்டு வந்த மகளை வேலைக்கும் அனுப்பி வைத்தார்.

ஆனால், அவர் எண்ணியது போல, நிறுவனத்திலும் நல்ல பேர் எடுத்து திலோத்தமா ஓர் ஆண்டு வேலை செய்து முடித்த பின் திருமணப் பேச்சை எடுத்தால், இல்லாத தடைகள் சொன்னாள்.

நல்ல நல்ல இடங்கள் என்று அவர் கருதிய வரன்களை எல்லாம், உப்புச் சப்பற்ற காரணங்களைச் சொல்லி, திலோ மறுத்தபோது, அவர் சற்று பயந்தே விட்டார் எனலாம்.

தன் ஒன்றுவிட்ட சகோதரிகள் இருவரின் நிலை கண்டு, மகள் திருமணத்தையே வெறுத்து விட்டாளோ, என்ற அச்சம்!

குழந்தைகள் பிறந்து, அவர்கள் நிலைமை கூட, மெல்லச் சீரடைவதாகத்தானே தெரிகிறது என்று எடுத்துச் சொன்னால் "ஒருவரை நெருப்பு சுட்டு விட்டது, என்று மற்றவர் சமையலே பண்ணாமலா அப்பா, இருக்கிறார்கள்? ஜீவாக்கா, புண்ணியாவைப் பார்த்து, நான் எந்த முடிவும் எடுக்கவில்லை. ஏன், அவர்களே சற்றுத் திடமாக, அவர் களுக்கும் முதுகெலும்பு உண்டு என்று காட்டியிருந்தால், இந்த அளவுக்குப் போயிருக்காது என்பதுதான் என் கருத்து. ஆனால், அதற்கும் என் மறுப்புக்கும் தொடர்பு இல்லை அப்பா! என்னவோ, இது... இந்த ஆளை எனக்குப் பிடிக்கவில்லை! அவ்வளவே!" என்றாள் மகள்.

ஒரு வேளை, பல பெண்களைப் போலக் காதலோ என்று எண்ணி, திலோவுடைய நெருங்கிய தோழிகளிடம் லேசு பாசாக விசாரித்துப் பார்த்ததில், எந்த விவரமும் கிடைக்கவில்லை.

''திலோ சரியான சாமியார் ஆயிற்றே, அங்கிள்! எப்படித் தான் இந்த அளவுக்கு உத்தம புத்திரியாக ஒரு பெண்ணை வளர்த்தீர்களோ என்று, எங்களுக்கெல்லாம் ஆ...ச்சரியம், அங்கிள்!'' என்றாள் ஒரு தோழி!

இங்கே, பெற்றோருக்கு வேறே மாதிரி உதைத்தது!

'சாமியார்', 'உத்தமபுத்திரி' என்ற வார்த்தைகள், என் னென்னவோ எண்ண வைத்தன.

மகளுக்குத் திருமணத்தில் நாட்டம் இல்லை. பெற்றோர் மனதை நோகடிக்காமல், முடிந்தவரை தகராறு இல்லாமல் அந்தப் பேச்சைத் தவிர்க்கிறாள் என்ற ஐயம், இருவருக்கும் உறுதிப்பட்டுக் கொண்டே வந்தது.

என்ன சொல்லி மறுப்பாளோ என்று அந்த அச்சத்தி லேயே இருப்பவரிடம், முதலில் மகளின் சம்மதத்தைக் கூறச் செந்திரு ஓடினாள்.

முக மலர்ச்சியுடன் மனைவி சொல்லியதைக் கேட்ட தும், மணிகண்டனுக்குமே ஒரே ஆனந்தம்! மகிழ்ச்சியில் ஒரு சுற்று, பெருத்தே போனார் எனலாம்!

மாப்பிள்ளை வீட்டார் முன்னிலையில் மகளை அழைத்து ஓர் இருக்கையைக் காட்டி அமரச் சொன்னார்.

திலோ சற்றுத் தயங்கினாள்.

அந்தப் பெரியவர்கள் மனம் எப்படியோ? ஏதாவது காரணத்தால், இந்தத் திருமணம் நின்று விடக் கூடாதே!

நல்லவேளையாக, ரஞ்சனுடைய தாயாரே அவளை அழைத்து உட்காரச் சொல்லவும், திலோத்தமாவின் பிரச்சினை எளிதாகத் தீர்ந்தது!

நம் வீட்டு நாற்காலியில் உட்கார இவ்வளவு யோசிக் கிறோமே என்று, உள்ளூரத் தன்னை நினைத்தே, அவ ளுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது!

இந்தக் கல்யாணத்துக்கு இவ்வளவு ஆசைப்படு கிறாளா?

விரும்பி வந்து மணம் பேசுவதாகத் தந்தை சொன் னாரே! அப்படியானால், அவனுக்கும் இந்த ஆசை இருக்கும் என்றுதானே பொருள்?

ஆவலாகப் பார்த்தால், மணிகண்டன் ஏதோ சொல்ல, ரஞ்சன் அவர் பேச்சில் கவனமாக இருந்தான்.

ஒருவர் பேசுவதைக் கவனிப்பது என்றால், அடுத்தொரு வரைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுதான். ஆனாலும், அவனது 'கண்ணோடு கண் நோக்க' முடியாதது, திலோத் தமைக்குச் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது!

ஆனால், அவளுடைய தகப்பனாரின் பேச்சைத்தானே, கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தான்? அது, வருங்கால மாமனாரிடம் நல்ல பேர் எடுக்கும் முயற்சியாகவே கூட இருக்கலாம்!

இவ்வளவு யோசித்த பிறகே, தந்தை என்ன சொல்கிறார் என்பதை, அவளும் காது கொடுத்துக் கேட்கத் தொடங்கி னாள்.

எல்லாம் அவளது சின்ன வயதுப் புராணம்தான்!

மூன்று வயதில் ஏதோ வம்பு செய்தாள் என்று, அவளை மிரட்டுவதற்காக, இப்படிச் செய்தால் சாமி கண்ணைக் குத்துவார் என்று சொல்லப் போக, ஒரு கணம் யோசித்து விட்டு, "அவனைத்தான் கண்ணாடி போட்டு அடைத்து

வைத்திருக்குதே! அப்புறம் எப்படி அவனால் கையை நீட்டிக் குத்த முடியும்?'' என்று சுவாமி படத்தைக் காட்டிக் கேட்டாளாம்!

இதற்கு என்ன பதில் சொல்வது? அவளுக்குப் புரியும் படியாக எப்படி விளக்குவது?

கடைசியாகப் பெற்றவர்கள்தான், அசடு வழியப் பேச்சை மாற்றினார்களாம்.

பொதுவாக, மூத்தது மோழையாக இருக்க, இரண்டாவது தான் அதிக சூட்டிகையாக இருக்கும் என்பார்கள். ஆனால், அப்போது ஒன்றாக இருந்த பெரிய குடும்பத்தில், நாலைந்து சிறுவர் சிறுமியர்க்கு இடையே பிறந்து, பல ஆண்டுகள் சேர்ந்து வளர்ந்ததாலோ என்னவோ, திலோத் தமையும் படு சுட்டியாக இருந்தாள் என்று, பெற்றவர்கள் இருவருக்கும் ரொம்பப் பெருமை உண்டு.

எனவே இதுபோல, அவ்வப்போது, அப்பா அம்மா பெருமையாக அவிழ்த்து விடுவதுதான்.

ஆனால், இப்போது, இவர்கள் முன்னிலையில், அவளை யும் வைத்துக் கொண்டே மணிகண்டன் சொல்லவும், மகளுக்கு ஒரு மாதிரிக் கூச்சமாகிப் போயிற்று!

கன்னக் கதுப்புகளில் இளம் சிவப்புடன் ''என்னப்பா இதையெல்லாம் போய்ச் சொல்லிக் கொண்டு...'' என்று மென்குரலில் கூறியவாறு ஓரக் கண்ணால், ரஞ்சனைப் பார்த்தாள்.

ஆனால், அவளது பேச்சு, அவன் காதில் விழுந்தது போலவே தெரியவில்லை! அவன் தன் போக்கில் கை விரல் நகங்களைப் பார்த்தவாறு, ''ஆக அப்போதே உங்கள் பெண் ரொம்பக் கெட்டிக்காரிதான் என்று சொல்லுங்கள்'' என்று சிலாகித்துப் பேசினான்.

எல்லோரும் அந்த வார்த்தைகளை ஏற்றுச் சிரிக்கையில், திலோத்தமாவுக்கு மட்டும், அவனது குரலில் ஏதோ உறுத்தியது!

என்னவோ, அவன் மனதாரப் பாராட்டுவது போல, அதை விடவும், எதற்காகவோ மட்டம் தட்டுவது போலவும்... எண்ணம் போன போக்கில், சட்டென்று அதிர்ந்தாள் திலோ.

இப்போது, அவன் எதற்காக அவளை மட்டம் தட்ட வேண்டும்?

அதுவும், அவளை மணம் புரிந்து, எதிர்காலம் முழு மையையும் அவளோடு பகிர்ந்து கொள்ளவென்று, அவ னாகவே விரும்பி வந்துவிட்டு?

பைத்தியக்காரத்தனமான யோசனை! புத்திசாலித் தனமும் அளவோடுதான் இருக்க வேண்டும் போல! இல்லாவிட்டால், கட்டறுந்த கன்று போல, இப்படிக் கண்ட படி யோசனை ஓடும் என்று, இப்போதல்லவா, தெரி கிறது!

தன்னைத்தானே கடிந்துகொண்டு, திலோத்தமா அமைதியடைந்தாள்!

இரவெல்லாம், அவளுக்கு அவனது நினைவாகவே இருந்தது! அவனது முகமும் கண்களும், புன்னகையும், இவ்வளவு தெளிவாகவா நினைவிருக்கும்?

ஒருவேளை, காதல் என்றால் இப்படித்தானோ?

சீக்கிரமே திருமணத்தை நடத்திவிட வேண்டும் என்று பெரியவர்கள் பேசியது நினைவு வந்தது!

அப்படியானால், சீக்கிரமே அவள், இங்கிருந்து ரஞ்சன் வீட்டுக்குப் போய் விடுவாள்!

பிறந்து வளர்ந்த வீட்டை விட்டுப் போவது, அதுவும் பெற்றோரைப் பிரிந்து செல்ல இருப்பது, எதுவும் வருத் தமே தரவில்லையே!

சரியாகச் சொல்லப் போனால், பரபரவென்று உற்சாக மாகத்தான் இருப்பதை உணர்ந்தபோது, கொஞ்சம் நன்றி கெட்டத் தனமாகத் தோன்றி, சற்றுக் குன்றலாகக் கூட இருந்தது!

ஆனால், உடனேயே, கல்யாணம், கல்யாணம் என்று விரட்டியது அவர்களும் தானே? திருமணமானால், பிரிந்து போவாள் என்று தெரியாதா? அது தெரிந்தே திருமணத் துக்கு அவசரப்படுத்தினால், அவர்களுக்கும் அதுவே ஏற்புடையது என்றுதானே அர்த்தம்?

என்னென்னவோ எண்ணி, தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்ட போதும், திலோ மனதில் குற்ற உணர்வு மறைய மறுத்தது!

வர இருக்கும் திருமணம் பற்றிய யோசனையும், பேச்சுமாக அம்மா, அப்பாவுக்கும்கூடத் தூக்கம் வந்திராது தான். அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருப்பார்கள்.

நரேனைக் கல்லூரி விடுதிக்கு அனுப்பிவிட்டு, அன்னையும், தந்தையும், தானும் கூடப் பட்டபாடு நினைவு வந்தது அவளுக்கு. மகளைப் பிரிவது பற்றி, இருவருக்கும் இப்போது யோசனை வந்திருக்குமோ? ஒருவர் கண்ணை ஒருவர் துடைத்துக் கொண்டு...

அதற்கு மேல் படுத்திருக்க முடியாமல், திலோத்தமா எழுந்து விட்டாள்.

ஒருவேளை பெற்றோர் விழித்திருந்து, சற்று வருத்த மாகவும் குரல் கேட்டால், சிறிது நேரம், அவர்களோடு

உட்கார்ந்து பேசி, அவர்களை உற்சாகப்படுத்திவிட்டு வர வேண்டும் என்று தோன்ற, பெற்றோரின் அறையை நோக்கிச் சென்றாள், மகள்.

அவள் எண்ணியது போலப் பேச்சுக் குரல் கேட்கத்தான் செய்தது! ஆனால், வருத்தம் தெரியவில்லை! தாயின் குரலில் மிகுந்த உற்சாகம்தான்!

''மண்டபத்தில் பூவால் பெயர் எழுதி முடிக்கும் முன் பூக்காரர் திணறப் போகிறார், பாருங்கள்! திலோத்தமா, சித்தரஞ்சன் என்று இருவர் பேர்களுமே, போர்டு நிரம்பி விடும். இடையில் வேறே பூ வேலை செய்ய இடம் இருக்காது! என்னவோ, இதயங்கள் மாதிரி, இரு கைகளை இணைகிற மாதிரி எல்லாம் பூக்களாலேயே செய்வேன் அது, இது என்று, புண்ணியா திருமணத்தின்போது, பெரிதாக அளந்தாரே! இங்கே முழி பிதுங்கி விடும். அதைவிட, மஞ்சள் நிறத்து செண்டுப் பூ பின்னணியில், இவர்கள் இருவர் பெயர்களையும், வாடாமல்லிப் பூக்களை நெருக்கமாக ஒட்டி எழுத்துக்களை அமைத்தால் பிரமாத மாக இருக்கும்!'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்!

தந்தையும் கூடச் சேர்ந்து ''நல்ல ஐடியா, திரு! பார்க்க ரொம்பவும் பளிச்சென்று இருக்கும்! அத்தோடு, அலங்கார வேலை எல்லாம் இல்லாமல், திலோத்தமா, சித்தரஞ்சன் என்று இரண்டு பெயர்கள்தானே என்று, கொடுக்கிற காசில் கொஞ்சம் குறைக்கவும் செய்யலாம்!'' என்றார் சந்தோஷ மாக.

ஆனந்தமாகத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். செய்யட்டும். இதில் குறுக்கிட வேண்டாம் என்று தன் அறையை நோக்கித் திரும்பினாள் திலோத்தமா.

திலோத்தமா, சித்தரஞ்சன் என்று சொல்லிப் பார்த்த படியே நடந்தாள்.

சித்தரஞ்சன் என்றால் நன்றாகத்தான் இருக்கிறது! ஆனால், அவளுக்கு மட்டும் அவன் என்றும் ரஞ்சன்தான் என்று எண்ணியவள் 'ரஞ்சன் ரஞ்சன்' என்று உள்ளூர உருப்போட்டபடியே, அறையை அடைந்தாள்!

ஆனாலும், அவளைப் பார்த்து, தனியே ஒரு தரம் முறுவலித்திருக்கலாம்! பெரியவர்கள் யாரும், அதைத் தப்பாகவே நினைத்திருக்க மாட்டார்கள்! அதுவும், இரு வருமே பிடித்திருப்பதாகக் கூறிய பிறகும் எதற்கு அந்த அறியாப் பிள்ளை வேஷம்?

தன்னைப் பார்த்து, சங்கேதமான, சிறு குறிப்பாக, ஒரு பார்வைகூட இல்லாமல் போனானே என்று திலோத்தமைக்கு இருந்த குறை, மறுநாள் அவன் நேரிலேயே வந்து, உயரமும் கம்பீரமுமாக நின்றபோது, மாயமாய் மறைந்தது!

கண் குளிரப் பார்த்துக் கொண்டு அவள் நின்றபோது ''வாருங்கள் வாருங்கள்!'' என்று பரபரத்தாள் செந்திரு.

வருங்கால மருமகன் ஆயிற்றே! இரண்டு கண்களில் ஒன்றான மகளோடு காலமெல்லாம் மனமொத்து வாழ வேண்டியவன். அந்தக் கண் நலமாக இருக்க வேண்டு மானால், அந்தக் கண்ணோடு நல்லுறவு நிலைக்க வேண்டுமானால், இவன் மனதில் சிறு உறுத்தல்கூட இல்லாது காப்பது அவசியம்!

''உட்காருங்கள்! திலோ, அவருக்குக் குஷனை வசதி யாக எடுத்து வை'' என்று உபசரித்துவிட்டு, ''என்ன சாப் பிடுகிறீர்கள்? காபி மாதிரி சூடாகவா அல்லது குளிர்ச்சியாக பழச்சாறு கொண்டு வரவா?'' என்று கேட்டாள்.

வெண்ணிறப் பல்வரிசை தெரிய முறுவலித்து, ''எதுவுமே, இப்போது தேவை இல்லை. ஆனால் எதையாவது கொடுத்தால்தான் உங்களுக்கு நிம்மதியாக இருக்கும் என்றால், தயாராக இருப்பது எதுவோ, அதைக் கொடுங்கள். ஆனால், அதற்கு முன் ஒரு விஷயம்! நான் வந்த விஷயம் பற்றி, அம்மா உங்களிடம் பேச வேண்டும் என்று சொன்னார்கள்!'' என்று செல்லை எடுத்துப் பட்டன்களைத் தட்டியவாறு கூறினான்.

அழகான புன்னகைதான். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதது! அவளைப் பொறுத்தவரையில், தலை சுற்ற வைப்பதும் கூட! ஆனால், அதை அவள் பக்கமும் சிந்தலாம் அல்லவா?

மாமியாரைக் கைக்குள் போடுவதிலேயே முனைப்பாக இருக்கிறானே! மாப்பிள்ளை உபசாரம் ஒரு போதும் குறைந்துவிடக் கூடாது என்றா? போகட்டும். எப்படிப்பட்ட அருமையான மாமியார் கிடைத்திருக்கிறாள் என்று, போகப் போகத்தானே, இவனுக்குப் புரியும்?

எப்படிப்பட்ட மாமியார், மாமனார், மைத்துனன்! கூடவே எப்படிப்பட்ட மனைவி! எல்லாமே சீக்கிரமே தெரிந்து கொள்வான்!

இப்போதுதான் என்ன? அவளைப் பார்க்கத்தானே, ஓடி வந்திருக்கிறான்? பிறகு பாராதது போல என்ன நடிப்பு?

பெருமிதமாகப் பார்த்தபடி அவள் நிற்க, செந்திரு, சித்தரஞ்சனின் செல்லை வாங்கிப் பேசினாள்.

''நான் செந்திரு பேசுகிறேன் அ... அண்ணி!''

மாமியாரின் முக பாவனையில் சித்தரஞ்சன் கவனமாக இருப்பதைக் கண்டு, திலோத்தமாவும் தாயைப் பார்த்தாள்.

ஸ்பீக்கரை ஆன் செய்து கொடுத்தான் போலும், எதிர்ப்புறம் பேசியதும் தெளிவாகவே கேட்டது.

''பாருங்கள் அண்ணி. என் பையனைப் பற்றி நன்றாக விசாரித்திருப்பீர்கள். எல்லோரும் சொல்வது போல, அவன் மிக நல்ல பையன்தான். அவனுக்கு, திலோத்தமாவை வெளியே கூட்டிப் போக வேண்டுமாம். அவனை நம்பி அனுப்புவீர்களா என்று திரைந்து கொண்டு வந்தான். அதுதான் நானே பேசுகிறேன் என்றேன். தைரியமாக அனுப்புங்கள், அண்ணி கூட்டிப் போனது போலவே, பத்திரமாகத் திருப்பிக் கொணர்ந்து விட்டு விடுவான். சரிதானா? வைத்து விடட்டுமா?'' என்று முடித்தாள், சித்தரஞ்சனைப் பெற்றவள்.

செந்திருவின் முகத்தில் சற்றுத் திகைப்பு தெரிந்தது!

திருமணத்துக்கு முன், மாப்பிள்ளை பையனோடு அனுப்புவதா? ஊர், உறவில் பார்த்தால், தப்பாக நினைப் பார்களோ? படித்து வேலை பார்க்கிற பெண். வேண்டாம் என்று மறுத்தால், கட்டுப் பெட்டித்தனமாக இருக்குமோ? அதைவிடவும், சும்மா பேருக்கு வேஷம் போடுவதாகத் தோன்றினால்?

இந்த நேரத்தில் கணவர் இருந்திருந்தால், முடிவு சொல்ல வேண்டிய பொறுப்பு அவளுக்கு இல்லாமல் போயிருக்கும்!

குழப்பத்துடன் செல்லை உரியவனிடம் நீட்டினாள் செந்திரு.

பெரியவளின் குழப்பத்தைச் சரியாக ஊகித்து, ''மாமா ஒத்துக் கொள்வாரா என்று இருக்கிறதா, அத்தை? வேண்டுமானால், அவருக்கே போன் பண்ணிக் கேட்டு

விடுங்களேன்!'' என்று மறுபடியும், செல்லை அவளிடமே நீட்டினான் சித்தரஞ்சன்.

அவனது ஊகம் சரிதான். தாயின் குழப்பம் பற்றி மட்டுமல்ல. இந்த 'அத்தை' 'மாமா'வுக்குப் பிறகு, அவளைப் பெற்றவள் என்ன சொல்லக் கூடும் என்பதிலும்தான்.

''இல்லை, இல்லை! நீங்கள் திலோவைக் கூட்டிப் போங்கள். கொ... கொஞ்சம் சீக்கிரமாகத் திரும்பி வந்து விடுங்கள். வந்து, இங்கே வீட்டிலேயே சாப்பிட்டு விட்டுப் போகலாம்'' என்று அவர்கள் திரும்பி வரும் நேரத்தைத் துரிதப்படுத்த முயன்றாள் செந்திரு.

''உணவு பற்றி நீங்கள் சிரமப்படுத்திக் கொள்ள வேண்டாம், அத்தை. எனக்கு ஒரு தொழில் ரீதியான 'டின்னர்' ஏழு மணிக்கு இருக்கிறது. அதற்குள் திலோத்தமாவை இங்கு கூட்டி வந்து விட்டுவிட்டு, வீட்டுக்குப் போய், நான் தயாராகிப் போக வேண்டும். அதனால், சீக்கிரமே வந்து விடுவோம், கவலைப்படாதீர்கள்'' என்று கூறி, வருங்கால மாமியாரின் மனதை அமைதிப்படுத்தினான் மருமகன்.

திலோத்தமா தன்னையே குனிந்து பார்வையிடுகையில் ''இந்த உடையே நன்றாகத்தான் இருக்கிறது'' என்றான் சித்தரஞ்சன்.

அதன் பிறகு சற்றும் தயங்காமல், சந்தோஷமாக தாயைப் பார்த்துச் சிரித்துவிட்டுக் கைப்பையை எடுத்துக் கொண்டு, திலோத்தமாவும் கிளம்பி விட்டாள்.

அதற்குப் பிறகே நினைவு வர ''அவர் ஒன்றும் சாப்பிடவில்லையே...'' என்று, செந்திரு காற்றைப் பார்த்துதான் சொல்லி முடித்தாள்.

திலோத்தமா எதிர்பார்த்ததுபோல, சித்தரஞ்சன் அவளை அழைத்துச் சென்ற இடம் நகைக்கடைதான்.

புராதனப் பெருமையை நீர்க்க விடாமல், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இன்றளவும் காப்பாற்றிக் கொண்டிருக்கும், தரமான நகைகளுக்குப் பெயர் பெற்ற கடை, தரமான வைரங்கள், அவர்களது தனிப் பெருமை! விலையும் அதற்குச் சரியாக, அதிகமாகவே இருக்கும் என்று, திலோத்தமா கேள்விப்பட்டிருக்கிறாள்.

அதனாலேயே, செந்திருவும் அவளும் அந்தக் கடையைத் தவிர்த்திருக்கிறார்கள். கட்டுப்படியாகாது என்று.

இப்போதும், அங்கே செல்ல அவளுக்குத் தயக்க மாகவே இருக்க, இறங்க முயற்சி செய்யாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்!

கேள்வியாக நோக்கியவனிடம் அவள் காரணத்தைச் சொல்ல "பரவாயில்லை, வா. இங்கே உள்ள தரத்துக்குச் சற்று அதிகம் கொடுப்பதில் தப்பு இல்லை என்று அம்மா சொல்லுவார்கள். என்னைக் கேட்டால், பிடித்துப் போனால், தரம் இல்லாதது என்று தெரிந்தாலும், என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்பதுதான்" என்றான், சித்தரஞ்சன்.

வியப்புடன் நோக்கி, "அதெப்படி ரஞ்சன்? என்னதான் பிடித்திருந்தாலும், தரம் குறைவானது என்று தெரிந்த பிறகும், அதிக விலை கொடுப்பது, அசட்டுத்தனம் ஆகாதா?" என்று கேட்டாள் திலோத்தமா.

"என்ன செய்வது?" என்று தோளை குலுக்கினான் சித்தரஞ்சன். தொடர்ந்து "ஒரு பொருளின் முக்கியத்துவம்,

அந்தப் பொருளின் தரத்தில் மட்டும் இருப்பதில்லையே! ஒன்று எவ்வளவு உயர்ந்த ரகமாக இருந்தாலும், பிடிக்காத பொருளாக இருந்தால், அதை நாம் வாங்குவது இல்லை! அதே பொருள் பிடித்துப் போய் விட்டால், சரி, ஏதோ தொண்ணூறு சதவீதம் இருந்தாலும் பரவாயில்லை என்று வாங்கத்தானே, செய்வோம்? எத்தனை தினுசு உயர்வகை ஐஸ்க்ரீம் தினுசுகள் வந்து விட்டபோதும், இன்னமும் வெறும் குச்சி ஐசை விரும்பி வாங்கி ரசித்து உண்பவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான் சித்த ரஞ்சன்.

யோசித்துப் பார்த்தாள் அவள்.

அவள் யோசிக்கும்போதே, ''நிறமும், டிசைனும் பிடித்து விட்டால், கொஞ்சம் மட்டமான துணியையும் வாங்குவது இல்லையா?'' என்று மீண்டும் வினவினான் அவன்.

என்னவோ பெரிய விஷயத்தைக் காரிய காரணங் களோடு வாதாடி நிலை நிறுத்துவது போல! கனம் கோர்ட் டார் அவர்களே என்று தொடங்கச் சொல்லவில்லை! அவ்வளவுதான்! அந்த அளவுக்குத் தீவிரமான வாதம்!

ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தவளுக்கு மனதில் வேறு ஓடியது.

சித்தரஞ்சனது கட்டுமானத் தொழில். இதில், சற்றுத் தரம் தாழ்ந்த பொருள் எதையோ அவசரத் தேவைக்கு வாங்கிவிட்டு அதை நியாயப்படுத்துவதற்காகச் சப்பைக் கட்டு கட்டுகிறானோ?

தந்தையிடம் வாங்கிக் கட்டிவிட்டு, அதே விவாதங் களை, இப்போது அவளிடமும் தொடர்கிறான் போலும்!

ஆனால், கட்டிடத் தொழிலில் தரக்குறைவு மிகவும் ஆபத்தில் கொண்டு போய் விடக் கூடும் என்பார்களே! தொழிலில் இவனுக்கு இருக்கும் நல்ல பெயர் கெட்டு விடக் கூடாதே என்றிருந்தது, அவளுக்கு. இதை மெல்லச் சொல்ல வேண்டும்!

ஆனால் தந்தையிடம் ரஞ்சன் திட்டு வாங்கியிருப் பானோ என்ற எண்ணமே வேதனையைத் தர, தலை யசைத்து ''ஒருவேளை, நீங்கள் சொல்வது போலவும் இருக்கலாம்! விடுங்கள். இப்போது விலையைப் பற்றிப் பொருட்படுத்தாமல், இங்கேயே வாங்கலாம் என்பது உங்கள் எண்ணம். சரி வாருங்கள், போவோம்!'' என்று காரை விட்டு இறங்கினாள் திலோத்தமா.

''அது மட்டுமல்ல...'' என்று ஏதோ சொல்லத் தொடங் கிய சித்தரஞ்சன் அதற்கு மேல் எதுவும் சொல்லாமல், பேச்சை நிறுத்திவிட்டுத் தானும் இறங்கி, கார்க் கதவுகளை ரிமோட் மூலம் பூட்ட், இருவரும் சேர்ந்து, கடையை நோக்கிச் சென்றனர்.

அவன் எதைச் சொல்லத் தொடங்கிவிட்டு நிறுத்தினான்?

அது என்னவென்று அவனிடம் கேட்கும் ஆவலைத் திலோ கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். என்னவோ, அவன் சொல்ல வந்தது, அவளுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியது அல்ல என்று, அவளுக்கு வெகு நிச்சயமாகத் தோன்றியது.

யோசித்து, அவனே நிறுத்திவிட்ட பிறகு, அதைப் போய்க் குடைவானேன்? அதைவிட....

அதற்குள் உரிமையாளரே முன் வந்து வரவேற்கவும், அதுபற்றி அவளால், மேலே யோசிக்க முடியாமல் போயிற்று.

அந்த உற்சாக வரவேற்பாலும், அதைத் தொடர்ந்து நடந்த பல நிகழ்ச்சிகளாலும்!



சித்தரஞ்சனுடைய தாயார், மகன், மகனுடைய வருங்கால மனைவியின் வரவு பற்றி, நகைக்கடை உரிமையாளருக்கு போன் பண்ணிச் சொல்லியிருந்தாள்.

எனவே அறிமுகங்கள் முடிந்ததும் ''அம்மா சொன்னார் கள் சார். சில அருமையான செட்டுகள் எடுத்து வைத் திருக்கிறேன். உள்ளே, நம் அறைக்கு வந்து பாருங்கள். வாருங்கள்!'' என்று கடையின் பின்புறமாக, இருந்த அவரது தனியிடத்தைச் சைகையால் காட்டி அழைத்தார், கடைக்காரர்.

கடை உரிமையாளரே வந்து வரவேற்ற விதமும், அவரது 'அருமையான செட்களும்' திலோத்தமாவுக்குக் கொஞ்சம் சங்கடமான உணர்வை அளித்தது.

அவர்கள் இருவர் வீட்டிலும், ஒப்புதல்தான். இவர்கள் இருவரைப் பற்றியோ, கேட்கவே வேண்டாம்!

ஆனாலும், ரொம்பப் பெரிய அளவில் அவனிடம் பரிசு பெறுவதற்கு, அவளுக்கு ஒரு மாதிரி தயக்கமாக இருந்தது!

எனவே, கடைக்காரரின் அழைப்பை ஏற்றுத் திரும்பிய வனின் சட்டையை லேசாகப் பற்றி நிறுத்தி, ''இங்கே,

வெளியேயே, அழகாக நிறைய இருக்கிறதே! மு... முதலில் இதிலேயே பார்ப்போமே!'' என்று கூறினாள்.

''இதெல்லாம் என்னம்மா, சாதாரண நகைகள்! பானுமதி அம்மா மருமகளுக்கு ஏற்றதாகப் பார்க்க வேணும் என் றால்...''

''இல்லை, அதை அப்புறமாக அ... அத்தையோடு வந்தே பார்த்துக் கொள்கிறேன். இப்போது இதையே பார்க்கிறேன்'' என்று முடித்துவிட்டு, அருகில் இருந்த 'கவுண்டரில்' உள்ளவற்றை ஆராயலானாள் திலோ.

கேட்பதை எடுத்துக் காட்டுமாறு, கடைச் சிப்பந்தி களைக் கடைக்காரர் விரட்டிக் கொண்டிருக்கையில் ''பணத்தைப் பற்றி யோசிக்கத் தேவையில்லை, தெரியு மல்லவா?'' என்று அவளது காதோரமாய் குனிந்து கிசுகிசுத் தான் சித்தரஞ்சன்.

பணத்தைப் பற்றி யோசிக்காமல்தான், ஊர் ஊராக அலைந்து தொழிலை வளர்த்துக் கொண்டிருக்கிறா னாக்கும்? சம்பாதித்தது போதும் என்று, சும்மா வீட்டில் இருக்கவில்லையே!

ஆனால், அவனோடு மீண்டும் ஒரு வாக்குவாதத்தைத் தொடங்க மனமற்று ''இங்கே இருப்பவைகளை எனக்குப் பிடித்திருக்கும்போது, வேறு எதற்கு?'' என்றதோடு நிறுத்திக் கொண்டாள் திலோ.

திலோத்தமா பொதுவாகக் கையில் இருக்கும் பணத் துக்குச் சரியாகப் பெரிய, விலை உயர்ந்த நகையாகப் பார்த்து வாங்குவதைவிடத் தனக்கு மிகவும் பொருத்தமாக இருப் பதையே தேர்ந்தெடுப்பது வழக்கம்.

நகை வாங்கக் கொண்டு வந்த பணத்தில் மீதி இருந்தால், அதைத் தங்கக் காசாகவோ, அல்லது வெள்ளிச் சாமான்களாகவோ, செந்திரு வாங்கி விடுவாள்.

பணமாகத் திருப்பிக் கொண்டு போனால், விருதாவாகச் செலவாகி விடுமாம். அதைவிட, எந்த நேரமும் பண மாக்கக் கூடிய பொருளாக இருந்தால் சமயத்துக்கு உதவும் என்பாள்.

ஆனால் வேலைக்குச் செல்லும்போதோ, நட்பு வட்டாரத்தில் ஏதாவது விழாவுக்குச் செல்லும்போதோ அணியக்கூடியதாக அவள் வழக்கமாக வாங்கும் நகை களை இப்போது தேர்ந்தெடுக்க முடியாது என்பது, சித்த ரஞ்சனின் குறுகுறு பார்வையில், அவளுக்கு உடனே புரிந்தது!

ஓரளவு சின்னதாக இருந்தாலே, பேராசைக்காரி இல்லை என்று காட்டுவதற்காக அதிகப்படியாக நடிப்பது போலாகி விடக் கூடும்!

அது மட்டுமின்றி, தகுதிக்கு ஏற்ப நடக்கத் தெரியாத முட்டாளாகவும் தோன்றலாம்.

எந்த வகையிலும், ரஞ்சன் அவளை மட்டமாக எண் ணும்படி, விட்டு விடக்கூடாது! ஏனெனில், அவளைப் பற்றி முழுசாக அவனுக்கு என்ன தெரியும்?

எனவே, சற்று யோசித்துவிட்டு, சற்றுப் பெரியதாக ஒரு பதக்கத்தையும், பொருத்தமான காதணிகளையும் திலோத்தமா தேர்ந்தெடுத்தாள்.

'பெரிய செட்' நகைகளைப் பார்க்கவே வரவில்லை என்றதும் முகம் இறுக நின்ற கடை உரிமையாளரின் முகம்

இன்னமும் பெரிதாக மலர்ந்து விடவில்லைதான். ஆனால், இயல்புக்குத் திரும்பி வந்தது! அந்த அளவுக்கு பட்டுச் சேலைகளோடும் அணியக் கூடியதாக, அதே சமயம் மிகவும் பெரியதாக இல்லாமலும் பார்த்து, யோசித்துச் செய்த அவளது தேர்வு சரியானதுதான் என்று நிம்மதி யோடு உணர்ந்தாள் அவள்.

ஒன்றும் சொல்லாமல், பில்லுக்கு பணம் கொடுக்கத் தயாரானான் சித்தரஞ்சன்.

''ஒரு நிமிஷம்!'' என்று கழுத்தில் பதக்கத்தை வைத்து, அவனிடம் காட்டினாள் அவள் ''நன்றாக இருக் கிறதா?''

ஒரு வினாடி, ரஞ்சனின் கண்களில் தோன்றிய ஒளி, அவளுக்கு உரிய பதிலைத் தந்துவிட, கடைச் சிப்பந்தி யிடம் ''பில் போடுங்கள்!'' என்றாள் கம்பீரமாக!

பணத்தைக் கொடுத்துவிட்டு, பதக்கத்துக்கு ஏற்ற தான ஒரு தங்கச் சங்கிலியில் அதைக் கோர்த்து வைக் கும்படியும், மறுநாள் வந்து, எல்லாவற்றையும் சேர்த்து வாங்கிப் போவதாகவும் சொல்லி, இருவரும் கிளம்பி னார்கள்.

இதுவா, அதுவா என்று தாயமாடித் தாமதம் ஆக்காத தால், வந்த வேலை சீக்கிரமே முடிந்து விட்டது. அவளை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு, சித்தரஞ்சன் வெகு நிதானமாகவே கிளம்ப முடியும்!

சாலைப் போக்குவரத்தினுள் நுழைந்து காரைச் செலுத் தத் தொடங்கியதும், ''ரொம்ப தாங்க்ஸ்!'' என்றான் சித்த ரஞ்சன்.

வாங்கிக் கொடுத்தது அவன்! நன்றி, அவளல்லவா சொல்ல வேண்டும்? கடைசியில் இருந்து வெளியே வரும்போதே அதை, அவள் சொல்லியும் ஆயிற்று!

அவளது பார்வையில் கேள்வியை உணர்ந்து "இவ் வளவு விரைவாகத் தேர்வு செய்ததற்காக! என் நண்பன் ஒருவன் சொல்லுவான்... அவனுடைய மனைவியை நகை, துணிக் கடைகளுக்குக் கூட்டிப் போவதானால், கையோடு ஒரு புதுப் புத்தகத்தையும் எடுத்துப் போவானாம். அனேக மாக, அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்து விடுவேன் என்பான்! நல்லவேளை! அப்படிப் புத்தகம் படிக்கும் தேவை எனக்கு இராது என்று தெரிகிறது!" என்று புன்னகையோடு கூறினான் சித்தரஞ்சன்.

பாராட்டுகிறானாம்! ஆனால், இதை நேரடியாகவே சொல்லலாமே! யாரோ ஒரு பெண்ணை எதற்காக மட்டம் தட்டுவது?

லேசாகச் சிரித்து, "பரவாயில்லை. தலையைச் சுற்றி, மூக்கைத் தொட்டு விட்டீர்கள். பாராட்டுக்காக, இன்னொரு நன்றி. ஆனால், உங்கள் நண்பர், அவருக்காக 'ஷாப்பிங்' செய்யும்போது, அவருடைய மனைவி, என்னென்ன வேலை களைச் செய்து முடிப்பாளோ? அது விவரம் தெரிய வில்லையே!" என்றுரைத்து, ஓரக் கண்ணால் கணவனைப் பார்த்தாள் திலோ.

நண்பனைச் சொன்னதற்காகக் கோபப்படுவானோ என்று எண்ணியதற்கு மாறாக, அவனது உதட்டோரம் சிரிப்பில்தான் துடித்தது!

"அது பற்றிய எந்த விவரமும் இப்போதைக்குத் தெரிய வில்லைதான். ஆனால், சீக்கிரமே நீ நேரிலேயே அதை

அறிந்து கொள்வாய்தானே?'' என்று சிரிப்புக் குரலிலேயே ரஞ்சன் கூற, அவனது வார்த்தைகள் தோற்றுவித்த கற்பனைக் காட்சிகளில், திலோத்தமா உள்ளம் குளிர்ந்து போனாள்.

நேரிலேயே அறிந்து கொள்வது என்றால், திருமணமான பிறகு என்று தானே, அர்த்தம்? அதாவது, மணமாகி, அவனுடைய நட்பு வட்டாரத்துடன் அவள் நன்றாகப் பழகும்போது!

மணமான குடும்பஸ்தனான சினேகிதன்! இப்படி எத்தனை பேர் உண்டு?

''உங்கள் நண்பர்களில், திருமணமானவர்கள் நிறையப் பேரா? மணமாகாதவர்கள் அதிகமா?'' என்று விசாரித்தாள் அவள்.

முன்னே சற்று மெதுவாகச் சென்ற காரை ஒதுக்கி, அதைத் தாண்டிச் செல்ல முயன்று கொண்டிருந்தான் சித்தரஞ்சன்.

''பரவாயில்லை, சொன்ன நேரத்துக்கு முன்னதாகவே திருப்பிக் கூட்டி வந்து விட்டீர்கள் என்று அம்மா சந்தோஷப்படப் போகிறார்கள்!'' என்று அவன், சற்று வேகம் எடுத்து ஓட்டி, முதல் காரை முந்தியதும் சொன்னாள் அவள்.

''இல்லை. நாம் இன்னோர் இடத்துக்கும் போக வேண்டும்'' என்றான் அவன்.

சற்று மரத்த குரலில் அவன் சொன்ன விதத்தில், எங்கே என்று திலோத்தமாவால் இயல்பாகக் கேட்க முடியாது போயிற்று!

ஆனால், அப்படி எங்கே கூட்டிப் போய் விடப் போகிறான்? நகைக் கடைக்கு அடுத்து, துணிக்கடையாக இருக்கும்! அவ்வளவுதானே?

இதற்கு, எதற்கு இந்த குரல்? நேரமாகி விடும், வேண்டாம் என்று மறுப்பாள் என்று கருதினானா?

அப்படி மறுப்பவள், எந்தக் கேள்வியும் இல்லாமல், திடுமெனப் பார்த்தவுடனேயே மணக்கச் சம்மதிப்பாளா என்று யோசிக்க வேண்டாமா?

அதெல்லாம் இராது. காரை ஓட்டுவதில் கவனமாக இருக்கிறான் அவ்வளவே!

சித்தரஞ்சனின் அருகாமையே சுகமும் இதமுமாக இருக்க, சந்தோஷமாக இருக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தவள், அவன் காரை நிறுத்திய இடத்தைக் கண்டதும் திகைத்துப் போனாள்.

இங்கே எதற்கு என்று புரிந்து கொள்ள முடியாமல் சில வினாடி திணறியவளின் முகம் சட்டென கன்றிச் சிவந்தது!

என்ன கீழ்த்தரமான புத்தி!

அவளை என்னவென்று நினைத்துக் கொண்டான், இந்த ரஞ்சன்?

இப்படியெல்லாம் சந்தேகிப்பவன், எப்படி மணந்து கொள்ள முன் வந்தான்?

தீ விழிகளில் கனல் பறக்க, அவனை முறைத்துப் பார்த்து, இந்தக் கேள்விகளை அடுக்க அவள் வாயைத் திறக்கையில், அவன் கை உயர்த்தி அவளை அடக்கிப் பேசினான்.

''அவசரப்பட்டு எந்த வார்த்தைகளையும் கொட்டிவிட வேண்டாம், திலோத்தமா, நீ நினைப்பது போன்ற எந்தக்

காரணத்துக்காகவும், நான் உன்னை இங்கே அழைத்து வரவில்லை'' என்றான் அவளை முந்திக் கொண்டு.

பின்னே?

பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்த 'தாய் சேய் நல மருத்துவமனை' என்ற பெயரை, மறுபடி ஒரு தரம் குறிப்பாகப் பார்த்துவிட்டு, அவனை மீண்டும் நேராக நோக்கினாள் திலோத்தமா.

''சரியான விவரம் தெரியாமல் முடிவெடுப்பதும், அதன் அடிப்படையில் பேசுவதும் சரியல்ல, திலோத்தமா. அது பழகிவிடவும் கூடாது. முதலில் இதைத் தெரிந்து கொள். நாம் இங்கே வந்திருப்பது, உன் கன்னிமையைப் பரி சோதிப்பதற்காக அல்ல! உன் நடத்தையில் சந்தேகப்படும் சின்ன புத்தி எனக்குக் கிடையாது!'' என்றான் அவன். ''அப்படி நான் சந்தேகப்பட்டு, நிரூபணத்துக்காக, உன்னை இங்கே அழைத்து வரக் கூடும் என்று நீ நினைத்தாய் என்றால், அது உன்னை உயர்த்திக் காட்டுவது அல்ல!'' என்று கண்டனக் குரலில் முடித்தான்.

அந்தக் குரல் சுட, ''நேற்று நம் திருமணம் பேச்சளவில் உறுதி செய்யப்பட்டது. இன்று, இந்த மகப்பேறு மருத்துவ மனைக்கு அழைத்து வந்திருக்கிறீர்கள்! நான் என்ன வென்று நினைப்பது?'' என்று தன்னை நியாயப்படுத்திக் கொள்ள திலோத்தமை முயன்றாள்.

''எத்தனையோ நினைக்கலாம். ஆனால், எதுவானாலும் கேட்டால் தெரிந்து விட்டுப் போகும் தானே?'' என்றான் அவன் அமர்த்தலாக.

தான் எண்ணியது போல இல்லை என்று ஆனதுமே, தப்பு செய்த உணர்வில் உள்ளம் கன்றிப் போய்விட,

''இப்போது கேட்கிறேன். சொல்லுங்கள்'' என்றாள் அவள் கம்மிய குரலில்.

சுட்டு விரலால் 'ஸ்டியரிங் வீலின்' வடிவை அளந்தபடி, சில வினாடிகள் சித்தரஞ்சன் பேசாதிருந்தான்.

அவன் சொல்ல வந்த விஷயமும், அப்படி ஒன்றும் இலகுவானதாகத் தெரியவில்லையே!

ஆனால், அவசரப்பட்டு எதையும் சொல்லி மாட்டிக் கொள்ள மனமின்றி, திலோ பொறுமையாகக் காத்திருந்தாள்.

லேசாகத் தலையைத் திருப்பி ''பொதுவாக பெண்களின் இயல்பு இது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால்... நமக்குத் திருமணம் என்று உறுதியானதும், அடுத்தபடியாக குழந்தைகள் பற்றிய கற்பனையில் நீ ஆழ்ந்து விடவில்லையே?'' என்று வினவினான் அவன்.

குழந்தையா? அதிலும் பன்மையிலா?

குழந்தைகள் பற்றி நினைக்க, அவளுக்கு நேரம் எங்கே இருந்தது?

மறுப்பாகத் தலையசைத்துவிட்டு ''எத்தனையோ காலமாகக் காத்துக் கிடந்தது, நடக்கப் போகிறது என்று, அது தவிர, வேறு எதுவுமே பெரிதாக மனதில் பதியவில்லை. ஏனென்றால்...'' என்று அவளது பேச்சில், அவசரமாகக் குறுக்கிட்டான், சித்தரஞ்சன்.

''டாக்டரிடம் நான் முன் பதிவு செய்திருந்த நேரம் நெருங்கி விட்டது. அவர்களைச் சந்திக்கச் செல்லு முன், நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். என்னைப் பொறுத்த வரையில், நமக்குக் குழந்தைகள் இப்போது வேண்டாம் என்பது, என் முடிவு. காலப் போக்கில், அது பற்றி யோசித்துக் கொள்ளலாம். இப்போதைக்கு

வேண்டாம் என்பதை, ஒழுங்கான மருத்துவ ஆலோசனை யுடன் நடத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அது பற்றி மருத்துவரிடம் கேட்கத்தான். இப்போது, இங்கே வந்திருக்கிறோம். என் கருத்து, உனக்கு ஒப்புதல் என்றால், டாக்டரைப் பார்ப்போம். இல்லை என்றால், இந்தத் திருமணம் பற்றியே, நான் யோசிக்க வேண்டியிருக்கும்!'' என்று கடைசி வாக்கியத்தில் ஒரு குண்டையும் தூக்கிப் போட்டான்.

திகைத்துப் போனாள் திலோத்தமை!

பிள்ளை என்று, அவளும் பெரிதாகக் கற்பனை செய்து விடவில்லைதான்!

ஆனால், குழந்தை வேண்டும் என்று அவள் சொன் னால், திருமணத்தையே நிறுத்துவேன் என்கிறானே!

அப்படி நிறுத்தி விடுவானா? அல்லது, சும்மா மிரட்டிப் பார்க்கிறானா?

நேராய் வெறித்த அவனது பக்கவாட்டுத் தோற்றத்தில் செதுக்கிய சிலையின் கடினம் தவிர, இளக்கம் சிறிதும் இல்லை!

''ஆனால் ரஞ்சன்...'' என்று திலோ ஏதோ சொல்ல முயன்றபோது, மறுபடியும் அவன் குறுக்கிட்டான்.

''ப்ளீஸ்... ப்ளீஸ் திலோ! தயவு பண்ணி வாதப் பிரதி வாதங்கள் எதுவும் வேண்டாம். நான் மிகவும் யோசித்து தான் இந்த முடிவை எடுத்தேன். நீ உட்பட யார், என்ன சொன்னாலும், இந்த முடிவை நான் மாற்றிக் கொள்ளப் போவதாக இல்லை! அதனால், அனாவசியமாக முயற்சிக்க வேண்டாம்'' என்று அழுத்தமான குரலில் அவன் அறிவித் தான்.

அவன் உண்மையாகவே, இதில்... குழந்தை இப்போது வேண்டாம் என்பதில் உறுதியாகத்தான் இருக்கிறான்!

அதற்காக, என்ன விலை கொடுக்கவும், அவன் தயார்!

ஆனால், அவள் எப்படி?

அவளுக்குக் குழந்தை முக்கியமா? அவனா? அதாவது, அவன் மட்டுமேயா?

முகம் தெரியாத இளம் பிஞ்சுக் குழந்தை ஒன்றைப் பற்றி, திலோத்தமா அவ்வளவாக யோசித்துப் பார்த்தது இல்லை! ஊர் உலகம் போல, என்றைக்கோ, நமக்கும் ஒரு குழந்தை பிறக்கும் என்கிற வரையும்தான்.

மற்றபடி, அது யாரைப் போல இருக்கும், எப்படிச் சிரிக்கும், எப்படி அழும் என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்க, அவளுக்கு அவகாசமும் இருந்தது இல்லை!

இப்போது, முகமறியாத அந்தக் குழந்தைக்காக, இதோ அருகில் வலிவும் வனப்புமாக உட்கார்ந்திருக்கும் இவனை விட்டுக் கொடுப்பதா?

ஆனால், இவனைப் போல ஒரு பிள்ளை பிறந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்கும் போதே, அவளது உடலில் ஒரு பரவசம் பரவி, அவளைச் சிலிர்க்க வைத்தது!

இதை எப்படித் துறப்பது என்று யோசிக்கும்போதே, அவளது எண்ணப் போக்கில் இருந்த ஒரு முரண்பாடு அவளுக்குப் புரிந்தது.

இவனே இல்லாமல், அப்படியொரு பிள்ளை எங்கிருந்து கிடைக்கும்?

திலோத்தமா உடனே முடிவு செய்து விட்டாள்.

ஆனாலும், அவனது காலில் விழுவது போல ஒத்துக் கொள்ள மனமின்றி, ''நமக்கு ஒரு பிள்ளை பிறந்தால், அதை உங்கள் 'இனிஷியலை' வைத்துதான் அழைப் பார்கள். மாஸ்டர் சித்தரஞ்சன் என்று! உங்களுக்கே அதில் விருப்பம் இல்லை என்றால், எனக்கென்ன வந்தது?'' என்று சற்று அலட்சியம் போலத் தோளைக் குலுக்கினாள்.

''நல்ல முயற்சிதான்'' என்றான் அவன் பாராட்டுவது போல!

அவள் லேசாக முகம் கன்றுகையில், ''ஆனால், என் நிபந்தனையை நீ ஒத்துக் கொள்வதால், வா, உள்ளே போய் டாக்டரைப் பார்க்கலாம்!'' என்று காரை விட்டு இறங்கி னான் சித்தரஞ்சன்.

திலோத்தமையைச் சற்று விசித்திரமாகப் பார்த்தார் அந்த பெண் மருத்துவர்.

சொல்லப் போனால், இருவரையுமே!

''முதல் குழந்தையை இயற்கையின் வழியில் வருகிற போது பெற்றுக் கொண்டு, அடுத்ததைத் தள்ளிப் போட்டுக் கொள்வது, பொதுவாக நல்லது. நீங்களும், அப்படி ஒன்றும் பதினெட்டும் இருபதுமாண சின்னப் பிள்ளைகள் இல்லை. ஆனால்... நீங்கள் இருவரும் மணந்து கொள்ளப் போகிற வர்கள்தானே? அல்லது, இப்போது வேகமாகப் பரவி வருகிற கலாச்சாரம் போல, விரும்புகிறவரை சேர்ந்து வாழ்ந்து விட்டு, ஆசையும் மோகமும் தீர்ந்ததும் பிரிவதாக எண்ணி யிருக்கிறீர்களா?''

''**டாக்டர்!**'' என்ற கூக்குரல், தன்னையறியாமல் திலோ வின் தொண்டையைப் பிளந்து கொண்டு வந்தது!

பிரிவதா? இவனையா? அது கூடாது என்பதற்காகத் தானே, இந்தக் கண்ணராவி நிபந்தனைக்கு, திலோத்தமா சம்மதித்ததே!

அவளைப் போல கத்தாவிட்டாலும், சித்தரஞ்சனும், சிறு கடுப்புடனேயே பேசினான் ''சட்டத்துக்கோ, சமுதாயத் துக்கோ ஒவ்வாத எந்த உறவையும் நாங்கள் வாழப் போவதில்லை, டாக்டர். முக்கியமான பிரச்சினைகள் எல்லாம், சீர் செய்யப்பட்டு விட்டதால், அனேகமாக ஒரு மாதத்துக்கும் உள்ளாகவே எங்கள் திருமணம் நடக்கும். உங்களுக்கும் அழைப்பு தருவேன். எந்த விதமான சாக்குப் போக்கும் சொல்லாமல், நீங்கள் கட்டாயமாக வர... வந் தாக வேண்டும். நீங்கள் கற்றுக் கொடுக்கும் குரு அல் லவா?''

பளீரென்ற புன்னகையோடு, அவன் முடித்தபோது, பதிலுக்கு லேசாக முறுவலித்த போதும், அவளிடம் திரும்பிய டாக்டரின் முகத்தில் யோசனை இருந்தது.

''என்னம்மா, உன் கருத்தும் அப்படித்தானா?'' என்று விசாரித்தார்.

பதில் சொல்ல முடியாமல், தொண்டை அடைத்தது அவளுக்கு!

அந்த வினாடியில், இன்னும் கற்பனையில் கூட முழுதாக உருவம் பெற்றிராத, அவர்களது குழந்தைக்காகத் தன் மனம் ஏங்கத் தொடங்கி விட்டதைத் திலோத்தமா வருத்தத்துடன் உணர்ந்தாள்.

ஆனால் உணர்ந்தது வருத்தமேதான் என்று புரிந்ததுமே உடனே திகைத்தும் போனாள்.

இது என்ன மனோபாவம்? அவள் ஒன்றும் திருமணத்தின் வெற்றியே, மணமான பத்தாம் மாதமே ஒரு பிள்ளையைப் பெற்றுக் காட்டுவதுதான், என்று எண்ணுகிறவள் அல்லவே!

ஒரு வேளை, அவன் வேண்டாம் என்பதால் வந்த விருப்பமா? ஒரு பொருள் கிடைக்காது என்று என்கிற போதுதான் அதன் அருமை தெரியும் என்பது, இதைத் தானோ?

எப்படியோ திருமணத்துக்கு முன்னதாகவே, குழந்தை ஆசை, திலோவினுள் துளிர்த்து விட்டது மட்டும் நிஜம்!



4

ஆனால், என்ன ஆசை எப்படித் துளிர்த்தாலும், அதனால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதும் அவளுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தே இருந்தது!

இது விஷயத்தில், ரஞ்சன் ஒரே பிடிவாதமாக இருந்தான்! மறுத்தால், திருமணத்தையே நிறுத்துகிற அளவுக்குப் பிடிவாதம்!

அவனது உறுதி புரிந்து, அவள் தலையாட்டியும் ஆயிற்று!

அங்கே காரில் சித்தரஞ்சனிடம் ஒத்துக் கொண்டு உள்ளே வந்து விட்டு, இப்போது பின்னடிக்க முடியாது! அத்தோடு, பின் வாங்கிப் பயன்தான் என்ன?

எப்போது அவனை இழக்க முடியாது என்று ஆகி விட்டதோ, அப்புறம் அத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், இது சின்ன விஷயமே!

தலையை இழப்பதை விட, கையோ, காலோ ஓர் உறுப்பை இழப்பது போல என்று எண்ணினாலும், அப்போதும் மனதுக்கு கஷ்டமாகவே இருந்தது!

எப்படியும், அப்போதைக்கு வேண்டாம் என்றுதானே சொல்கிறான். பிறகு, அவனே மாறுவான் என்று மனதைத் தேற்றிக் கொண்டாலும், ஆமாம் என்று டாக்டரிடம் ஒரேயடியாக ஒத்துக் கொள்ளத் திலோத்தமாவுக்கு மனம் வரவில்லை.

எனவே, ''ஒத்த கருத்து இல்லாமல்கூட வருவேனா, டாக்டர்?'' என்று பதிலை, இன்னொரு கேள்வியாக உருமாற்றினாள் அவள்.

ஒரு சில கணங்களே என்றாலும், சங்கடமான ஒரு சிறு அமைதி அங்கே நிலவியது.

அமைதியைக் கலைத்து, சற்று முன்னே சாய்ந்து, சித்தரஞ்சன் பேசத் தொடங்கவும், டாக்டரின் பார்வை, திலோவிடமிருந்து, அவன் முகத்திற்குத் தாவியது.

''போதும்தானே, டாக்டர். திலோவின் விருப்பமும், இப்போது உங்களுக்குத் தெரிந்து விட்டதுதானே? இனிமேல் சொல்வீர்கள்தானே? இதுவே, ஒரு மருந்துக் கடையில் கேட்டால்கூட, இதற்கான மாத்திரைகளை வாங்க முடியும், டாக்டர் என்றாலும் திலோவின் உடல் வாகுக்கு ஏற்றது எது என்று சரியாகச் சொல்ல, உங்களைப் போன்ற மருத்துவர்களால் மட்டுமே முடியும். சரிவரத் தெரியாமல் எதையாவது உட்கொண்டு, திலோவுக்கு

ஆரோக்கியம் கெட்டுவிடக் கூடாதே என்றுதான், நாங்கள், உங்களைத் தேடி வந்ததே! சரியான மருந்து, பயன் படுத்தும் முறை எல்லாம் சொல்லுங்கள், டாக்டர்!'' என்றான் அவன்.

''நீங்கள் சொல்வது சரிதான் மிஸ்டர் சித்தரஞ்சன். இந்தக் கருத்தடை மாத்திரைகளில் சில வகை ஒல்லி யானவர்களுக்கும், சிலது பருமனாக இருப்பவர்களுக்கும் பிரச்சனை இல்லாமல் பொருந்துகிறவை. திலோத்தமா போன்ற உடல்வாகு உள்ளவர்களுக்கு, ஓரளவு எல்லாமே பொருந்தும். ஆனால், பொதுவாக இந்த மாத்திரைகள் எல்லாம் 'ஹார்மோன்' சுரப்பிகளோடு சம்பந்தப்பட்டவை என்பதால், கொஞ்சம் தலைசுற்று, வாந்தி போன்ற சில பிரச்சினைகள் சில மாதங்கள் இருக்கக் கூடும்... மற்றபடி, உடலில் பிரச்சினை இராது.''

''அடடா!'' என்று சித்தரஞ்சன் குறுக்கிடவும், இரு பெண்களும் அவன் முகத்தைப் பார்த்தனர்.

டாக்டர் கேள்வியாகவும், திலோத்தமை யோசனையாக வும்.

''தலைசுற்று, வாந்தி எல்லாம் உடம்பைக் கஷ்டப் படுத்துவதுதானே, டாக்டர்? இதையெல்லாம் உடனே குணமாக்கிவிட, முடிந்தவரை சீக்கிரமாகக் குணப்படுத்த மருந்துகள் இருந்தால், அதையும் கூடவே தந்து விடுங்கள், டாக்டர்'' என்றான் அவன்.

அவள் கஷ்டப்படுவாளே என்ற கரிசனம் இருக்கிறது! கரிசனம், அன்பு, இருந்தால்தானே வரும்? ஆனால், அவனது பிடிவாதத்தை விடக் காணோமே என்று நினைத் தாள் திலோத்தமா.

ஒருவேளை, அது கூட, அவளுக்குத் துன்பம் நேரக் கூடாது என்பதாக இருக்குமோ?

இப்படி நினைத்துப் பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருந்தது. ஆனால், ஒரேடியாக அதை ஒப்பவும் முடியாமல் எங்கேயோ உதைத்தது!

''இந்தச் சில்லரைத் தொந்திரவுகள், எல்லோருக்கும் ஏற்படும் என்று சொல்ல முடியாது! அப்படியே ஏற்பட்டாலும், சீக்கிரமே, தானாகவே சரியாகிவிடும். சரியாகா விட்டால், அப்போது வாருங்கள் அதற்கு மருந்து தரு கிறேன். இப்போது நீங்கள் கேட்ட மாத்திரை விஷயம்...'' என்று எழுதிக் கொடுத்துவிட்டு, ''எழுதியிருக்கிறபடி, இதைத் தினமும் தவறாமல் சாப்பிட வேண்டும், திலோத்தமா. அது முக்கியம் இடையிடையே விட்டு விட்டால், விளைவு வேறாகி விடும், ஜாக்கிரதை!'' என்று எச்சரித்துவிட்டு, ஒரு தலையசைப்புடன், அடுத்த நோயாளி யின் வருகைக்காக மணியடிக்கக் கையை நீட்டினார் மருத்துவர்.

''ஒரு நிமிஷம் டாக்டர்'' என்று சித்தரஞ்சன் எழுந்தான் ''எவ்வளவு, டாக்டர்?'' என்றவாறு, பர்சை எடுத்தான்.

மௌனமாகத் திலோத்தமா, தானும் எழுந்து நின்றாள்.

அவளது முகத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு ''பர்சை உள்ளே வையுங்கள், மிஸ்டர் சித்தரஞ்சன்'' என்றார் மருத்துவர்.

''ஆனால்...''

''இப்போது ஃபீஸ் வேண்டாம், சித்தரஞ்சன். வெளியே என் பெயரைப் பார்த்திருப்பீர்கள், அனுசூயா! மும்மூர்த்தி களையும் குழந்தைகளாக்கிச் சீராட்டியவள் பெயர்.

அழிப்பதற்கு நான் ஒரு போதும் உதவியது இல்லை. இப்போது... இது அழிப்பது இல்லை என்றாலும், ஓரளவு நல்லதே என்றாலும், ஏதோ ஒரு வகையில் எனக்கு லேசாக உறுத்துகிறது. உங்கள் முதல் குழந்தை உருவானதும் என்னிடம் வாருங்கள் அப்போது, உரிய பணம் வாங்கிக் கொள்கிறேன். இப்போது, போய் வாருங்கள்!'' என்றார் மருத்துவர்.

கடவுளே, இந்த டாக்டர் சொன்னது போலச் சீக்கிரமே, ரஞ்சனின் மனம் மாறி, இதே டாக்டரிடமே குழந்தை என்று, அந்தச் சோதனைகளுக்காக வருமாறு நேர வேண்டும் என்று உள்ளூர வேண்டிக் கொண்டாள் திலோத்தமா!

மருத்துவமனையை விட்டுக் கிளம்புகையில், ரஞ்சனுக்கு, அவளது இன்னோர் உறுதிமொழியும் தேவைப் பட்டது!

''இது விஷயம், இப்போதைக்கு நமக்குள்ளேயே இருக்கட்டும்'' என்றான்.

இல்லாவிட்டாலும், இது என்ன, எல்லோரிடமும் முரசு கொட்டி அறிவிக்கும் சந்தோஷச் செய்தியா?

ஆனாலும் அவள் சம்மதமாகத் தலையாட்டும் வரை காத்திருந்து, அதன் பிறகே காரை எடுத்தான் அவன்.

டாக்டர் அனுசூயாவிடம் போய் வந்ததிலிருந்து சித்த ரஞ்சன் உற்சாகமே உருவாகிப் போனான்.

வீட்டில் அவளுடைய தந்தை, அலுவல் முடிந்து திரும்பி வந்திருந்தார்.

''அத்தை, சொன்ன நேரத்துக்கு, உங்கள் மகளைக் கூட்டி வந்து, உங்களிடம் ஒப்படைத்து விட்டேன் பாருங்கள். உங்கள் மருமகன் சத்தியசந்தன் என்று எல்லோரிடமும்

நீங்கள் பெருமையடித்துக் கொள்ளலாம்!'' என்று அவன் இலகுவாகக் கூறியது, பெற்றவர்களுக்குப் பிடித்தபோதும், திலோவுக்குத்தான் ரசிக்கவில்லை.

என்ன பெரிய சத்தியசந்தன்? எங்கெல்லாம் போய் விட்டு வந்தீர்கள் என்று அவளுடைய பெற்றோர் கேட் டால், இவன் முழு உண்மையையும் சொல்லி விடுவானா, என்ன?

ஆனால், பெற்றோரின் மலர்ந்த முகங்களைப் பார்க்கை யில், அவளுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது!

எப்படியும் சீக்கிரமே இந்த ரஞ்சன் அவளுடையவன் ஆகப் போகிறானே! இருவரும், ஒருவருக்கொருவர் என்று ஆகப் போகிறார்கள்! அது எல்லாவற்றையும் விட, முக் கியம் அல்லவா?

முகம் தானாக மலர, பெற்றோருடன் சித்தரஞ்சன் பேசிச் சிரிப்பதை, ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் திலோத்தமா!

மறுநாள் கடைக்குப் போய் நகையை வாங்கிக் கொண்டு, சித்தரஞ்சனுடைய பெற்றோரைப் பார்க்கப் போனார்கள்.

நகையைப் பார்த்த பானுமதி, அது அழகாக இருப்பதாக ஒத்துக் கொண்டாலும், பெரிதாக, முழு மாலையாகவே வாங்கியிருக்கலாமே என்று, மகனைக் கடிந்து கொண்டாள்.

''நான் என்ன செய்யட்டும், அம்மா? என்னுடைய வாங்கும் திறன் பற்றித் திலோ பயந்து விட்டாளோ, என்னவோ? கொடுக்கப் பணம் இல்லாமல், சட்டையைக் கழற்றிக் கொடுக்கச் சொன்னால் என்ன செய்வது என்று...''

''அதெல்லாம் இல்லை, அத்தை!'' என்றாள் திலோ அவசரமாக.

அதே சமயத்திலேயே, ''சும்மாக் கதை விடாதேடா!'' என்றாள் பானுமதி. ''உன் முதல் பரிசு! திலோவின் மனதில் அப்படியே பதிந்திருக்க வேண்டாமா? இன்னும் கொஞ்சம் பெரிதாக...''

''இதுவே, எனக்கு மிகவும் பிடித்துதான் இருக்கிறது ஆன்ட்டி! சொல்லப் போனால், இதுதான் மிகவும் பிடித்துப் போயிற்று!'' என்று வருங்கால மாமியாரின் பேச்சில் குறுக்கிட்டுச் சொன்னாள் திலோத்தமா. ''கடைக்காரரின் உள் அறைக்குப் போய்ப் பெரிதாக ஒன்றைத் தேர்ந் தெடுக்கலாம் என்று தான் ரஞ்சனும் சொன்னார். ஆனால் இந்த டிசைன் எனக்கு மிகவும் பிடித்து விட்டதால், கடைசியாக இதையே எடுத்துக் கொள்ளச் சொன்னார்! அதனால், அவர் மேல் தப்பில்லை, ஆன்ட்டி!'' என்று விளக்கினாள்.

''அடேயப்பா!'' என்று வியந்துவிட்டு, ''பரவாயில் லையே! மருமகள் இப்போதே உனக்காக இவ்வளவு வக்காலத்து வாங்குகிறாளே! திருமணம் முடிந்த பிறகு, இன்னும் எப்படியாகுமோ? நம் பிள்ளைதானே என்று உன்னை அதட்டி ஒரு வார்த்தை சொல்ல முடியாது போல இருக்கிறதே!'' என்று பானுமதி புருவம் உயர்த்திக் காட்ட, சித்தரஞ்சன் பெருமையாகக் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ள, மூவருமே இணைந்து நகைத்தனர்.

சிரித்து முடித்த பிறகு, ''இப்போது கடையில் நடந் ததைச் சொன்னேனே தவிர, உங்களை மீறி, நான் இல்லை, ஆன்ட்டி!'' என்று பதவிசாக திலோத்தமா கூற, ''அருமை யான மருமகள்! நீ எப்போது வீட்டுக்கு வருவாய் என்று இருக்கிறது! கல்யாணத் தேதியைச் சீக்கிரமாகப் பார்க்கச்

சொல்லு, சித்து!'' என்றாள், அவளுடைய வருங்கால மாமி யார், சந்தோஷமாக!

செந்திருவுக்கும் நகை மிகவும் பிடித்துப் போய்விட, மிகவும் சந்தோஷப்பட்டாள்!

எடுத்த எடுப்பிலேயே, மாப்பிள்ளை வைரத்துக்குப் போய் விட்டாரே! மருமகனுக்கு, ஒரு போதும், பணப் பிரச்சினை இராது என்று, அவளுக்குச் சந்தோஷம்! மக்களின் படிப்புக்கும், திருமணத்துக்கும் என்று, பிள்ளை கள் பிறந்ததில் இருந்து, கணக்கிட்டுச் சிக்கனமாக இருந்து சேமித்தவள் அவள் அல்லவா?

இன்றைக்கு இலகுவாகச் செலவு செய்ய ,முடிகிறது என்றால், காரணம் அவளது திட்டமிட்ட சேமிப்புதானே?

இரு வீட்டாருக்குமே, திருமணத்தைத் தள்ளிப் போடு வதற்கு மனமில்லாது போக, விரைவிலேயே திரு மணத்தை முடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள்!

பட்டும் ஜரிகையுமாகச் சேலைகள் வாங்கினார்கள். மாப்பிள்ளைக்கு சூட்!

சூட் அணிந்து, ரஞ்சன் அருகில் நிற்பதை கற்பனை செய்து பார்த்தவளுக்கு, உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது.

திருமணத்துக்கு, இன்னும் பதினைந்து நாட்கள் இருக்கின்றனவே என்று வருத்தப்பட்டாள். பதினைந்து நாட்கள்! ஆனால், அந்தப் பதினைந்து நாட்களும் இறக்கை கட்டிக் கொண்டு பறந்து போகும் என்று, திலோத்தமா எதிர்பார்க்கவே இல்லை!

ஆனால், திடுமென்ப் பார்த்தால், நாளை மறுநாள் திரு மணம் என்கிற அளவுக்கு மணநாள் நெருங்கி வந்துவிட, அவளது திருமணச் சேலைக்கான சட்டை தைத்து

வரவில்லை என்று அவளுடைய தம்பி நரேந்திரன், தையற்காரம்மா வீட்டுக்கு மூன்றாவது முறையாகப் போயிருந்தான்! இரண்டாவது தடவை சென்றபோது, இன்னமும் ஹூக் தைக்க வேண்டும் என்றார்களாம்!

செந்திருவுக்கு ஒரே பயம். சட்டையை ஏதேனும் பாழ் பண்ணிவிட்டு, அதைக் காமா சோமா என்று எப்படியோ சரிக்கட்டி, அரை குறையாகத் தைத்துத் திருமண நேரத்தில் கொண்டு வந்து கொடுத்து விடுவார்களோ என்று அஞ்சி, இருந்து, சட்டையை வாங்கிக் கொண்டுதான் வரவேண் டும் என்று, மகனிடம் சொல்லி அனுப்பியிருந்தாள்.

பெரிய தப்பாக இருந்து, துணியே பாழ்பட்டிருந்தாலும், புதிதாகத் துணி வாங்கித் தைக்க அவகாசம் வேண்டுமே!

திலோத்தமைக்கும் உள்ளூர உதைப்புதான். அவளது நிறத்துக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று, அவளுடைய ரஞ்சனே தேர்ந்தெடுத்தது! அதை அணிந்து கொண்டு மோகினியாக அவள் வரும்போது, யார் என்ன கேலி செய்தாலும் பரவாயில்லை என்று, கண் கொட்டாமல் அவளையே பார்க்கப் போவதாகச் சொல்லியிருந்தான்.

சட்டை சரியாகத் தைக்கவில்லை என்றால், அது கண்ணை உறுத்தாதா? அதுவும் அவனது கண்களை!

ஒரு வழியாக நரேந்திரன் சட்டையோடு வந்து, அதை அணிந்து, சரி பார்த்த பிறகே, திலோவால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது!

நல்லவேளையாக, ரஞ்சனின் கண்ணுக்கு எந்த உறுத் தலுமின்றி, அவள் எழில் மோகினியாகவே இருப்பாள்! அது போதும்!

அழகு, அழகு என்று ரஞ்சன் பேசுவதைப் பார்த்தால், அவனுக்காகவே அழகை ரொம்பவும் பராமரிக்க வேண்டும் போல இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டாள் திலோத்தமா, பூரிப்புடன்தான்!

வாழ்க்கைத் துணைவன் தன் அழகை ரசிக்கிறான் என்றால், பெண்ணுக்கு ஆனந்தம் தானே? உலகத்திலேயே பேரழகி என் மனைவி என்றானாம் ஒருத்தன். மனைவி யிடம் அழகைக் காணும்போது, அந்தக் கண்களில் அன்பு இருப்பதும் உறுதியல்லவா?

இதற்கு மேல், அவளுக்கு என்ன வேண்டும் என்று பூரணத் திருப்தியோடு திலோத்தமா எண்ணமிட்டபோது, சுருக்கென எங்கோ குத்தியது.

ரஞ்சனின் கண்களில் அன்பு மட்டும் இருந்தால் குழந்தை வேண்டாம் என்று சொல்லத் தோன்றுமா? அது வும் அவ்வளவு கண்டிப்பாக! திருமணத்தையே மறுக்கும் அளவுக்கு உறுதியாக!

இன்றைய அழகான உடல் பீப்பாய் போல மாறினாலும், அதுவும் அன்புக் கண்ணுக்கு அழகாகத்தானே தெரிய வேண்டும்?

பின்னே எதற்காக இந்தப் பிடிவாதம்? அவளறியாத வேறு என்னவோ, இதிலே இருக்கிறதா?

சற்று முன் மகிழ்ச்சி இருந்த இடத்தில், இப்போது குழப்பம் தலை தூக்கலாயிற்று.

ஆனால், அது பற்றி அவள் யோசிக்க முயலும்போதே, தலையணையை ஒட்டி வைத்திருந்த அவளது செல் இனிமையாக அழைத்தது.

ரஞ்சன்தான்!

''ஹலோ!'' எனுமுன் அவளது குரல் குழைந்தது.

''என் மோகினிக்கும் தூக்கம் வரவில்லையா?'' என்று கொஞ்சியது அவனது குரல்.

''ம்ம்ம்... நல்ல தூக்கத்தைக் கலைத்துவிட்டு இப்படியொரு கேள்வியையும் கேட்பதாக்கும்? இதற்கு, உங்களை என்ன பண்ணலாம்?'' என்று செல்லமாகச் சீண்டினாள் திலோத்தமை!

''நல்ல தூக்கமா? அந்த நினைப்பே கிடையாது என்று குரல் சத்தியம் செய்கிறது! தூக்கத்தை கலைத்ததாகக் குற்றச்சாட்டு வேறா?'' என்று சிரித்தான் ரஞ்சன்.

''எனக்கும் தூக்கமே வரவில்லை, திலோ! நாளை மறு நாள் இந்த நேரம் என்று நினைத்தேனா? உன் குரலை யாவது கேட்டே தீர வேண்டும் போல இருந்தது! ஆனால் இதற்கு மேலும் விழித்திராமல் தூங்கும்மா'' என்று கரிசன மாகக் கூறியவன் உடனேயே, ''பெரிதாக வேறொன்று மில்லை, திலோ! நாளை மாலையே நலுங்கு, அது இதென்று திருமணத் தொடர்பான சடங்குகள் தொடங்கி விடும். இரவு எப்போது முடியுமோ? தொடர்ந்து தூக்கமில் லாது போனால் திருமணத்தின்போது தூங்கி மடியில் விழுந்து விடுவாயோ என்ற பயம் தான்! மடியில் விழுவது கூடப் பரவாயில்லை! சந்தோஷம்தான். ஆனால், தூக்கி வைத்துத் தாலி கட்டச் சிரமமாக இருக்கும், பார்! அதற்காகச் சொன்னேன்!'' என்று அவன் சாதுவாக நீள விளக்கம் தர, அவளுக்குச் சிரிப்பு பொங்கியது!

அடக்கிக் கொண்டு, ''எதற்கும், நீங்களும் உடனேயே தூங்கி விடுங்கள், ரஞ்சன். இல்லையானால், நீங்களும் தூக்கக் கலக்கத்தில், எனக்குப் பதிலாகப் பக்கத்தில் யார்

கழுத்திலாவது தாலியைக் கட்டிவிட்டால் ஆபத்து அல்லவா? அதனால் சொன்னேன்!'' என்றாள் அவளும், அவனது அப்பாவிக் குரலிலேயே எடுத்துரைத்தாள்.

அவனது குரலிலும் நகை இலங்கியபோதும், உறுதி யான பதில் வந்தது ''உன்னையன்றி, இன்னொரு கழுத் திலா? வாய்ப்பே கிடையாதும்மா! கண்ணையே திறக்க முடியாத மயக்க நிலையே என்றாலும், என் உடம்பின் ஒவ்வோர் அணுவுக்கும் உன்னைத் தெரியும் என்பதால், வேறொரு கழுத்தில் என் கை தாலி ஏறவே ஏறாது! இது நிச்சயம்!''

இவனுக்காவது, அன்பில்லையாவது? என்ன அசட்டு யோசனை?

அவனை நினைத்தவாறே, அமைதிப் புன்னகையோடு தூங்கிப் போனாள் திலோத்தமா!

மறுநாள், மண்டபத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொருட்களைச் சரி பார்த்து எடுத்துக் கொண்டு கிளம்பிச் செல்வதிலும், தொடர்ந்து நலுங்கு முதலான சடங்குகளிலும் பொழுது பரபரப்பாகக் கழிந்துவிட, மறுநாள் திருமணமும் அதே வேகத்துடன் நிறைவேறி, கழுத்தில் தாலியோடு மனைவி என்ற ரஞ்சனின் அருகே தான் நிற்பதை ஆச்சரியத்துடன் உணர்ந்தாள் திலோத்தமா!

அவள் மாங்கல்யத்தைத் தொட்டுப் பார்ப்பதைக் கவனித்துவிட்டு ''மாற்றி யார் கழுத்திலும் கட்டி விட வில்லை, பார்த்தாயா?'' என்று காதோரம் கிசுகிசுத்தான் சித்தரஞ்சன்.

''நானும்தான் தூங்கி உங்கள் மடியில் விழுந்து விடவில்லை!'' என்றாள் அவள் பதிலுக்கு!

தாடையைத் தடவியபடி ''ம்ம்ம்... அதுதானே கொஞ்சம் ஏமாற்றமாக இருக்கிறது! குறைந்த பட்சமாகத் தாலி கட்டிய பிறகாவது மடியில் விழுந்திருந்தால், எழுப்புகிறேன் பேர்வழி என்று எப்படி எப்படியோ...'' என்று அவன் லேசாகக் கண் சிமிட்ட, முகம் சிவப்பதைக் கட்டுப்படுத்த முயன்றபடி ''ஷ், ரஞ்சன்!'' என்றாள் அவள்.

ரசனையுடன் சிரித்தவாறே, பரிசு கொடுக்க வந்தவர்கள் பக்கம் திரும்பினான் அவள் கணவன்.

கட்டுப்படுத்த முடியாத எத்தனையோ கற்பனைகள்!

அத்தனையுமே, அதற்கும் மேலாகவே அவர்களது ஒரு வாரத் தேனிலவில் பலிக்க, பூரிப்பே உருவாகிப் போனாள் திலோத்தமா.

கண்களும், கன்னங்களும் பளபளக்கத் திரும்பி வந்த மகளைப் பார்த்து, செந்திருவும், மணிகண்டனும் சந் தோஷப்பட்டனர்.

மறுவிருந்து, மற்றும் ஆவன செய்து, முறைப்படி திலோத்தமாவை கணவன் வீட்டுக்குப் பெற்றோர் அனுப்பி வைத்தார்கள்.

சம்பந்தி வீட்டுக்கு ஏற்ற வகையில் சீர் செனத்தி செய்யவில்லை என்கிற கவலை செந்திருவுக்கு இருந்தது. ஆனால், இரண்டு பிள்ளைகள் எனும்போது, மகனை வஞ்சித்து, ஒரேடியாக மகளுக்குச் செய்யவும், நியாய வாதிகளான அந்தப் பெற்றோருக்கு மனம் வரவில்லை.

இதை லேசுபாசாக அவள் குறிப்பிட்டபோது, ''அத்தை, உங்கள் மகளுக்கு, நீங்கள் பொருளாக எதைச் செய்யவும், இப்போது அவசியம் கிடையாது. ஆனால், எதுவுமே வேண்டாம் என்று மறுத்தால், நீங்கள் வருத்தப்படக்

கூடும். அதனால் அதிகப்படியாகச் செலவு செய்யாமல் பார்த்துக் கொள் என்றுதான் அம்மாவும் என்னிடம் சொன்னார்கள். திலோவுக்காக நீங்கள் என்ன கொடுத்தாலும், உங்கள் அன்பும் பாசமும் அதோடு சேர்ந்து வரும் என்பதும், வாழ்க்கைக்கு அவைதான் முக்கியம் என்பதும் எங்கள் வீட்டில் எல்லோருக்கும் தெரியும். அதனால், அனாவசியமாக மனதில் சஞ்சலப்படாதீர்கள்'' என்று சித்தரஞ்சன் கூறவே, அவனுடைய மனைவி திலோத்தமா உச்சி குளிர்ந்து போனாள்.

செந்திருவைப் பற்றியோ கேட்கவே வேண்டாம்.

ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''எங்கள் திலோ அதிருஷ்டக்காரி என்று என் தாயார் எப்போதுமே சொல்லுவார்கள்! ஆனால் இவ்வளவு என்று தெரியாது. சின்ன வயதில் ஒரு தரம்...'' என்று செந்திரு ஏதோ சொல்ல முனைகையில், அவளது பேச்சில் குறுக்கிட்டு, ''அதெல்லாம் இருக்கட்டும், அத்தை. இப்போது உங்கள் கையால், ஒரு காபி கிடைக்குமா? அன்று நீங்கள் கொடுத்த காபி மிகவும் ருசி என்று அம்மா சொன்னார்கள். அதே காபி போடும் முறையை, உங்கள் பெண்ணுக்கும் நன்றாகக் கற்றுக் கொடுங்கள். சமயத்தில் பயன்படும்'' என்று சித்தரஞ்சன் கூற, விழுந்தடித்துக் கொண்டு, ''வா கண்ணு, நீயும் நன்றாகப் பார்த்துக் கொள்'' என்று மகளையும் அழைத்துக் கொண்டு காபி போடப் போனாள் செந்திரு.

கணவன் வீடு, திலோத்தமாவுக்கு சொர்க்கமாகவே இருந்தது.

திருமணத்துக்காக வந்த ஒரே நாத்தனார், தாய், தந்தையுடன் ஒரு வாரம் தங்கிச் சீராடிவிட்டு, திலோத்தம

தேனிலவு முடிந்து திரும்பி வந்த மறுநாளே, பாரீசில் இருந்த தன் குடும்பம் நோக்கிப் பறந்து விட்டாள்.

அங்கே சொந்தத் தொழில், கணவனும் மனைவியு மாகவே கவனித்துக் கொள்கிறார்களாம். பிள்ளைகளுக்குப் பள்ளி, அங்கே சிறு வயதிலேயே, பிள்ளைகளுக்கு, ஏழு மொழிகள் கற்றுக் கொடுப்பார்கள் என்று கேட்டு திலோ, 'எப்படிப் படிப்பார்கள்' என்று ஆச்சரியப்பட்டாள். சின்ன வயது என்பதால்தான் இலகுவாகப் பிடித்துக் கொள் கிறார்கள் என்றாள்.

திலோத்தமாவுக்கு வீட்டின் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்துவிட்டு, பானுமதியும் மகள் வீட்டுக்குச் சென்று சில மாதங்கள் தங்குவதாக இருந்ததால், மகளைப் பிரியும் வாட்டம், அவளது முகத்தில் அவ்வளவாகத் தெரியவில்லை.

மகளை வழியனுப்பி விட்டு வந்த பானுமதி, மரு மகளையும், மகளாகவே நடத்தினாள் எனலாம்.

வீட்டிலுமே, பெரிய கடமைகள், வேலைகள் என்று திலோத்தமாவுக்கு எதுவும் இல்லை. அந்தந்த வேலைக்கு, அததில் திறமை உள்ள பணியாட்கள் இருந்தனர். அவர் களை மேற்பார்வை பார்க்கவும் தேவை இருக்கவில்லை.

காலையில் குளித்துக் கிளம்பி, தந்தையும் மகனும் அலுவலைப் பார்க்கச் சென்றார்கள் என்றால், மாலையில் இருவரும் திரும்பி வருவது, அவரவர் பொறுப்புகள் முடிவதைப் பொறுத்ததாக இருந்தது.

அதிலும், புதிதாக மணமானவர்கள் என்பதால், நடே சனே மகன் சீக்கிரமாக வீடு திரும்புவதற்கு, வழி வகை செய்து கொடுத்தார். மாலை முன்னிரவு நேரங்களில்

நடக்கக் கூடிய, தொழில் தொடர்பான பேச்சு வார்த்தைகளை அவரே கவனித்துக் கொண்டு, மகனை வீட்டுக்கு அனுப்பினார்.

''மாமா பெரியவர், அவருக்கு அதிக வேலை தானே?'' என்று திலோத்தமா சிறு கவலையுடன் கேட்டபோது, ''நல்லது என்று நான் நினைக்கிறேன் திலோ'' என்றாள் பானுமதி.

''முன்பானால், இது போன்றவைகளைச் சித்துவைக் கவனிக்கச் சொல்லிவிட்டு, உன் மாமா அவரது நண்பர்களோடு 'கிளப்'புக்கு போய் விடுவார். அவர்களது அரட்டை எப்போது முடியும் என்று சொல்ல முடியாது. ஓரோரு நண்பர்கள் சீட்டாட்டம், மது என்று இழுப்பார்கள். அதையும் மறுக்க முடியாது. உன் மாமா அளவு மீறுவது இல்லை என்றாலும், அவர் வரும்வரை, எனக்குக் கவலை தான். நண்பர்களோடு போனால், திரும்பி வர எப்படியும் நள்ளிரவு வரை ஆகிவிடும். இப்போது பார்! மிஞ்சி, மிஞ்சி பத்தரை! நிம்மதியாக இருக்கிறது! எங்களைப் பற்றிய எண்ணம் இல்லாமல், நீயும் மகிழ்ச்சியோடு இரு'' என்றாள் மாமியார்.

திலோத்தமாவுக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

மாமியார், மாமனாரின் பரிவு, பிரியம் ஒரு புறம் என்றால், கணவனின் ஆசையும், நேசமும், அவளுக்கு இந்த உலகத்தையே மறக்கடித்தன.

சித்தரஞ்சன், இல்லாமல், இந்த இருபத்து மூன்று ஆண்டுகளை எப்படித்தான் கழித்தாளோ, என்பது அவளுக்கே புதிராக இருந்தது!

அதிலும் கடைசி இரண்டு ஆண்டுகள்!

இந்த வயதில், எல்லாப் பெண்களுக்குமே இப்படித் தான் கலக்கமும், குழப்பமுமாக இருக்குமோ, என்னவோ? அலைந்து திரிந்து, ஆய்ந்து ஓய்ந்து வீடு வந்து விட்ட உணர்வு!

சும்மாவே இப்படி என்றால், சித்தரஞ்சன் வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டால், வேறு நினைக்கவே அவளுக்கு அவகாசம் இராது!

வீட்டில் இருக்கையில், புதுக்கணவனின் வேகம்!

அதன்றி, அடிக்கடி வெளியேயும் அவளை அழைத்துச் சென்றான். நாடகம், சினிமா மட்டுமின்றி, பல்வேறு கலைக் கண்காட்சிகள், மாஜிக் ஷோ போன்ற பலவற்றை யும் பார்த்து ரசித்தார்கள்.

இவை மட்டுமின்றி, நகைகள், துணிமணிகள் வேறு வாங்கிக் குவித்தான். எங்காவது 'ஷோகேசி'ல் அழகாக எதையாவது பார்த்தால், அதை வாங்கி விட்டுத்தான், வேறே எங்கே செல்வது என்றாலும்!

அப்புறம், அதை அணியச் சொல்லிப் பார்ப்பது, பார்த்து ரசிப்பது! ''பிடித்திருக்கிறதா? திருப்தியாக இருக்கிறதா?'' என்று பலமுறை கேட்பான்.

ஒரு மாதம் எப்படிப் போனதென்றே தெரியாமல், பறந்துவிட, பானுமதி மகள் வீட்டுக்குக் கிளம்பி வெளி நாடு சென்றாள்.

மாமியார் விடைபெறும்போது சொன்ன வார்த்தை களால், அவள் அறியாமலே, அவளுடைய மருமகள் திலோத்தமாவின் நெஞ்சில் ஓர் அம்பு, வலிக்கத் தைத்தது!



# 5

அன்பாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள்தான்!

கூடவே "நான் திரும்பி வரச் சில மாதங்கள் ஆகும். அப்படி நான் வரும்போது, நல்ல சேதி ஒன்று, எனக்காகக் காத்திருக்க வேண்டும்!" என்று, அவளது ஆசையைக் குறிப்பாக வெளிப்படுத்திச் சொன்ன வார்த்தைகள்!

ஆனால், அவை மருமகளைப் புண்படுத்தக் கூடும் என்று அந்த அன்னைக்கு எப்படித் தெரியும்?

திருமணம் என்றால், பொதுவாக எதிர்பார்ப்பதுதான். அதிலும் மூத்த தலைமுறை, பேரக் குழந்தைகளுக்கு ஆசைப்படுவது, இயற்கையே.

ஆனால், இரு தரப்புமே பண்பாடு உள்ளவர்கள் என்பதால், இதுவரை யாரும் அது பற்றி நோண்டி, நோண் டிக் கேட்டது இல்லை! நம் பிள்ளைகள் கெட்டிக்காரர்கள், அறிவுள்ளவர்கள் என்ற நம்பிக்கை இருக்கவே, அவர்களது தனிப்பட்ட விஷயங்களில் இருவரும் தலையிட்டது மில்லை!

இப்போதும், பொதுவான ஓர் ஆவலைச் சொன்னது தான். ஆனால் திலோவின் மனம் கசங்கிப் போயிற்று!

பிள்ளைக்கு ஆசைப்பட்டால், திருமணமே வேண்டாம் என்று நிபந்தனை இட்டு மணந்தவன் மகன் என்று

சொன்னால், இந்த அன்பான பெண்மணிக்கு எப்படி யிருக்கும்?

அவளும், ஒப்பியே மணந்தாள் என்றால், அவளைப் பற்றியும்தான் மாமியார் என்ன நினைப்பாள்?

மருத்துவர் சொன்னது போலத் தினமும் கருத்தடை மாத்திரை ஒன்றை எடுத்து விழுங்குவது, சைக்கிள் ஓட்டுவது போல, உடம்புக்குப் பழகிப் போயிற்று. அதைவிடப் பெரிய இழப்புடன் ஒப்பிட்டுப் பழகி விட்டதாலோ என்னவோ, மனதுக்கும் அவ்வளவு பெரிதாக, அதுவரை தோன்றவில்லை!

ஆனால், இப்போது மாமியார் வாய் திறந்து பிள்ளை யென்று குறிப்பாகக் கூறவும், பெரிதாக எதையோ இழந்து விட்டது போலத் தவிப்பு தோன்றாயிற்று!

ஆனால், இப்படியொரு நிபந்தனையிட்டு மணந்த சித்தரஞ்சன் அல்லவோ, தாயின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டும்?

என்ன என்று விசாரிக்கக் கூட இடமளிக்காமல், பிள்ளை வேண்டாம் என்பது என் முடிவு. சம்மதம் என்றால் இப்படி, இல்லை என்றால் அப்படி என்று, அன்று கறாராகப் பேசினானே! இப்போது தாயாருக்கும் கூட, அதே கண்டிப்புடன் பதில் வருமா?

என்ன சொல்கிறான் என்று பார்ப்பதற்காக, மாமியார் பேச்சைக் கணவன் காதிலே போட்டாள் திலோத்தமா.

அவன் லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு டீ.வி.யை நோண்டவும், அவளுக்குச் சுள்ளென்று கோபம் வந்தது.

அதென்ன, அவளா பிள்ளை வேண்டாம் என்றாள்?

ஒருபுறம் தாயார், இன்னொரு பக்கம் மனைவி. இருவரின் உணர்வுகளைப் பற்றியுமே, இவனுக்கு ஒரு மதிப்பும் இல்லையா? இது சரியில்லையே!

தலை சரித்து நோக்கி ''அப்படியென்றால் என்ன அர்த்தம்? நானும் அத்தையிடம் இப்படி அலட்சியமாகத் தோளைக் குலுக்கிவிட்டுப் போய் விடலாம் என்பதா?'' என்று, திலோ சற்று அழுத்தமான குரலில் கேட்டாள்.

அவன் தலை நிமிர்ந்து பார்க்கவே இல்லை ''இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை என்று அர்த்தம். சில நாட்கள் கவனியாதது போலப் பேசாதிருந்து விட்டால், தானாகச் சரியாகிப் போய்விடும் என்று அர்த்தம்!'' என்றவன், மறுபடியும் டீ.வி. நோண்டலில் தீவிரமானான்.

தானாகச் சரியாகிப் போகுமா? எப்படி?

அதை முகம் பார்த்துக் கூடச் சொல்லாமல், அப்படி என்ன அலட்சியம்?

சினம், சீற்றமாக வளரும்போதே, சித்தரஞ்சன் இப்படி அலட்சியமாக இருந்ததே இல்லையே என்று அவளுக்கு நினைவு வந்தது.

வீட்டுக்கு வந்தாலே, எப்போதும் கொஞ்சலும், குலாவலும்தான்!

டீ.வி.யில் நிகழ்ச்சிகளை மாற்றிக் கொண்டே இருப்பதைப் பார்த்தால், அதிலும் முழுக் கவனம் இருப்பதாகத் தெரியவில்லை! சும்மா, பேச்சில் கலந்து கொள்ளாமல் தவிர்ப்பதற்காக, வெறும் பாவனை!

அப்படியென்றால், அவனுடைய அன்னை திலோவிடம் பேசியதை, அவனும் கேட்டே இருக்கிறான். அல்லது மகனிடமும் மாமியார் இது பற்றிச் சொல்லியிருக்கலாம்.

இது பற்றி மனைவி பேச்செடுக்கக் கூடும் என்று எதிர்பார்த்துத் தவிர்க்கிறான்!

வருங்காலம், அதில் பேர் சொல்ல ஒரு பிள்ளை என்பதெல்லாம் பற்றி, இதுவரை அவர்கள் இருவரும் பேசியதில்லை. பேச, அவன் இடம் கொடுத்ததும் இல்லை!

'பிள்ளை வேண்டாம்' என்ற அவனது நிபந்தனையை ஒத்துக் கொண்டே மணந்ததால், கல்யாணம் ஆன பிறகும், அந்தப் பேச்சை எடுப்பதற்குத் திலோத்தமாவுக்கு வாய் வந்ததில்லை.

கொடுத்த வாக்கை மீறுவது போன்ற தயக்கம்!

அத்தோடு, ரஞ்சன் அவளிடம் அன்பும் ஆசையுமாகத் தானே இருந்தான்!

அந்த ஆசை, நேசம் உணர்ந்ததாலேயே, அவனது பிள்ளை மறுப்புக்கு அவளாக ஒரு காரணத்தை யோசித்து வைத்திருந்தாள்.

பிரசவம் என்றால், பெண்ணுக்கு மறுபிறவி என்று யாரோ சொல்ல, அவன் அதைக் கேட்டிருக்கலாம். அவனுடைய நட்பில், உறவில் யாரோ விதி வசத்தால் அப்படி இறந்தும் போயிருக்கலாம்! அதனாலேயே குழந்தை வேண்டாம் என்று சித்தரஞ்சன் முடிவு செய்திருக்கக் கூடும் என்பது, திலோத்தமையின் ஊகம்.

இது ஓர் அசட்டு பயமே. பிள்ளை பெறுகிற பெண்கள் எல்லோரும் செத்துப் போனால், மக்கள் தொகை, இவ்வளவு வேகமாகப் பெருகுமா, என்ன?

எப்படியும் பெரியவர்கள், உற்றவர்கள், இது பற்றிப் பேசாமலே இருந்துவிடப் போவதில்லை! இன்றைய மருத்துவ துறையின் முன்னேற்றத்துக்குப் பிறகு,

பிள்ளைப் பேற்றில் பயப்பட எதுவுமே கிடையாது என்று, கணவனுக்கு ஒரு நாள் தெரியாமல் போகாது. அப்போது இந்தப் பிரச்சினையும் தானாகவே தீர்ந்து விடும் என்று தனக்குள்ளேயே ஒரு நம்பிக்கையைத் திலோத்தமா வளர்த்தும் வைத்திருந்தாள்.

ஆனால், பிரச்சினையை சித்தரஞ்சன் எதிர்கொண்ட விதம் அவளை யோசிக்க வைத்தது. அவள் எண்ணியது போலக் கவலையோ, கலவரமோ அவனிடம் தெரியவில் லையே! தேவையற்ற பேச்சு என்பது போல ஓர் அலட் சியம்! தூசி, சருகைத் தட்டுவது போல அசட்டை!

அதெப்படி?

வேறு என்னவோ என்று, திலோத்தமாவின் மனம் கலங்கியது. இதில் ஏதோ இருக்கிறதோ என்ற பழைய, முதல் உறுத்தல், மறுபடியும் மனதில் தோன்றியது.

கணவன் மனைவிக்குள் என்ன ஒளிவு மறைவு? என்னவாக இருந்தாலும் சொல்ல வேண்டியதுதானே? அவனாகச் சொல்லாவிட்டாலும், விஷயம் என்ன என்று விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்!

அவள் ஒன்றும் வாக்கு மீறி, குழந்தை வேண்டும் என்று கேட்கப் போவதில்லையே? இதில் மறைந்திருக்கும் பிரச்சினை என்ன என்றுதானே, கேட்கப் போகிறாள்!

ஆனால் ''ரஞ்சன், உங்களிடம் ஒன்று கேட்க...'' என்று அவள் தொடங்கியபோதே, நெற்றியை அழுத்தியவாறு, சித்தரஞ்சன் அவள்புறம் திரும்பினான்.

''திலோ, தலை லேசாக வலிக்கிறது. கொஞ்சம் காபி கிடைக்குமா? உன் அம்மா போட்டுத் தந்தது போன்ற நல்ல காபி! சிரமம் இல்லையானால், நீயே போட்டுக் கொண்டு வருகிறாயா?'' என்று நயந்து கேட்டான்.

திலோத்தமாவுக்கு மனம் உருகிப் போயிற்று!

சே! தலைவலியில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். அதைக் கூட, அவளிடம் காட்ட மனமின்றி, டீ.வி.யை நோண்டுவது போன்ற நடிப்புடன், அவனைப் போய், என்னவெல்லாம் எண்ணி விட்டாள்!

"இதோ ரஞ்சன்" என்று சமையலறையை நோக்கி ஓடிப் போனாள் அவள்.

விரைந்து சென்றவளைப் பார்த்தவாறு, அசையாமல் அமர்ந்திருந்தான் அவளுடைய கணவன்!

யோசனையில் சுளித்திருந்த அவனது புருவங்களை, நல்ல நேரமோ, கெட்ட நேரமோ, அப்போதைக்கு அவள் அறியவில்லை!

பானுமதி மகள் வீட்டுக்குச் சென்று பத்து நாட்கள் முடியுமுன், திலோவுக்கு வீடு போரடிக்கத் தொடங்கியது. போர் என்பதை விடவும், ஒரு திருப்தியற்ற மனநிலை!

பானுமதி வீட்டில் இருக்கையில், ஆண்கள் அலுவலுக்குச் சென்று விட்டால், மாமியாரும் மருமகளுமாக ஏதாவது பேசிக் கொண்டிருப்பார்கள். பேசிக்கொண்டே தோட்டத்தில் உலாவுவார்கள். இருவருக்கும் பரிமாறிக் கொள்ள நிறைய விஷயங்கள் இருந்தன.

கடை கண்ணிக்குச் சென்று வருவார்கள்.

பானுமதியைப் பார்க்க வருகிறவர்களை, அவள் மருமகளுக்கு அறிமுகம் செய்து வைப்பாள். அவர்களோடு கலகலப்பாகப் பேச்சு நடக்கும்.

சமையல் உள்பட வீட்டு வேலைகளுக்கு ஆட்கள் இருந்த போதும், ஏதேனும் கை வேலைகள் செய்வார்கள். புதுவிதமான பதார்த்தம் எதையாவது, சேர்ந்து சமைப்

பார்கள். சரியாக வந்தால் சந்தோஷம். வராவிட்டால் அதைப் பற்றிக் கொஞ்சம் கிண்டலடித்துக் கொள்வார்கள். மாலை, இரவில் வரும் மகன், தந்தையிடம் என்ன பதார்த்தம் என்று கண்டு பிடிக்கச் சொல்லி, அவர்கள் திணறுவதைப் பார்த்துச் சிரிப்பார்கள்.

இடையிலே கொஞ்ச நேரம் டீ.வி.யும் பார்ப்பார்கள்.

மாலையானால் சித்தரஞ்சன் வந்துவிட, நாள் முழு வதுமே எப்படியோ பொழுது பறந்து விடும்.

இப்படி மாயமாய் மறைந்த ஒரு மாதத்திற்குப் பிறகு, பேச்சுத் துணைக்கே ஆள் இல்லாமல், திலோ இப்போது, பொழுதைக் கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டியிருந்தது.

வேலையாட்களுடன் உட்கார்ந்து கதை பேசுவது சரியில்லை என்று பானுமதியின் வழி காட்டுதலால், திலோ தெளிவாக உணர்ந்திருந்தாள். மொட்டு மொட்டென்று தன்னந்தனியே உட்கார்ந்து நேரம் போக்க நேர்ந்ததால், மாலையில் கணவன் வரவுக்காக இரு மடங்கு ஆவலுடன் காத்திருக்கலானாள்.

மாமியார் பானுமதியிடம் பேசியது போல, தன் சின்ன வயது நிகழ்வுகள், படிப்பு, கருத்துகள் என்று மனதில் தோன்றிய அனைத்தையும், மாலை சித்தரஞ்சன் வரும் வரை அடக்கி வைத்திருந்துவிட்டு, அவனிடம் படபட வென்று பொழிந்து கொட்டுவாள்.

இதில் பெரிய பிரச்சினை என்னவென்றால், ரீங்காரமாய் ஒலித்த இந்தப் பேச்சை முழுதாகக் கேட்பதில், சித்தரஞ்ச னுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லாதிருந்தது.

அன்று இப்படித்தான். அம்மா வழிப் பாட்டிக்கு இப்போது கால் கொஞ்சம் இலகுவாக நடக்க முடிகிற

அளவுக்கு குணமாகி இருப்பதால், இன்னும் கொஞ்சம் நன்றாக ஆனதும், மகளுடைய மருமகனைப் பார்க்க சென்னைக்கு வரப் போவதாகக் கோவையிலிருந்து செய்தி வந்ததாகச் செந்திரு, மகளிடம் போனில் சொன்னாள்.

அதை மகிழ்ச்சியோடு திலோத்தமா கணவனிடம் சொல்லத் தொடங்கினால், அவன் நெற்றியை அழுத்திக் கொண்டு, காபி கேட்டான்.

திலோத்தமாவுக்கு ரொம்பவே ஏமாற்றம்தான்.

எப்போதுமே, இந்த பாட்டிக்கு அவ்வளவாக நடக்க முடியாத நிலைதான். காலை ரொம்பவே சாய்த்துதான் நடக்க முடியும். மொத்தத்திலும், கொஞ்சம் பலவீனமான உடல் நிலைதான். ரோஷக்காரியான பாட்டி, அதனாலேயே வெளியே எங்கேயும் செல்வதே கிடையாது! யாரேனும் கேலி செய்வார்களா? அடுத்தவரிடம் உதவி கேட்க நேர்ந்து விடுமோ என்று எண்ணி, வீட்டிலேயே முடங்கி விட்டவள் அவள்.

அதிலும் வீட்டு மருமகன் மரியாதைக்குரிய உறவு என்பதோடு செந்திருவுக்குத் திருமணமான புதிதில், பெரியவர்களிடையே சிறு மனக்கசப்பும் ஏற்பட்டு விட்டதால், மகளுடைய கணவரின் முன்னிலையில் தன் குறையைக் காட்டிக் கொள்ள விருப்பமின்றி, மகளின் வீட்டுக்கே கூட, அவள் லேசில் சென்றது கிடையாது.

தாயின் மனதை உணர்ந்து, செந்திருவின் ஏற்பாடாக, விடுமுறைக் காலங்களில், பேத்தியும் பேரனும் பாட்டியைப் போய்ப் பார்த்து விட்டு வருவார்கள்.

மணிகண்டன் கண்டு கொள்ளாத பாவனையில் அதற்கு மௌன அனுமதி கொடுப்பார்.

திலோத்தமாவின் திருமணத்தின்போது, செல்வநாய கிக்குக் காய்ச்சல், வேறு வந்துவிட, தாய்மாமா மட்டுமே மனைவியோடு, கல்யாணத்துக்கு வந்து விட்டுப் போனான்.

அப்போதே தாயாரின் காலுக்கு ஏதோ புது மருத்துவம் பார்க்க முடிவு செய்திருப்பதாக சுந்தர், தமக்கையிடம் சொன்னான்தான்.

ஆனால், இப்படிப் பல வகைகளில் முயன்று பார்த்துப் பலனில்லாமல் போயிருந்ததால், இதையும் செந்திரு பெரிதாக எண்ணவில்லை. அத்தோடு, பல்வேறு மருந்து களின் பக்க விளைவுகளால், தாய் இன்னமும் சோர்வாகத் தான் அவள் கருதினாள்.

எனவே, "புது மருத்துவம் என்று அம்மா உடம்பு இன் னமும் அதிகமாக நொந்து விடாமல், பார்த்துக் கொள்ளடா" என்று மட்டும் தம்பியிடம் சொன்னாள் அவள்.

திலோ, நரேனுக்கும் கூட, அதே எண்ணம்தான்.

ஆனால், பாட்டிக்கு குணமாவதாகக் கிடைத்த தகவல், திலோத்தமைக்குக் குதூகலத்தை அளித்திருந்தது.

இந்தச் செய்தி, கணவனுக்கும் மகிழ்ச்சியைத் தரும் என்பது, அவளுக்கு நிச்சயம். அதனால் அவனோடு விஷ யத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று ஆவலாகக் காத் திருந்தால் அவன் தலையை அல்லவா பிடித்துக் கொண் டிருக்கிறான்!

அவன் வலியில் வருந்தும் இப்போது, அவள் எப்படி மகிழ்ச்சியைக் காட்டுவது?

கணவனின் விருப்பம் போலக் காபியைக் கலந்து கொண்டு வந்து கொடுத்த போதும், நினைத்தது போல, நல்ல விஷயத்தை உடனே சொல்ல முடியாது போனது, திலோத்தமாவுக்குக் குறையாகத்தான் இருந்தது!

காபி அருந்திய பிறகும் கூட, அன்று முழுதுமே அவனது முகச் சுளிப்பு மாறாததால், அவளது நல்ல செய்தி, அன்றைக்கு அவள் உள்ளேயே உறைந்து போயிற்று!

அன்றைய மனச் சோர்வுக்கு ஈடு செய்கிறவனைப் போல, மறுநாள் சித்தரஞ்சன் மனைவியைக் கூட்டிப் போய் ரூபியில் ஒரு நகை செட் வாங்கிக் கொடுத்தான்.

அதற்கு முந்திய வாரம் வாங்கிய சேலைக்குப் பொருத்த மாக வாங்கியதாக, அவன் காரணம் சொல்லவும், திலோவுக்குக் குபீர் சிரிப்பு வந்தது!

குளிர்பானம் குடிப்பதற்காக 'ஸ்டிரா' வாங்கிவிட்டு, அப்புறமாக குளிர்பானம் வைப்பதற்காக ப்ரிட்ஜ் வாங்கிய தோழியின் கதை பொருத்தமாக நினைவு வர, அதனால் பொங்கிய சிரிப்பு. விஷயத்தைச் சொல்லவும், ரஞ்சனும் கூடச் சேர்ந்து நகைத்தான்.

சிரித்தாலும், ''நகைக்காக சேலையோ, அன்றி சேலைக் காக நகையோ, பெரிது சிறிது இரண்டையும் வாங்கப் பணம் இருக்கும்போது, எதை, எப்போது வாங்கினால் என்ன? விருப்பம் போலச் செலவு செய்வது குறித்து சந்தோஷப்பட வேண்டியதுதானே?'' என்றான் அவன். ''சொல்லு, இன்று இந்த நகை வாங்கியது உனக்கு சந்தோஷம்தானா, இல் லையா?''

''சரிதான், சேலையும், நகையுமாக கணவர் வாங்கிக் கொடுத்தால், அது ஒரு தனி மகிழ்ச்சியாகத்தானே இருக்கும்? இல்லையென்று எப்படிச் சொல்லுவேன்?'' என்று மந்தகாசப் புன்னகையோடு பதிலிறுத்தாள் மனைவி.

''பரவாயில்லை! உண்மையை ஒத்துக் கொண்டாயே அதுவே எனக்கும் மகிழ்ச்சிதான்!'' என்றான் அவன்.

மகிழ்ச்சி என்றுதானே, சொன்னான்? ஆனாலும், சற்று முன் இருந்த குதூகலம் சற்றுக் குறைந்து விட்டாற்போல, திலோத்தமா உணர்ந்தாள்.

எதனால் இருக்கும்?

யோசித்துப் பார்த்தும் புரியாமல் போகவே, வாயிலில் நின்ற ஒரு குழந்தையைப் பார்த்ததும் மனதில் ஏக்கம் தோன்றி யிருக்கும் என்று எண்ணிக் கொண்டாள் திலோத்தமா.

ஆனால், இன்று கணவனிடம் சொல்ல முடியாதே!

இன்னமும் சில பல நாட்களில், கணவனிடம் சொல்ல முடியாத விஷயங்களை விடவும், சொல்ல வாய்ப்பில்லாது போனவை வேகமாக அதிகரித்தன.

காரணம்... என்னவென்றே திலோவுக்குப் புரியவில்லை.

அவர்களிடையே புகுந்த வீட்டு மனிதர்களின் தலை யீடு கிடையாது. அந்த வகையில், அவள் ரொம்பவே கொடுத்து வைத்தவள்தான்.

இந்த நாட்டிலேயே இல்லாத நாத்தனார்! அவ்வப்போது பேசும்போதும், கணவன் மனைவிக்கிடையே இப்படி, அப்படி என்று கதை கட்டிக் குட்டை குழப்புகிற பழக்கம் அவளுக்குக் கிடையாது.

மாமனார், மாமியாரைப் பற்றியோ கேட்கவே வேண் டாம்! அவளை இன்னொரு மகளாகவே நடத்தினார்கள்.

எனவே, அவர்களில் யாருமே திலோவுக்கு பிரச்சினை ஆவதற்கு வழியில்லை.

சித்தரஞ்சனும் மனைவியிடம் மிகுந்த அன்புள்ளவனே!

பின்னே அவனோடு விருப்பம் போலப் பேச முடியாமல் போவானேன்?

பிரச்சினை என்றால், அது அப்படித்தான் என்று முயற்சி யின்றி, விட்டு விடுகிற பழக்கம் திலோத்தமாவுக்குக் கிடையாது.

அப்படி அவள் விட நேர்ந்தது. குழந்தை விஷயம் மட்டும்தான்.

பிள்ளைச் செல்வம் பற்றிய பேச்சு வார்த்தைக்கே ரஞ்சன் இடம் கொடுக்காவிட்டாலும், அதற்கும் திலோ தன் னளவில் யோசித்து, ஒரு விளக்கம் கண்டுதான் வைத் திருந்தாள்.

இப்போதும் அதே போல யோசித்தாள்.

சித்தரஞ்சனோடு மனம் கொண்ட மட்டும் பேச முடி யாமல் போவது எப்படி?

எந்தெந்த தருணங்களில், அவர்களது உரையாடல் தடைப்பட்டுப் போகிறது என்று ஆராய்ந்தபோது, மூன்று விடைகள் அவளுக்குக் கிடைத்தன. ஒன்று, ரஞ்சன் அடிக் கடி மும்முரமாக டீ.வி. பார்த்தான். அடுத்தது, அடிக்கடி செல்லில் பேசிக் கொண்டிருந்தான். மூன்றாவதாக, அவனுக்கு அடிக்கடி தலைவலி வந்து காபி கலந்து வரச் சொல்லிக் குடித்தான்!

ஆக, மூன்று விதமான தடைகளுமே, கணவன் சம்பந் தப்பட்டவைதான். அதாவது, அவனது செயல்களால் மட்டுமே நேர்ந்தவை!

அப்படியானால்... ஒரு கணம் அவளுக்கு மூச்சடைத்துப் போயிற்று!

தன்னோடு இலகுவாகக் கலந்து பேசக் கணவனுக்குப் பிரியமில்லையோ என்று நினைக்கக் கூட திலோத்தமா வால் முடியவில்லை!

இல்லை, இல்லை, அப்படி இருக்கவே இருக்காது என்று தனக்குள்ளே உருப்போட்டவள், ஓடிப்போய் அல மாரியைத் திறந்து பார்த்தாள்.

எத்தனை நகைகள்! சேலை! சுடி, சல்வார் செட்கள்! மற்றும் பல்வேறு பொருட்கள்!

அவளுக்குப் பிடிக்கும், அவளுக்கு நன்றாக இருக்கும் என்று பார்த்துப் பார்த்து வாங்கப்பட்டவை! அவளுக்குப் பொருத்தமற்று, வெறும் காசைக் காட்டுமாறு வாங்கப் பட்டவை, அவற்றுள் எதுவுமில்லை!

அன்பில்லாதவன் இந்த அக்கறை காட்ட மாட்டான்!

மேலும், சித்தரஞ்சன் அவளோடு பேசி சிரிப்பதே இல்லை என்று சொல்ல முடியாதே! வார்த்தைக்கு வார்த்தை மல்லுக்கட்டி, ஒருவர் காலை ஒருவர் வாரி, கடைசியில் அடக்க முடியாத சிரிப்பில் எத்தனை உரையாடல்கள் முடிந்திருக்கின்றன! அவனது ஆண்மை மிக்க கலகல நகைப்பை எத்தனை முறை கேட்டுத் தன்னை மறந்து ரசித்திருக்கிறாள்.

மாலையானால், ஆவலாகத்தானே வருகிறான்? அணைக் கிறான்?

பின்னே? வேறு என்ன?

திலோத்தமா இன்னமும் ஆழமாக யோசித்தாள்!

ஒருவேளை, எல்லாமே தற்செயலாக இப்படி அமைந் தனவோ என்று எண்ணிப் பார்த்தவளுக்கு, அப்படியில்லை என்று தெளிவாகத் தெரிந்தது.

பேச்சைத் தொடர முடியாதபடி, பல்வேறு தடைகளைச் சித்தரஞ்சன் ஏற்படுத்தவே செய்தான் என்பதே உண்மை

என்று மனதுள் உறுதியானதும், எப்போதெல்லாம் அவன் அப்படிச் செய்தான் என்று யோசித்துப் பார்த்தாள்.

ஏதோ ஒன்று பிடிக்காமல் போனால்தானே, தடுக்கத் தோன்றும்?

அது என்ன என்று தெளிவானதும், அதற்கான அவனது காரணத்தை அறிந்தாக வேண்டும் என்ற எண்ணத்துடன், அவனிடம் கடந்த காலப் பேச்சை எடுத்தாள்.

சித்தரஞ்சனின் கை நெற்றியில் பதியவும் ''இந்தப் பேச்சை எடுத்தாலே தலைவலி, காபி என்று தொடங்கு கிறீர்கள், ஏன்?'' என்று அவனிடம் நேரடியாகக் கேட் டாள்!

நெற்றியை வருடத் தொடங்கிய அவனது கை, அங் கிருந்து மெல்ல விலகி, மடியில் விழுந்தது!

திரும்பி அவளை நேராகப் பார்த்துச் சொன்னான் ''இன்னும் கொஞ்சம் நாளானால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால், நீ பெரிய கெட்டிக்காரியல்லவா? விரைவிலே கண்டு பிடித்து விட்டாய்!'' என்று சித்த ரஞ்சனது பதிலும், குரலும் அவளுள் பல அதிர்ச்சிகளை ஏற்படுத்தின!



## 6

**தி**லோத்தமா அதிர்ந்து, 'அதிர்ந்து என்பது' ரொம்பவும் எளிதான வார்த்தை! அதைவிட, திலோத்தமா பிரமித்து நின்றாள் என்றால் பொருத்தமாக இருக்கும்.

இதுதான், குறிப்பிட்ட இந்தக் காலக்கட்டத்தில் நடந்தவைகளை தான் கணவன் தவிர்க்க முயல்கிறான் என்ற சந்தேகம்... கிட்டத்தட்ட உறுதிப்பட்ட சந்தேகம் அவளுக்கு இருக்கத்தான் செய்தது.

ஆனால், தவிர்க்கப்பட வேண்டிய பெரிய விஷயமாக எதுவும் நடந்திருந்ததாக அவளுக்குத் தோன்றாததால், அது பற்றிய முழு உறுதியும் இல்லாதிருந்தது!

எனவே தன் கேள்வியை கணவன் மறுக்கக் கூடும் என்ற ஐயமும்... அந்த ஐயத்தை அவளது ஆசை மனது விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு இருந்தது எனலாம்!

அத்தோடு, அவன் ஆசைப்பட்டுத்தானே அவளை நாடி வந்து மணந்தான்?

அப்புறமென்ன என்பதும்!

ஆனால் அவளது குற்றச்சாட்டைப் பெயரளவாகக் கூட, ஒரு சிறு மறுப்புமின்றி, அவன் ஒத்துக் கொண்டதே, அவளுக்கு அதிர்ச்சிதான்.

அத்தோடின்றி, அவள் கெட்டிக்காரத்தனமாகக் கண்டு பிடித்ததாகப் பாராட்டிய விதமும், பயன்படுத்திய வார்த்தைகளும், குரலும், உண்மையில் அவளை இளக்காரம் அல்லவா செய்தன?

ஒரு நேசக் கணவனாக இருந்து கொண்டு, இப்படி எப்படிப் பேச முடியும்? அவன் நேசக் கணவனாக இருந்ததே இல்லை என்றல்லவா, சொல்லாமல் சொல்கிறான்!

காதலிக்காமலே, காதல் செய்தானாமா? என்ன அநியாயம்?

இதை, இப்படியே விட முடியாது! விடவும் கூடாது.

ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு, ''புரியவில்லை ரஞ்சன்'' என்றாள் அவள். கலக்கமும், திகைப்புமாக விரிந்த விழிகளுடன்.

''ஏனோ?'' என்று லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன்.

இந்தப் பேச்சுக்குச் சித்தரஞ்சனும் தயாராகத்தான் இருந்தானோ? என்றோ ஒரு நாள் இது நடக்கும் என்று எதிர் பார்த்து...

ஆனால், என்ன பெரிய விஷயம் என்பது போன்ற அவனது அக்கறையற்ற போக்கு இன்னமும் மனதைக் கலக்க ''பழைய விஷயம்... கோவை பற்றிய பேச்சை நீங்கள் ஏன் தவிர்க்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை, ரஞ்சன்'' என்றாள் கவலையோடு.

''ஏன்? அது புரியாததால், இப்போது உனக்கு என்ன குறை?''

நிச்சயமாக, இது உதாசீனம்தான்! இந்த உதாசீனம், அவளிடம் கூடாதே!

நிமிர்ந்து ''குறையாக உணர்வதால்தானே கேட்கிறேன்'' என்றாள் அவள் தெளிவாக.

''இது கதை! நீ கனவிலும் நினைத்திருக்க முடியாத நகைகள், துணி மணிகள், வாழ்க்கை வசதிகள்! இதற்கு மேலும் குறையா?''

''உண்மையாகவே, இவையெல்லாம் வேண்டும் என்று நான் கனவு கண்டதில்லைதான். அதனால் இவைகளுக் காக நான் ஏங்கியதும் இல்லை. ஆனால்...''

''முழுப் பொய், இதையெல்லாம் நான் வாங்கித் தரும் சமயங்களில், நீ சந்தோஷத்தில் பூரித்துப் போகவில்லை?

இல்லை என்று பொய் சொல்லாதே. அப்போதெல்லாம் உன் முகத்தை கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்'' என்றான் சித்தரஞ்சன்.

'கவனித்துக்' கொண்டிருந்தானா? காதல் கணவனாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தானா? என்று அவள் நினைத்து மகிழும்போது, அவன் ஆராய்ச்சிக் கண்ணால் அலசிக் கொண்டிருந்தானாமே!

''என்ன சொல்லுகிறீர்கள், ரஞ்சன்? கணவன் ஆசையாக ஒன்றை வாங்கிக் கொடுத்தால், ஒரு பெண்ணுக்கு சந் தோஷமாக இராதா? சிரிக்காமல், அழவா செய்வாள்? இதைப் போய்ப் பெரி...''

அவளது பேச்சைக் கேளாததாய் ஒதுக்கி, ''அதிலும், இப்படி விலை உயர்ந்தவைகளை வாங்கித் தரும்போது!'' என்று அவன் அதிலேயே நின்றான்.

அன்புச் செய்கை என்று அவள் நினைத்தது தவறு என்று, அவனே சொல்லும்போது, வேறு விளக்கம் என்ன இருக்கக்கூடும்?

அவ்வப்போது மனதில் லேசாக உறுத்தி, பெரிதாக ஒன்றுமில்லை என்று அவளால் ஒதுக்கி மறைக்கப்பட் டவைதான் நிஜமா?

எல்லாமே தலைகீழாகிறதே! இதை எப்படி ஏற்பது?

தன்னை விளக்க முயன்றவளாக, ''நீங்கள் கண்ணாடி வளையல்களை வாங்கித் தந்திருந்தாலும், அப்போதும் நான் சந்தோஷமாகத்தான் சிரித்திருப்பேன், ரஞ்சன். நீங்கள் எனக்காக வாங்கித் தருகிறீர்கள் என்பதுதான் எனக்கு முக்கியம்'' என்று எடுத்துச் சொன்னாள் திலோ.

''சின்னத் திரையிலோ, சினிமாவிலோ கேட்டு ரசிக்க வேண்டிய வசனம். அதுவும் கூடக் கதாநாயகி சொல்ல வேண்டியது, நீ சொன்னால் எடுக்கவில்லை!'' என்றான் அவன், சிறு வெறுப்புடன்.

அவள் கதாநாயகி இல்லை என்றால் வில்லியா?

''உங்களுக்கு என்னைத் தெரியவே இல்லையே, ரஞ்சன்... சொல்லப் போனால், நானும், உங்களை அறிந்து கொள்ளவில்லை என்றுதான், இப்போது எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

''அதனால் இப்போது என்ன கெட்டு விட்டது? எனக்கு இந்த வாழ்வு சம்மதம்தான்.''

''எனக்கு இல்லையே ரஞ்சன். மனதளவில் எங்கோ தூரத்தில் இருந்து கொண்டு, இது என்ன வாழ்வு? ஆனால், இப்படி எதற்காக? ஏன்...'' என்று வேதனைக் குரலில் வினவினாள் திலோத்தமா.

சட்டெனச் சித்தரஞ்சனின் முகம் சிவந்து, சீறியது ''ஏனா? ஏன் என்று உனக்குத் தெரியாது? நதி மூலம், ரிஷி மூலம் பார்க்கக் கூடாது என்பார்கள். இரண்டுமே, அருவருப்பானதாகத்தான் இருக்குமாம்! நம்மது மட்டும் விதி விலக்காகுமா? இதுவும் அப்படித்தான்! அதனால் கிண்டி கிளறாமல் இருப்பது, எல்லோருக்கும் நல்லது! முக்கியமாக உனக்கு!'' என்று வெறுப்பை உமிழ்ந்தான் சித்தரஞ்சன்.

''என்ன அருவருப்பு? எதற்காக?'' என்று அவள் புரியாமல் கேட்கவும் அவன் கோபமே உருவானான்.

''என்ன திண்ணக்கம் இருந்தால், இப்படி என்னையே கேட்பாய்? உனக்கு அப்படியா எல்லாம் மறந்து விட்டது?

ஓ... உன்னளவில் உப்புப் பெறாத விஷயம் என்று மறந்...து போய் விட்டாய், போல! கஷ்டப்பட்டேனும், கொஞ்சம் நினைவுபடுத்திப் பாரம்மா!'' என்றபோது, ரஞ்சனின் எகத்தாளத்தில் பழைய உதாசீனமும், ஆத்திரமும் வெளிப் பட்டன.

நினைவு படுத்துவதா?

என்றேனும், மறந்தால் அல்லவா, நினைவு படுத்து வதற்கு? ஆனால், அவள் அறிந்த வரையில், இவன் இப்படி ஆத்திரப்பட அதில் எதுவும் யோசித்தது இல்லையே!

ஆயினும், ரஞ்சனின் குரலில் இருந்த எகத்தாளம் சினமூட்ட ''ஒருவேளை, விஷயம் உப்புப் பெறாத அளவு அலட்சியப்படுத்தத் தக்கது என்பதாலேயே மறந்ததோ என்னவோ'' என்றாள் அவள் பதிலுக்கு.

சித்தரஞ்சனின் கண்கள் கனன்றன. ''ஓ, அவ்வளவு திமிரா? கொஞ்சம் மூளையைச் சிரமப்படுத்தி, யோசித்துப் பார். மறந்ததெல்லாம் கட்டாயம் நினைவு வரும். நினைவு வந்த பிறகும், உனக்குத் தேவை என்றால் பிறகு பேசலாம்!'' என்று கடுப்புடன் கூறிவிட்டு, அங்கிருந்து வெளியேறினான் அவன்.

ஆண்கள் என்றால், இது ஒரு வசதி. பேசப் பிடிக்க வில்லை என்றால், செருப்பை மாட்டிக் கொண்டு, எந்த நேரமானாலும் வெளியே கிளம்பி விடலாம், என்று திலோத்தமா ஆத்திரத்துடன் நினைத்தாள்.

அவன் பக்கம் நியாயம் இருந்தது என்றால், பேசி, அதை நிலை நாட்ட வேண்டியதுதானே?

கணவன் சென்ற வழியை முறைத்துப் பார்த்தவளுக்கு, அந்தக் கோபம் அதிக நேரம் நிலைக்கவில்லை.

என்ன இது? ஏன் இப்படி என்று மனம் குழம்பித் தவித்தது.

ஏனெனில், அவன் யோசித்துப் பார்க்கச் சொன்னானே, அவளைப் பொறுத்த வரையில், அவை மிக அழகானவையே, பலப்பல முறை, கனவிலும் நினைவிலுமாகக் கண்டு, கண்டு மகிழ்ந்தவை!

அவளுடைய ரஞ்சனுக்கும், அவை அழகானவைகளாகவே இருந்திருக்கும் என்றுதான் அவள் அத்தனை நாட்கள் நினைத்திருந்தாள்.

அவனாக, அந்த நாட்களின் பேச்சை எடுப்பான் என்று கூட எதிர்பார்ப்புதான்.

இன்றைய ஆசை வேகங்கள் சற்று அடங்கிய பிறகு, அமைதியாக உட்கார்ந்து, பழங்கதை பேசுகிற காலத்துக்காக ஒதுக்கி வைத்திருக்கிறானோ என்றுகூட, அவள் எண்ணியதுண்டு.

அப்போது, அவளது ஒரு சில வார்த்தைகளுக்காக நன்றி தெரிவிப்பாள் என்றும்கூட! ஆனால் அவனானால்...

நன்றி தெரிவிப்பது இருக்கட்டும். அவளை வார்த்தைகளால் குத்திக் குதற அல்லவா துடிக்கிறான்! என்ன கொதிப்பு! என்ன கோபம்!

எங்கே தப்பாகிப் போயிற்று? அவன் எதைத் தப்பாக எடுத்துக் கொள்ள முடியும்?

கணவன் சொன்னது போல, பழைய கதையை யோசித்துப் பார்த்தால், ஒரு வேளை திலோவுக்கு விடை கிடைக்குமோ?

ஆனால், சித்தரஞ்சன் இவ்வளவு ஆத்திரப்படும்படியான எதை, அவள் மறந்திருக்கக் கூடும்?

ஏனெனில், அவனது ஆத்திரம் நடிப்பல்ல. நிஜம்!

அவனது குழந்தை மறுப்புக்கூட, இந்த ஆத்திரத்தினால் வந்ததோ என்று ஓர் எண்ணம் தோன்றவும், தீப்பற்றினால் போல, அவளது அடிவயிறு சட்டெனக் காந்தியது!

இல்லை, இதை முழுதாக சிந்தித்துப் பார்த்தே ஆக வேண்டும்!

எங்கே, யார் மேல் தப்பு என்று கண்டு பிடித்து, பிரச் சினையைத் தீர்த்தே ஆக வேண்டும்! உடனே!

திலோத்தமா பழசை எண்ணிப் பார்க்கத் தொடங்கிய போது, அடிக்கடி நினைத்துப் பார்த்த பழக்கத்தினாலோ என்னவோ, யோசிக்கும் முயற்சிக்கே அவசியமே இல்லாமல், அந்த நாளைய சம்பவங்கள் திலோவின் மனத் திரையில் ஒரு படச் சுருள் போலத் தடையின்றி ஓடலாயின!

எப்போதுமே, முழுப் பரீட்சை முடிந்த பின், திலோத்த மாவும், நரேந்திரனும், கோவைக்குப் பாட்டி வீட்டுக்குச் செல்வது வழக்கம்தான்.

விடுமுறை முழுவதும் அங்கே இருக்க மாட்டார்கள். ஆனால், குறைந்தது இரு வாரங்கள்.

திலோத்தமா கல்லூரியை எட்டி, நரேன் பள்ளியில் இருக்கையில் இருவரும் ஒன்றாகப் போவது நின்றது. ஆனால், எப்படியும் ஒரு பதினைந்து, இருபது நாட்கள் கோவை வாசம், இருவருக்கும் நிச்சயம்.

அத்தையும் அன்பாகவே இருந்ததால், இந்தப் பழக்கம் தடையின்றித் தொடர்ந்தது.

ஆனால், அவளது கல்லூரிப் படிப்பு முடிந்த அந்தத் தருணத்தில் மட்டும் தான், திலோ, தன் தாய் வழிப் பாட்டி

வீட்டில், அதாவது தாய் மாமன் வீட்டில் இரண்டு மாதங்கள் தொடர்ந்து தங்கியது!

அந்த மறக்க முடியாத இரு மாதங்களில்தான், அவள் ரஞ்சனைச் சந்தித்ததும் பழகியதும்!

அந்த முறை, அவள் இரண்டு மாதங்கள் அங்கே தங்குவதற்கு ஒரு காரணம் இருந்தது.

மாமா சுந்தர் பணிபுரிந்த நிறுவனத்தில், இரண்டு மாதங்களில் ஒரு 'ப்ராஜெக்டை' முடித்து வருமாறு, அவனை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக இருந்தது. குடும்பத்துடன்.

வேலைக்காரியைக் கூடவே வைத்துக் கொண்டு, சமாளித்துக் கொள்வதாகத் தாயார் எவ்வளவு சொல்லியும், அன்னையைத் தனியே விட்டுச் செல்ல, அவனுக்கு மனமில்லை! அதே சமயம், வெகு அபூர்வமாக கைச்செல வற்றுக் கிடைத்த வெளிநாட்டு வாய்ப்பை வேண்டாம் என்று கைநழுவ விட்டு விட்டு, வீட்டில் இரு என்று மனைவியிடம் சொல்லவும், அவனுக்கு வாய் வரவில்லை!

அவளும் மாமியாருக்குப் பணிபுரிவதில், அன்றுவரை, ஒரு குறை வைத்தவள் அல்ல. வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், மனைவிக்கு ஆசை என்பது, சுந்தருக்கு நன்றாகவே தெரிந்தது!

எல்லாவற்றையும் தமக்கையிடம் அவன் சொல்லிப் புலம்பியபோது, தேவைப்பட்ட உதவி, தமக்கை வீட்டில் இருந்து வரும் என்று, சுந்தர் சற்றும் எதிர்பார்க்கவில்லை!

ஆனால் அதுதான் நடந்தது.

படிப்பு முடியும் முன்பாகவே 'காம்பஸ் செலக்ஷனில்' ஒரு பெரிய நிறுவனத்தில், திலோத்தமாவுக்கு வேலை

கிடைத்திருக்கிறது. தேர்வு முடிவு வந்த பிறகு, வேலையில் சேர்வதற்கு அவகாசமும் கொடுத்திருக்கிறார்கள்.

அந்தக் காலத்தைப் பயன்படுத்தித் தன் தாய் மாமன் குடும்பத்துக்கு உதவ திலோத்தமா முன் வந்தாள்.

குடும்பத்துடன் வெளிநாடு சென்று வரும் வரை, பாட்டிக்குத் துணையாகக் கோவையிலேயே தங்கியிருப்பதாக அவள் கூறவே, பிரச்சினையற்று, சுந்தர் குடும்பம் கிளம்பிச் சென்றது.

அப்போதும், வீட்டோடு ஒரு வேலைக்காரி, தினமும் இரு முறை வந்து தாயின் உடல் நலம் பேணுவதற்கு நர்ஸ் என்று, எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டுத்தான், சுந்தர் நாடு விட்டுக் கிளம்பினான்.

அப்படிப் பாட்டியோடு தங்கியிருந்த காலத்தில்தான், திலோத்தமா, சித்தரஞ்சனைச் சந்தித்தது.

ஆனால், அப்போது அவனது முழுப் பெயர் சித்தரஞ்சன் என்று அவளுக்குத் தெரியாது! ரஞ்சன் என்று, அவன் சொன்னபோது, அந்தப் பெயரே அவளது நெஞ்சிலும் குடியேறியது.

என்ன அழகான, பொருத்தமான பெயர் என்று உள்ளூர ஆச்சரியப்பட்டாள்!

மாமாவையும் அத்தையையும் விமான நிலையத்தில் வழியனுப்பிவிட்டு வந்து, அப்போது மூன்று தினங்கள் முடிந்திருந்தன.

வெளியே காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றாலும், மகனின் பிரிவு, பாட்டியை வாட்டி வதைப்பது, திலோவுக்கு நன்றாகவே புரிந்தது!

சோர்ந்து கிடந்தவளுக்குச் சாப்பாடெல்லாம் தன் கையினாலேயே ஊட்டி விட்டு, முகம் கழுவித் துடைத்து, சாய்ந்தாற்போல உட்கார வைத்துவிட்டு, பாட்டிக்கு என்று வாசக சாலையிலிருந்து எடுத்து வந்திருந்த சில புத்தகங் களில் ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

சற்றுப் பொறுத்துப் பார்த்தால், சாய்வு நாற்காலியி லேயே பாட்டி தூங்கிப் போயிருந்தாள்.

பாட்டி இரவில் சரியாகத் தூங்கவில்லை என்று தெரிந் திருந்ததால், இப்போது அதை ஈடு கட்டட்டும் என்பது திலோத்தமாவுக்கு.

பாட்டியின் கையில் இருந்த புத்தகத்தை மெல்ல விலக்கி, பக்கம் குறித்து மூடி வைத்துவிட்டு நிமிர்ந்தால், வாயில் அழைப்பு மணி அடித்தது!

அச்சோ! பாட்டி விழித்து விடக் கூடாதே என்று, மீண் டும் மணியை அழுத்தி விடுமுன், ஓடிப்போய் கதவைத் திறந்தாள் திலோ.

அப்போதுதான் திலோத்தமா முதன் முதலாக ரஞ் சனைப் பார்த்தது!

அவள் அஞ்சியது போலவே மீண்டும் அழைப்பு மணியை அழுத்த உயர்ந்த கை அப்படியே நிற்க வியந்த பார்வையுடன் வெளியே நின்று கொண்டிருந்தான் அவன்!

மணியை அழுத்தி அழைத்துவிட்டு, மணிச் சத்தம் கேட்டு வந்து கதவைத் திறந்தால், அதிலென்ன ஆச்சரியம் என்று திலோ எண்ணி முடிக்கு முன், அவன் வேகமாகப் பேசினான்.

''என்ன மேடம், இப்படி டக்கென்று கதவைத் திறந்து விட்டீர்கள்'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அவன்.

மறை கழன்றிருக்குமோ என்பது போல அவனை ஒரு தரம் பார்த்து விட்டு ''திறக்கச் சொல்லித்தானே, அழைப்பு மணியை அழுத்தினீர்கள்? அப்புறம், அதிலென்ன கேள்வி?'' என்று வினவினாள் அவள்.

''அதில்லை மேடம், அழைப்பது யார், என்ன என்று தெரிந்து கொள்ளாமல், கதவைத் திறந்து விட்டீர்களே! அதைச் சொன்னேன்'' என்றான் அவன் மீண்டும்.

என்னடா இது, இவன் சொன்னதையே சொல்லிக் கொண்டு... என்று உள்ளூர அலுத்தபடி ''தெரிந்து கொள்வதற்காகத்தானே, கதவைத் திறப்பது?'' என்றாள் அவள் நிதானமாக.

இது கூடத் தெரியவில்லையே என்கிற நிதானம்!

''அதில்லை மேடம். வெளியே நிற்பது யார் என்று தெரியாமலே கதவைத் திறந்து விட்டீர்களே...'' என்றான் அவன் மறுபடியும்.

ஆனால், எரிச்சலுற்று, அவள் பேச வாய் திறக்கு முன், ''காலம் கெட்டுக் கிடக்கிறது! மேடம்! கதவுக்கு இந்தப் பக்கம் நிற்பது திருடனாக, கொள்ளையனாக... கொலை காரனாகக் கூட இருக்கலாம். நீங்கள் இப்படி ஒரு மணியடிப்புக்கெல்லாம் கதவைத் திறந்தீர்கள் என்றால், இது போலக் குற்றங்களைச் சிவப்புக் கம்பளம் விரித்து, வரவேற்பது போல ஆகாதா?'' என்று தொடர்ந்து பேசினான் அவன்.

மேடையும் ஒலிபெருக்கியும் கிடைத்தால், நாள் முழுக்கப் பேசுவான் போல இருக்கிறதே என்று

எண்ணினாலும், அவன் கூறியது மெய்தானே என்று தோன்றிவிட, ''அதுவும் சரிதான்'' என்றவாறு சட்டெனக் கதவை மூடினாள்.

''ஐயோ மேடம், நான் அப்படியில்லை. கொஞ்சம் கதவைத் திறவுங்கள்'' என்று மறுபடியும் மணியை அடித்தான் அவன்.

எரிச்சலுடன் கதவைத் திறந்து ''பாட்டி தூங்குகிறார்கள் மணியை அடித்து அவர்களை எழுப்பி விட வேண்டாம்'' என்றாள் அவள்.

''பார்த்தீர்களா? இருக்கும் ஒரே பாட்டியும், அதாவது பெரிதாக துணை என்று உதவிக்கு வர முடியாத வயதில், கூட இருப்பவரும் தூங்குவதாக, அந்த விவரத்தையும் சொல்லி விட்டீர்களே?''

விட்டால், விரட்டிக் கொண்டே இருப்பான் போல?

''பாட்டி மட்டும்தான் துணை என்று, உங்களுக்கு யார் சொன்னது?'' என்று மிடுக்குடன் கேட்டாள் திலோ.

ஆனால், கேட்கும்போதே, சட்டென பின்வாங்கிக் கதவைச் சாத்துவதற்கு வசதியாக ஓரடி பின்னேயும் எடுத்து வைத்தாள்.

அவள் சந்தேகமாகப் பின் வாங்கவும் இரண்டடி பின்னே போய், கைகளை உயரே தூக்கி நின்றான் அவன் ''பாருங் கள்... நான் இவ்வளவு தள்ளி நின்றுதான் பேசுகிறேன். அதனால் நீங்கள் தைரியமாக அங்கே நின்று, என் பேச்சை கேட்கலாம் சரிதானா? இப்போது நாம் பேசிய விஷயத் துக்கு வருவோம். உங்கள் வீட்டில் நீங்களும் வயதான ஒரு பாட்டியும் மட்டும்தான் இப்போது இருக்கிறீர்கள் என்பது, எனக்கு நிச்சயம்! சற்றுப் பொறுங்கள். இந்த முடிவுக்கு

எப்படி வந்தேன் என்று சொல்லி விடுகிறேன். நான் சொல்லி முடித்து விடுகிறேன். உள்ளே வேறு யாரும் இருந்திருந்தால், இரண்டு அழைப்பு மணிச் சத்தத்துக்கு மட்டுமின்றி, யார் என்று பார்க்கப் போன உங்களை இன்னமும் காணோமே, என்ன விஷயமோ என்று வந்து, எட்டிப் பார்த்திருப்பார்கள் இல்லையா? வேலைக்காரி மாதிரி ஒருத்தி இந்த வீட்டில் இருந்து போனதைச் சற்று முன் பார்த்தேன்...''

''ஓ...'' என்று திலோ சற்றுத் திகைத்தாள்.

அவன் சொன்னது எல்லாமே சரிதானே? நிறைய பேர், திருடர்களிடம் மாட்டுவது, இப்படித்தான் போலும்! இவன் நல்லவனாக இருக்கப் போய்...

ஆனால், அதுவும்தான் என்ன நிச்சயம்?

திகைப்பைக் காட்டிக் கொள்ளாமல், எச்சரிக்கையுடனேயே நின்று, ''இந்தப் பகுதி பாதுகாப்பானது என்று சொல்வார்கள். சட்டென்று அப்படி அன்னியர் யாரும் உள்ளே வந்து விட முடியாது என்று மாமா சொல்லுவார்'' என்று ஒரு விளக்கம் சொல்ல முயன்றாள் அவள்.

அன்றைக்கே, சித்தரஞ்சன் தன்னை தவறாக... அசட்டு ஏமாளியாகக் கூட எண்ணி விடக் கூடாது என்ற அக்கறை அவளுக்கு இருந்திருக்கும் போலும்! மற்றபடி, அவசரமாக கதவை மூடிக் கொண்டு, பாதுகாப்பாக உள்ளே போய் விடாமல், அங்கேயே நின்று அன்னியனான அவனிடம் பேச்சுக் கொடுப்பாளா?

என்னதான் எச்சரிக்கையுடனேயே நின்றாலும்?

''என்னங்க பெரிய பாதுகாப்பு? இதோ நான் உள்ளே வரவில்லை? இது போல இன்னொருவர் வர எவ்வளவு நேரமாகும்?''

இதற்கு மேல் இங்கே நிற்பது நிச்சயமாக தப்பு! இவனே எப்படி என்று யாருக்குத் தெரியும்?

மனம் நினைத்ததை, அவளது கண் சொன்னதோ?

''நான் இவ்வளவு தூரம் தள்ளித்தானே நிற்கிறேன்? இவ்வளவு நேரம் பொறுத்தீர்கள். இப்போது சற்றுக் காது கொடுத்து. நான் இனிமேல் சொல்லப் போவதையும் கேட்டு விட்டுப் போங்கள். பாருங்கள், வந்திருப்பது யார் என்று அறிவதற்கு வீட்டை விட்டு வெளியே வந்து, ஆபத்திலும் மாட்டிக் கொள்ளவும் வேண்டாம். யார் என்று பார்க்க முடியாததாலேயே, முக்கியமான யாரையும் கதவைத் திறக்காமல் விரட்டி விடவும் வேண்டாம். உங்களுக்குத் தேவை எங்கள் 'கனவு இல்லம்' நிறுவனத்தின் சில பாதுகாப்புக் கருவிகள் மட்டுமே! அவை என்னென்ன, என்னென்ன வகையில் பாதுகாப்பு தருகின்றன என்பது பற்றிக் கூறவே, இப்போது நான் வந்திருக்கிறேன்!'' என்று தன் விற்பனை பேச்சைத் தொடங்கினான் சித்தரஞ்சன்.

'கனவு இல்லம்' கட்டிட நிறுவனம் பற்றி, முதல் முதலாக அறிந்தது, அப்போதுதான்!

கதவைத் திறக்காமல் உள்ளிருந்தபடியே வெளியே நிற்பவரைப் பார்க்க வசதியாக கதவில் பதிக்கப்படும் லென்சைப் பற்றி, அவன் பாதி சொல்லும்போதே, ''திலோத்தமா...'' என்று பாட்டியின் குரல் கேட்டது.

''சாரி, பாட்டி கூப்பிடுகிறார்கள். உங்கள் பொருட்களைப் பற்றி, இன்னொரு நாள் கேட்டுக் கொள்கிறேனே'' என்றவாறே கதவை மூடிக் கொண்டு உள்ளே சென்றாள் திலோத்தமா.

பாதிப் பேசுகையில், இப்படி கதவைச் சாத்திக் கொண்டு, போவது மரியாதை இல்லைதான். ஆனால்,

அன்னியனான அவனை உள்ளே கூப்பிடுவதோ, கதவைத் திறந்தே வைத்து விட்டுப் போவதோ, பெரிய தவறாகி விடக் கூடும் அல்லவா?

தப்போ இல்லையோ, அப்படித்தான் என்று, அவன் சொல்லிக் காட்ட மாட்டானா?

சொல்லிக் காட்டுவான்தானே? அப்படிப்பட்டவன் தான்!

அவனைப் பற்றிய நினைவிலேயே, அன்றைய இரவைக் கழித்தாள் திலோத்தமா!



7

இன்னொரு நாள் என்று திலோத்தமா சொன்னது, முகத்தை முறிக்காமல் அவனைப் போக வைப்பதற் காகத்தான். ஆனால் அவன் 'குறிப்பறிய மாட்டாத நன் மரமாக' மறுநாளே வந்து நிற்பான் என்று, அவளுக்குத் தெரியாது.

அல்லது, செய்யும் தொழிலைத் தெய்வம் என்று கருதுகிறவனாகவும் இருக்கலாம்.

அல்லது... நினைக்கும்போதே சற்று வருத்தமாக இருந்தபோதும், இன்னோர் எண்ணமும் அவளுக்குத் தோன்றியது. ஒருவேளை, இந்த விற்பனையில் கிடைக் கும் 'கமிஷன்' பணம், அவனுக்கு மிகவும் தேவையாகவும் இருக்கலாம்.

மறுநாள் டாண் என்று அதே நேரத்துக்கு வந்து நின்றவனைப் பார்க்கையில் திலோத்தமாவுக்கு, இப்படி யெல்லாம் தோன்றவும், அவனது தோற்றத்தைக் கண் ணால் ஆராய்ந்தாள் அவள்.

அவனது உடை ஒன்றும் மட்டமாக இருக்கவில்லை! காலில் கிடந்த ஷூ கூட, சற்று விலை உயர்ந்ததுதான்.

நல்லவேளை! இவன் ஒன்றும் சாப்பாட்டுக்கே கஷ்டப் பட்டுக் கொண்டு, இந்த வேலையைச் செய்யவில்லை!

அப்பாடி என்று நிம்மதியுற்றவளாக, அவனது பேச்சைக் கவனித்தாள் திலோ.

''உங்களைப் போலத் தனியாக, அதாவது வயது முதிர்ந்தவர்களோடு துணையாக இருப்பவர்களுக்கு இன்னும் சிறப்பான பாதுகாப்பு கருவிகள் கூட வைத்திருக் கிறோம் மேடம்! வாயிலில் நிற்பவரை, உள்ளிருந்தபடியே, திரையில் பார்க்கும்படியான காமிரா இருக்கிறது அதன் லென்சை, இங்கே மறைவாகப் பொருத்தி விட்டால், யார் என்ன என்று உள்ளிருந்தே கண்டு கொள்ளலாம். ஒரு போன் தொடர்பும் வைத்து விட்டால், உள்ளே பாதுகாப்பாக இருந்தபடியே, வெளியே இருப்பவரிடம் பேசிப் போகச் சொல்லிவிடலாம். இவைகளால் உங்களுக்கு அதிகச் செலவு ஒன்றும் ஆகாது. அதிலும், விலை மதிப்பற்ற உயிர், மற்றும் விலை உயர்ந்த பொருட்களுக்கான உறுதியான பாதுகாப்பு என்று எண்ணிப் பார்த்து, இந்தக் கருவிகளை வாங்குங்கள், மேடம்!'' என்று முடித்தான் அவன்.

''சாரி'' என்றாள் திலோத்தமா. ''உங்களிடம் பேசியதில், எனக்கு நிறையத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஆனாலும், என் லாபத்துக்காக உங்கள் நேரத்தை ரொம்பவே வீணடித்து விட்டேன். ஏனென்றால், இது மாமா வீடு. இது

போன்ற முடிவுகள் எல்லாம், அவர்தான் எடுக்க முடியும்'' என்று சிறு வருத்தத்துடனேயே விளக்கினாள் திலோ.

''அவரை வரச் சொல்லுங்கள் அவரிடமும் சொல் கிறேன்.''

''அவர்...'' என்று தொடங்கிவிட்டு, நாவை அடக்கி ''அவரிடம் இப்போது பேச முடியாதே!'' என்றாள் அவள்.

''நாளைக்கு? நாளன்று.''

கண்கள் பளிச்சிட ''ஆகா! மாமா எப்போது திரும்பி வருவார் என்று உங்களிடம் சொல்லுவேன் என்று எண்ணமா?'' என்று கிண்டலாகக் கேட்டாள் அவள்.

ஆனால் ''பார்த்தீர்களா? உங்கள் மாமா ஊரிலேயே இல்லை என்று தெளிவாகச் சொல்லி விட்டீர்களே!'' என்று சிரித்தான் அவன்.

ஒரு கணம் அசடு வழிந்த போதும், கூடச் சேர்ந்து சிரிக்கத்தான் அவளுக்குத் தோன்றியது!

சிரித்து முடித்துவிட்டு, ''வீட்டுக்குத் தலைவரான ஆண் ஊரில் இல்லை என்று வெளி ஆட்களிடம் சொல்லக் கூடாது, தெரியுமா? ஆனால், எங்கள் 'கனவு இல்ல'த்தின் பாதுகாப்புக் கருவிகளைப் பயன்படுத்துகிறவர்கள், இதுபோல எந்தக் கவலையுமே, படத் தேவையிராது!'' என்றான் அவன் காரியத்திலேயே கண்ணாக.

அவனது தொழில் ஆர்வம் கூட, அவளுக்கு ரசிக்கத் தக்கதாகத்தான் தோன்றியது. ஆனாலும், இவன் இன்னும் உயர் நிலையில் சற்றுப் பெரிய அளவில் எதையாவது செய்து கொண்டு, இருந்தால் நன்றாக இருக்குமோ என்று ஓர் எண்ணமும் ஏனோ ஏற்பட்டது.

காட்டிக் கொள்ளாமல், ''நான்தான் சொன்னேனே, முடிவு செய்யக் கூடிய நிலையில் நான் இல்லை என்று, இங்கே என்னிடம் எடுத்துச் சொல்லி, நேரத்தை வீணாக்கு வதை விட, இன்னும் நாலு இடங்களுக்குப் போனால், உங்களுக்குத் தொழிலாவது, நன்றாக நடக்கக்கூடும்!'' என்றாள் அவள்.

கண்கள் விரிய ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, மெல்லத் தலையசைத்தான் அவன் ''ஆ...மாம்! சொன் னீர்கள்தான். சரியாகவேயும்! இப்போது நான் கிளம்பு கிறேன். உங்கள் மாமா வந்ததும், எனக்குத் தகவல் தெரி வியுங்கள். இந்தப் பக்கத்தில் சுற்றிக் கொண்டிருந்தால், நானே வந்து அவரிடம் என் பருப்பு வேகிறதா என்று பார்க்கிறேன்! அவருக்குக் கொஞ்சம் ஆர்வம் இருந்தாலும் போதும்'' என்று முறுவலோடு கூறிவிட்டுக் குனிந்து கைப்பையைத் தூக்கினான் அவன்.

சட்டெனப் பொங்கிச் சிரித்தாள் திலோத்தமா.

பையைத் தூக்காமலே விட்டு விட்டு நிமிர்ந்து, அவளை வியப்புடன் பார்த்தான் அவன். ''என்ன அப்படியோர் ஆனந்தச் சிரிப்பு?'' என்று ஆவலாக வினவினான்.

பூஞ்சிட்டாய்த் தலையை சரித்து, அவனைப் பார்த்தாள் திலோ ''பெரிய புத்திசாலி! பெயரும் சொல்லவில்லை. போன் எண், முகவரி எதுவும் தரவில்லை! உங்களுக்கு எப்படித் தகவல் தெரிவிப்பதாம்?'' என்றாள் முகத்தில் இன்னமும் புன்னகை விகசிக்க!

இப்போது அசடு வழிந்தவாறு சிரித்தது, அவன்.

அந்த வழிசலோடேயே ''ஆமாம், என் விவரம் ஒன்றுமே தெரியாதில்லையா?'' என்று 'பேண்டி'ன் பின்புறப் பையில்

இருந்த ஒரு கார்டை எடுத்தவாறே கேட்டான். ''ஆனாலும் சொர்க்கமே கிட்டிவிட்ட மாதிரி, அப்படி என்ன சிரிப்பு?''

''பின்னே? எத்தனை குட்டுப் படுவது? திருப்பிக் குட்டு வதற்கு வாய்ப்புக் கிடைத்தால் மகிழ்...ச்சியாக இராதா?''

புன்னகை விரிய ''ஓஹோஹோ! அப்படி வந்த சிரிப்பா? நியாயமான சிரிப்புதான்! வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்றவாறு கார்டை எடுத்து நீட்டினான் அவன்.

அவன் கண்ணில் ஏதோ கண்டு ''தனியாக இருக்கும் போது, ஓர் அன்னியர் கை நீட்டித் தந்தால், நானும் கையில் வாங்குவேனா? என்னென்ன போர்க் கலைகளில் நீங்கள் வல்லவரோ? ஆபத்தில்லை? அங்கே வைத்து விட்டுப் போங்கள். அப்புறமாக எடுத்துக் கொள்கிறேன்'' என்றாள் அவள்.

புன்னகை விரிய, கார்டை கீழே வைத்துவிட்டுப் பையை எடுத்துக் கொண்டான் அவன் ''நூறு மதிப்பெண்! தேறிவிட்டீர்கள். கவலையே வேண்டாம். இனி யாராலும் குட்ட முடியாது! பாராட்டுக்கள்! வரட்டுமா? கார்டை எடுத்துக் கொள்ள மறந்துவிட வேண்டாம்!'' என்று விட்டு தன் வழியே போனான் அவன்.

ரஞ்சன்!

அவசரமாக அவள் எடுத்துப் பார்த்த கார்டில், அவன் பெயர் அப்படித்தான் எழுதியிருந்தது!

எஸ்.எஸ்.ரஞ்சன் என்ற பெயருக்குப் பக்கத்தில், படிப்புக்கான எந்தப் பட்டத்தையும் காணோம். பாவம் அதிகம் படிக்கவில்லை போலும்!

அதனால்தான் வீடு வீடாகச் சென்று, இந்த விற் பனையில் ஈடுபட்டிருக்கிறான்.

ஆனால், நிறைய விற்கிற பெரிய நிறுவனப் பொருள் எதையாவது விற்றால் அவனுக்கு நிறையப் பணம் கிடைக்குமே என்றிருந்தது திலோத்தமாவுக்கு.

மறுநாள் ரஞ்சனின் வருகை வெகு இயல்பாக இருந்தது.

அவன் வராதிருக்கக் கூடும் என்ற எண்ணமே அவளுக்கு இல்லை!

அவனும் வரவேற்பை எதிர்பார்த்தவன் போல, அழைப்பு மணியை அழுத்தி விட்டுப் புன்னகையோடு நின்றான்.

கதவை விரியத் திறந்து ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்தாள் திலோத்தமா.

ஒற்றை விரலால் பத்திரம் காட்டிவிட்டு ''தாராளமாக உள்ளே அழைக்கிறீர்கள்! நான் எப்படி ஆள் என்று, இன்னமும்தான் உன்... உங்களுக்குத் தெரியும்?'' என்று குரலில் சிறு கண்டிப்புடன் கேட்டான் ரஞ்சன்.

''வேலைக்காரி வீட்டில் இருக்கிறாள். பாட்டி விழித்திருக்கிறார்கள். இவை மட்டுமின்றி, நீங்களும் நல்லவரே!'' என்று திடமான குரலில் அழுத்தமாக உரைத்தாள் திலோ.

''நல்லவனா? அதாவது, ராமன்?''

புருவம் உயர்த்தி, கீழ் கண்ணால் அவளைப் பார்த்தான் ரஞ்சன். ''இந்த வினாடியில், என் மனதில் என்ன ஓடுகிறது என்று உனக்கு என்ன தெரியும்?''

விழியகல, அவனை நேராகப் பார்த்தாள் திலோத்தமா.

கன்னங்களில் வெம்மை பரவுவதைக் கட்டுப்படுத்த முயன்றபடி ''ராவண புத்தியே இருந்தாலும், வளர்ந்து வரும் நாகரீகம், சமுதாயச் சட்ட திட்டங்களை மதித்து, ராமனாகத்தான் நடந்து கொள்வீர்கள் என்பது எனக்கு

நிச்சயம்!'' என்றவாறு திரும்பி முன்னே வழிகாட்டி நடந்தாள் அவள்.

''ராமனா? ஆனாலும், இப்படியா கையைக் கட்டிப் போடுவார்கள்? ரொம்பவே அநியாயம்ப்பா'' என்று அவன் முணுமுணுத்தது, திலோவின் காதுகளில் நன்றாகவே விழுந்தபோதும், கேளாத மாதிரிப் பாவித்து நடந்தாள்.

உள்ளூரச் சிரித்தபடி!

ஹாலில் பாட்டி சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந் தாள்.

திலோத்தமா அறிமுகம் செய்து வைத்தபோது, ''அப் படியா?'' என்று தலையை ஆட்டி ''எந்த ஊர்?'' என்று கேட்டாள்.

''எந்த ஊர் என்றால், என்ன பாட்டிம்மா? பிழைக்க வந்த ஊர்தானே, பிறகு சொந்தமாகிப் போகிறது? அப்படிப் பார்த்தால், இப்போது, இந்தக் கோயம்புத்தூர்தான், என் சொந்த ஊர்!'' என்றான் ரஞ்சன்.

அவனது பதிலை உள்வாங்கப் பாட்டிக்குச் சற்று நேரமாயிற்று போலும்.

சிறு இடைவெளிக்குப் பின் ''ஆனாலும், சொந்த ஊர் என்று இருக்கும்தானே? தந்தை, பாட்டன் பிறந்த ஊர் என்று...'' என்று கேட்ட பாட்டி, அவனிடம் கேட்டதையே மறந்து, தன் ஊர், கணவர் ஊர் என்று யோசித்து, யோசித்துச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வேலைக்காரி பழச்சாறு கொண்டு வந்து வைத்தாள்.

ரஞ்சன் அதைக் குடிக்கும்போதே, பாட்டி சோர்வது தெரிந்தது.

ரஞ்சனும், அதிக நேரம் இராது, உடனே கிளம்பி விட்டான்.

வழியனுப்ப வந்தவளிடம் ‘‘பாட்டி உடம்புக்கு என்ன?’’ என்று விசாரித்தான்.

‘‘ஒரு விபத்து அதில் தாத்தா இறந்து போனார். அப்போதே, பாட்டி சோர்ந்து சோர்ந்து படுத்தார்களாம். தாத்தா மறைந்த பாதிப்பு என்று எல்லோரும் அப்போது நினைத்தார்களாம். ஆனால், இவர்களுக்கும் ஏதோ உள் அடி பட்டிருக்கும் போல! தாத்தாவைக் காப்பாற்றும் பரபரப்பு, அப்புறம் இழப்பில், எப்படியோ பாட்டியை அவ்வளவாகக் கவனியாமல் விட்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன். சும்மாவே, காலில் ஒரு வலி உண்டு. அதற்காக, அப்போதைக்கப்போது, உடனடி வலி நிவாரணியாக ஏதேனும் மருந்து மாத்திரைகள் போட்டுக் கொள்வார்கள்! எல்லாமாக, பதிந்து விட்டன போலும், இப்படி அடிக்கடி ‘டல்’லடித்து விடுகிறார்கள். அதனால் தான், மாமாவுக்குப் பாட்டியை விட்டுப் போக மனமில் லாமல் இருந்தார். நான் வருகிறேன் என்ற பிறகு தான் விட்டுப் போனார்’’ என்றாள் அவள்.

‘லிப்டை’ப் பயன்படுத்தாமல் இருவரும் படிகளில் இறங்கியே போனார்கள்.

இணைந்து நடந்தபடியே, விவரம் சொன்னாள் அவள்.

‘‘அதாவது பேத்திக்கு பாட்டி துணையில்லை! பாட்டிக்குத்தான், பேத்தி துணையாக்கும்!’’ என்றான் அவன். ‘‘என்னவோ, பாட்டி விழித்திருக்கிறார்கள் என்று, அதுவே பெரும் பலம் போல... யாரோ சொல்லவில்லை?’’ என்று தீவிரமாக யோசிப்பது போன்ற பாவனையுடன் ரஞ்சன் கேலி பேச, திலோத்தமா சிரித்தாள்.

''விஷயம் தெரியாதவர்களுக்கு அப்படித்தானே?''

''எனக்குத் தெரிந்து விட்டதே!''

''நீங்கள்தான் நல்லவர் ஆயிற்றே.''

''போச்சுடா! ஊகூம், எல்லாம் பேச்சு! எதற்கும் வழியில்லை!'' என்று அவன் வருத்தப்பட்ட பாவனையில், திலோ கலகலவென்று சிரித்தாள்.

அவளையே பார்த்துவிட்டு, ''ஊகூம். இதற்கு மேல் இங்கே நிற்கக் கூடாது என்று தெரிகிறது. ஆனால், உன் மாமாவிடம் இந்தப் பாதுகாப்புக் கருவிகள் பற்றி போனில் கேட்டேனும் சொல்கிறாயா? நீ, இங்கே இப்படிப் பாதுகாப் பற்று இருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை'' என்றுரைத்துக் கிளம்பினான் ரஞ்சன்.

உலகத்தில் எத்தனையோ பெண்கள், இவளது பாதுகாப்பு மட்டும் என்ன தனியாம் என்ற எண்ணம் தோன்ற, திலோவுக்குச் சிரிப்பு வந்தது.

ஆனால், அதைப் போலவே, உலகத்தில் எத்தனையோ இளைஞர்கள் இந்த வாய்ப்பும் கூட இல்லாமல் வருந்தும்போது, இவனது நிலையைப் பற்றி மட்டும், தன் மனம் கவலைப்படுவானேன் என்ற கேள்வியும் தொடர்ந்து எழ, அவள் ரொம்பவே திகைத்துப் போனாள்.

உண்மைதானே? இவன் மட்டும் என்ன தனி?

தந்தை, தம்பி பேச்சில், முன்னுக்கு வரும் வாய்ப்பே இல்லாமல் எத்தனை பேர் தவிக்கிறார்கள் என்பதெல்லாம் அடிபடும்.

அப்போதெல்லாம் இல்லாத தவிப்பு, இப்போது இவளைப் பற்றி மட்டும் ஏன் வந்தது?

ரஞ்சனின் கவர்ச்சிகரமான தோற்றத்தினாலோ என்றொரு சந்தேகம் தோன்றவும், திலோத்தமா பதறிப் போய்த் தன்னைத் தானே, வெகுவாக ஆராய்ந்தாள்.

அப்படி ஒருவரின் முகத் தோற்றத்தில் மயங்குகிறவளா, அவள்?

அப்படிப் பார்த்தால், அவளுடைய தந்தையிடம் சிபாரிசு பண்ணச் சொல்லி, அவர்களது வீட்டுக்கே வந்து கேட்ட எத்தனையோ பேர், இந்த ரஞ்சனை விடவும், அழகானவர்கள்தான்!

அவளுடைய தோழி பார்கவியுடைய அண்ணனுக்கு சினிமாக் கதாநாயகன் வாய்ப்பே வந்தது! அவளிடம் வந்து, வந்து பேசுவான்!

இன்னமும், நட்பு வட்டாரத்திலும், குடும்பச் சுற்றத்தின் வகையிலும், பல இளைஞர்கள்! உயர்ந்த, தாழ்ந்த எல்லா நிலையிலும்!

அவர்களைப் பற்றியெல்லாம், திலோ இப்படிச் சஞ்சலப் பட்டதில்லையே!

இது நிச்சயமாக அப்படியில்லை!

ஆனால், பார்த்த இரண்டு நாட்களில் காதலா என்றால், அதுவும் அவளுக்கு அசட்டுத்தனமாகத் தோன்றியது.

ரஞ்சன் ஆள் நன்றாக இருக்கிறான். உண்மை. ஒரு கேலியைப் புரிந்து கொள்கிறான். நகைச்சுவையாகப் பேசுகிறான். அதுவும் உண்மையே!

அதற்கு மேல், அவளிடம் அக்கறையும் இருக்கிறது. அல்லது, இந்த அக்கறையே, இன்னொரு விற்பனைக்காக இருக்குமோ?

அவன் சற்று தாழ்ந்த... திலோத்தமா இந்த வேலையில் சேர்ந்து ஊதியம் பெறத் தொடங்கி விட்டால், கொஞ்சம் அதிகமாகவே தாழ்ந்த நிலையில் இருக்கிறான் என்பது தவிர, வேறு எதுவுமே தெரியாத ஒருவனிடம் அந்தக் காதல் எப்படி வரும்?

குடும்பம், உற்றோர், பெற்றோர், நண்பர்கள்... அவனது பழக்க வழக்கங்கள்... அவளுக்கு எதுவுமே தெரியாதே!

அல்லது அதையெல்லாம் ஆராய்ந்து பாராமலே ஏற் படுவதுதான், அந்த நேசமா?

உள்ளூரத் தன்னையறியாமல் ஓர் இதம் பரவும்போதே, இவனை மணந்து கொள்ள, அவளுடைய பெற்றோர் ஒப்புவார்களா என்ற எண்ணம் தோன்றி, அவளைக் கலங்கடித்தது.

நிச்சயமாக மாட்டார்கள்! தங்கள் பெண், மகாராணி மாதிரி வாழ வேண்டும் என்பது, அந்த அன்புப் பெற்றோரின் ஆசை!

குறைந்த பட்சமாகத் தங்களை விட உயர்வாக!

அதற்காகவே, இந்தப் படிப்பு, வேலை எல்லாமே!

அப்படியிருக்க, ரஞ்சன் பெரிதாகப் படித்த மாதிரியும் தெரியவில்லை!

சும்மா அவனைப் பார்க்கும்போது, அப்படித் தோன்றா விட்டாலும் அவனது அடையாளக் கார்டில், ஒரு பட்டம் கூட இல்லையே! இவனை என்ன என்று சொல்லித் தந்தையிடம் அறிமுகப்படுத்துவது?

அவனது விசிட்டிங் கார்டைப் பார்த்ததுமே, எல்லாம் அடிபட்டுப் போகுமே என்று எண்ணுகையில், திலோத்த மாவுக்குத் தவிப்பாக இருந்தது!

சரி, படிப்புதான் குறைவு என்றாலும், வருமானமாவது, பெரிதாகச் சொல்லும்படியாக இருக்க வேண்டாமா?

'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்று சொல்வதுண்டு!

அந்த உத்தியோகமே, பணம் சம்பாதிப்பதற்காகத் தானே? மனிதர் நிறைய சம்பாதித்தால், அது போதாதா என்று தந்தையிடம் சொல்லலாம்!

அப்படி வருமானம் அதிகம் இருந்தாலாவது...

ரஞ்சனின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் எப்படியாவது உயர்த்த வேண்டும் என்ற எண்ணம், முதல் முதலாகத் திலோத்தமாவுக்குத் தோன்றியது, அப்போது தான்!

சரியாகச் சொல்லப் போனால், ஒரு தொழிலின் வெற்றிக்கு, விற்பனை திறன்தான் மிகவும் முக்கியம் எனலாம்.

ஒரு தொழிலைத் தொடங்க வேண்டும் என்று திட்டமிடுவதும், ஏதோ ஒரு பார்முலாவைக் கொண்டு உற்பத்தி செய்வதும், பணம் இருந்தால், எல்லோராலும் முடியும். ஆனால், தயாரித்த பொருட்களை விற்றால் தானே, அது வரை தொழிலில் போட்ட பணம் கைக்கு வரும்!

அப்படி வருகிற பணம் தான், அந்தத் தொழிலின் லாப நஷ்டத்தை நிர்ணயிப்பது!

எனவே, ரஞ்சனுக்கு விற்கும் திறன் இருப்பதால், அதிலேயே, முயற்சிக்கலாமோ?

படிப்பினால் பெறக் கூடிய பெரிய வேலைக்கும், ஊதியமாக வரக் கூடிய பெரிய தொகைக்கும் வழியில்லை எனும்போது... எதற்காக நம்பிக்கை இழக்க வேண்டும்?

'ஹாட் கேக்' என்பார்களே, அது போலப் பரபரப்பாக விற்றுக் கொண்டிருக்கும் பல பொருட்களைப் பற்றி, ரஞ்சனுக்காகத் திலோத்தமா யோசித்துக் கொண்டிருக்கும் போது, திடுமென ஓர் ஐயம், அவளைப் பிடித்து உலுக் கியது!

இப்படி என்னென்னமோ கற்பனை செய்கிறாளே, ஏற்கனவே அவனுக்குத் திருமணம் ஆகவில்லை என்று, அவளுக்கு என்ன நிச்சயம்?

இந்த சந்தேகம் தோன்றியதும், சற்று நேரம் அவளுக்கு மூச்சே நின்றுவிடும் போல இருந்தது!

ஒருவேளை அவனுக்குத் திருமணம் ஆகியிருந்தால்? திருமணம் ஆகியிருந்தால், இப்படியெல்லாம் அவன் பேச மாட்டான் என்று தனக்குத்தானே, அவள் சொல்லிக் கொள்ளும்போதே, அப்படித்தான் என்று உறுதியாக நினைக்கவும், அவளால் முடியவில்லை!

ஒரு விற்பனையாளனாக இருக்க வேண்டும் என்றால், அவன் பேச்சுக் கலையில் வல்லவனாக இருந்தாக வேண் டும். அதுபோல, சீண்டலும், சிரிப்புமாக அந்தக் கலை வல்லுனனாகவே அவன் பேசியிருந்தால்?

அவன் என்ன காதலிப்பதாகவா சொன்னான்? இல் லையே!

சும்மா அவளைச் சீண்டி, தூண்டி உற்சாகப்படுத்தியது அவனது பாதுகாப்புக் கருவிகளை வாங்க வைப்பதற்காகக் கூட இருக்கலாமே!

விற்பனையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவோ, அன்றி, அவளைப் பார்ப்பதற்காகவேதானோ, ரஞ்சன் மறுநாளும் வந்தான்.

இரவெல்லாம் தூக்கமின்றிக் கலங்கித் தவித்திருந் தவள், அவனைக் கண்டதுமே, அவன் என்ன நினைப் பானோ என்ற எண்ணமே இல்லாமல், ''உங்களுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லைதானே?'' என்று பதைப்புடன் கேட்டு விட்டாள்.

ஆனால், அப்படிக் கேட்டதுமே, அவளுக்கு உடம்பு உதறி விட்டது.

வளர்ப்பு முறை என்று ஒன்று இருக்கிறதில்லையா?

அதிகப் பழக்கம் இல்லாத ஓர் இளைஞனிடம், இளம் பெண் ஒருத்தி கேட்கக் கூடிய கேள்வியா, இது?

அவளைப் பற்றி, அவன் என்ன நினைப்பான்?

என்ன நினைத்தான்?

கண்கள் பளிச்சிட அவளை நோக்கி ஓர் எட்டு வைத் தவன், சட்டென நின்றான்.

விழி விரியக் கவலையும், பயமுமாகப் பார்த்து நின்றவளை நோக்கி முறுவலித்து ''ரொம்பப் பக்கத்தில் வர பயம்மாக இருக்கிறது! ஆனால், ஆசைக்கு ஒரு சின்ன அடையாளம் மட்டும்!'' என்று இரு விரல்களை மட்டும் நீட்டி, அவளது மூக்கைப் பிடித்துச் செல்லமாக மெல்ல ஆட்டினான்.

''அடேயப்பா! மூக்கு கூட இப்படி 'ஷாக் அடிக்கிறதே!'' என்று விழி விரித்து வியந்தான்.

பிறகு ''கவலையே வேண்டாம், தேவி! எனக்கு, இன்னமும் திருமணம் ஆகவில்லை!'' என்று தெளிவாகக் கூறி முறுவலித்தான்!



8

அதன் பிறகு, திலோத்தமாவும் ரஞ்சனும் அடிக்கடி சந்தித்தார்கள்.

''வேலையாக இந்தப் பக்கம் சுற்றிக் கொண்டிருந்தேன். இவ்வளவு தூரம் வந்துவிட்டு, உன்னைப் பாராமல் எப்படித் திரும்பிப் போவது? அதனால் வந்தேன்'' என்பான்.

மெய்யோ, பொய்யோ என்ற சந்தேகமே, அவளுக்கு வந்ததில்லை. நிச்சயமாக மெய்யே என்றுதான் அப்போது அவள் நினைத்தாள். அதனாலேயே, அவன் அப்படிச் சொல்வதைக் கேட்கையில், அவளுக்கு மிகவும் சந்தோஷ மாக இருக்கும்!

வாயில் புறமாக வராந்தாவில் நாற்காலிகளைப் போட் டுக் கொண்டு, இருவருமாக உட்கார்ந்து பேசுவார்கள்.

சில சமயம், ரஞ்சன் அவளை வெளியே போய் வரலாம் என்று கூப்பிடுவான்.

மூலை ஐஸ்கிரீம் பார்லரில் போய் 'கசாட்டா' வாங்கிச் சாப்பிடுவார்கள்.

அவனுக்கு அதிகக் கைப்பிடிப்பாகி விடக் கூடாது என்று, செலவில் பாதியைக் கட்டாயமாகக் கொடுத்து விடுவாள். முதலில் லேசாக மறுத்த ரஞ்சனும், பின்னர் சிரித்தபடியே வாங்கிக் கொள்வான்.

திடுமென எங்கோ இருந்து கொண்டு, செல்லில் அழைப்பு விடுப்பான் ''உன் வீட்டுக்கு அடுத்த தெரு பூங்காவுக்கு வருகிறாயா? கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகலாம். வண்ண வண்ண டேலியா எல்லாம் நிறைய நிறையப் பூத்துக் கொட்டியிருக்கிறது!'' என்பான்.

வேலைக்காரியைப் பாட்டிக்குத் துணை வைத்துவிட்டு திலோ ஓடுவாள்!

வெகு நேரம் பேசுவார்கள்!

விண்வெளியில் இருந்து, ஆழ்கடல் வரை, அத்தனையும் பேச்சில் அடிபடும்.

இருவருமே பத்திரிகை படிக்கிறவர்கள். பெரும்பான்மை விஷயங்களில் ஒத்த மனமும் இருந்ததால், பேச விஷயமின்றி அவர்கள் தவிர்த்ததே கிடையாது!

சீக்கிரமோ, தாமதமாகவோ, எப்போது கிளம்பினாலும், அவளை வீட்டுக்குக் கூட்டி வந்து, விட்டுவிட்டுப் போவான்.

பசித்தால், பக்கத்தில் எங்காவது போய் உணவருந்துவார்கள்.

எப்போதுமே, மொத்தத்தில் அதிகத் தாமதம் ஆகாமலும் பார்த்துக் கொள்வான்.

ஒரு நாள் கூட, அவனது இருப்பிடத்துக்கு, அவளை அழைத்ததே கிடையாது!

எந்தப் பகுதியில் இருக்கிறது என்று மட்டும் பொதுவாகச் சொன்னான்.

''அது கட்டைப் பிரம்மச்சாரிகள் சேர்ந்து கிடக்கும் இடம்மா. அங்கெல்லாம் நீ வரக்கூடாது'' என்பான்.

அதுவே, அவன் மீது அவளுக்கு அதிக மதிப்பையும் ஏற்படுத்தியது.

எப்படியாவது, தங்கும் இடத்துக்கு வரவழைத்து, விருப் பத்துக்கு வளைக்க முயற்சிப்பார்கள் என்று கேள்விப்பட்ட தற்கு நேர் மாறாக ரஞ்சன் நடந்து கொண்டதே, பெருமைக்குரியதாகத் தோன்றியது.

செய்கிற தொழிலிலும், ரஞ்சனுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது! ''இன்றைக்குத் திருமகள் காலனியில், எட்டுப் பேர், இந்தப் பாதுகாப்புக் கருவிகள் பற்றி, அக்கறை காட்டிப் பேசினார்கள். எப்படியும் மூன்று பேராவது, வாங்கு வார்கள் என்று நினைக்கிறேன்!'' என்று உற்சாகத்துடன் கூறுவான்.

அவன் அப்படிச் சொல்லும்போது, அதை விட்டு விட்டு, நீ இன்னொன்றைத் தேடு என்று அவனுக்கு எடுத்துக் கூற, அவளுக்குத்தான் தயக்கமாக இருக்கும்.

அப்படியும், மனதைத் திடப்படுத்திக் கொண்டு, ''மூன்றே ஆர்டர்கள்தான் என்றால், உங்கள் கமிஷனும், குறைந்து போகுமே, ரஞ்சன்?'' என்று சிறு வருத்தத்துடன் அவள் தொடங்குவாள்.

அதற்குள் அவனது கவனம் வேறிடம் பாய்ந்துவிடும்!

''அந்த வீட்டைப் பார், திலோ! போர்டிகோவுக்கும், அதிலிருக்கும் தூணுக்கும் அடித்திருக்கும் வண்ணங்கள், ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை, அல்லவா? இரண் டுமே, இருட்டு வண்ணங்கள்! சே! கண்ணை எப்படி உறுத்துகிறது! ஆனால் வீட்டு உரிமையாளர்கள் அதைக் கவனித்த மாதிரியே தெரியவில்லையே!'' என்று அவன் வருந்திக் கூறும்போது, அவள் சொல்ல முயன்றது, முழுசாக அடிபட்டுப் போகும்.

இதனிடையே, திலோவுக்கு இன்னோர் அதிர்ச்சி நேர்ந்தது!

ஆனந்த அதிர்ச்சிதான். ஆனால், அவளுக்கு ஒரு மாதிரி துன்பம் தருவதாகவும் அது அமைந்து போனது.

ஒரு நாள் இருவருமாக பூங்காவில் அமர்ந்து, இயற்கை யின் பொருத்தமான வண்ணச் சேர்க்கைகள் பற்றி உற் சாகமாக உரையாடுகையில், படிக்கும்போது, கடைசி ஆண் டில், இந்தியா முழுக்க அழைத்துச் சென்று, ஆங்காங்கே உள்ள கட்டடங்களின் அழகை எடுத்துச் சொல்லிச் சுற்றிக் காட்டியது பற்றி ரஞ்சன் சொன்னான்.

''என்ன இருந்தாலும் ஜெய்ப்பூர் அரண்மனையின் அழகே தனி, திலோ! இளம் சிவப்பு வண்ணத்தில், அத்தனை அடுக்கு மாளிகையை, அப்போதே எப்படித்தான் கட்டினார்களோ? எப்போதும், ஏ.சி.யில் இருப்பது போலக் குளிர்ச்சியாக வேறு இருக்கும்! தாஜ்மஹாலுக்கு, அதன் நுழை வாயிலில் இருந்து பார்க்கும்போது தெரியும் எடுப்பான தோற்றம், பார்த்த வினாடியே பிரமிக்க வைப்பது.''

இப்படி அவன் ஒவ்வொன்றாக விவரம் சொல்லிக் கொண்டிருந்தபோது, திலோத்தமாவின் உள்ளம் படு வேகமாக வேலை செய்தது!

இந்தியா முழுவதும் சுற்றிக் காட்டுவது என்றால், இவன் படித்தது, என்ன படிப்பு? கடைசி ஆண்டை முடித்தானா, இல்லையா?

இவன் உற்சாகத்துடன் சொல்வதைப் பார்த்தால், தடையற்றுப் படித்து, முடித்துதான் இருக்க வேண்டும்!

பின்னே ஏன் இந்த மாதிரி அலைந்து திரிந்து சம்பாதிக்க வேண்டும்?

சட்டெனா "நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள், ரஞ்சன்?" என்று ஆவலாகக் கேட்டாள் அவள்.

அவனும் பதில் சொல்லத் தயங்கவில்லை "கட்டடக் கலை. அப்புறம், நிர்வாகப் படிப்பில் எம்.பி.ஏ." என்றான் பிசிரற்று.

திலோவுக்குத்தான் தலை சுற்றிப் போயிற்று.

இவன் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான்?

கட்டடக்கலை படித்துவிட்டு, அப்புறம் தொழில் நிர் வாகத்திலும் 'மாஸ்டர்' டிகிரி பெற்று விட்டவன், ஐந்துக் கும் பத்துக்கும் இந்த 'சேல்ஸ்மேன்' வேலை பார்த்துக் கொண்டிருக்கிறானாமா?

சட்டெனக் கைப்பையைத் திறந்து, ரஞ்சன் தந்திருந்த கார்டை எடுத்துப் பார்த்துவிட்டு, அவனிடமே காட்டினாள். "படித்த படிப்பு ஒன்றையும் இதில் காணோமே!" என்று கேட்டாள்.

"அது..." என்று இழுத்தவனின் கண்கள் சட்டென நகைத்தன. கிண்டலாக நோக்கி, "அதில் போட்டால்தான், பட்டதாரியா? அப்படியெல்லாம் பீற்றிக் கொள்ள எனக்குப் பிடிக்காதும்மா. நான் வள்ளுவர் பக்தன் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்று அவர் எழுதியிருப்பதைப் படித்து, அச்சுப் பிசகாமல், அதன்படியே நடக்கிறவனாக்கும்!" என்று பெரிதாக அளந்து கொட்டினான்.

தொடர்ந்து "ஆனால், நீ என்ன நினைத்தாய்? ஒன்றாம் வகுப்பு 'ஃபெயில்' என்றா?" என்று கண்ணை உருட்டிக் கேட்டான்.

"அப்படியில்லை... ஆனால்..." என்று நினைத்ததைச் சொல்ல முடியாமல், திலோ தடுமாறியது, அவனுக்கு இன்னும் வேடிக்கையாக இருந்தது போலும்!

''ஓஹோ! மண்டையில் படிப்பே ஏறாத மக்குப் பையன் என்று முடிவு கட்டி விட்டாயாக்கும்! அப்படியில்லை தாயே! நான்தான் வள்ளுவர் பக்தன் என்றேனே! 'செய்வன திருந்தச் செய்' ரகம். வெள்ளிப் பதக்கம் வாங்கியவன். ஒரே ஒரு பொடியன், என்னை விடவும் கெட்டிக்காரனாக இருந்து, இவ்வளவூண்டு மூக்கை நீட்டித் தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டு போய் விட்டான்! இன்னும் கொஞ்சம் பெருமையடிக்க முடியாமல் பண்ணிய அவனை என்ன பண்ணலாம்? அக்கு வேறு, ஆணி வேறாக என்பார்களே, அது போல, அவனை... அவனைப் பிடித்து, உடம்பின் எலும்புகளை எண்ணி விடலாமா? அல்லது...'' என்று தீவிரமாக ஆலோசிப்பது போலப் பாவனை செய்தான்.

ஆனால் திலோத்தமாவால் சிரிக்க முடியவில்லை.

ரஞ்சனின் பேச்சுத் திறமை, அவனது நிர்வாகப் படிப்பினால் ஏற்பட்ட மெருகாய் இருக்கும். வெள்ளிப் பதக்கம் என்றால், செய் தொழிலிலும் அதிகத் திறமை இருக்கும்!

இரண்டும் சேரும்போது, எவ்வளவு உயரப் பறக்கலாம்!

இவ்வளவு திறமையையும், தகுதியையும் வைத்துக் கொண்டு, வீடு வீடாகப் படியேறி, கதவு கதவாகத் தட்டி, ஆளுக்கேற்றபடி, குழைந்து நெளிந்து, கூழைக் கும்பிடு போட்டுப் பேசி 'கமிஷனு'க்கு அலைய வேண்டுமா?

தேவையே இல்லையே!

பெரிய நிறுவனம் ஒன்றில், பெரிய பதவியில், நக நுனியில் கூட அழுக்குப் படாமலே, பல்லாயிரக் கணக்கில் சம்பாதித்துக் கொட்டலாமே! லட்சம் கூட, சாத்தியமே!

அதை விட்டு, இவன், இங்கே என்ன அசட்டுத்தனம் செய்து கொண்டிருக்கிறான்?

ஒரு கணம், தனக்காக இருக்குமோ என்று உச்சி குளிர்ந்து விட்டு, அப்படியில்லை என்று உடனே தெளிந்தாள் திலோத்தமா.

முதல் முதலாக அவனை, அவள் சந்தித்ததே, வீட்டுக் கான பாதுகாப்புக் கருவிகளை விற்பனை செய்கிறவனாகத் தானே?

இந்த விற்பனையில், என்ன வரும் என்று, தன் பொன் னான காலத்தையும் பொன்னை விடச் சிறந்த திறமையை யும் இவன் அநியாயமாக வீணடித்துக் கொண்டிருக் கிறான்?

இவன் மட்டும் கற்ற கல்விக்கு ஏற்ற பதவியில் இருந் தால், துள்ளிக் குதித்துக் கொண்டு போய், தந்தையிடம் இவனை அறிமுகப்படுத்தலாமே!

தோற்றம் மட்டுமின்றி, கல்வி, வருமானம் முதலிய வற்றிலும், பெரிய தகுதி உள்ள இவனைத்தான் மணப் பேன் என்று, குரல் உயர்த்திக் கூறலாமே!

அதை விட்டு, தந்தையிடம் இவனைப் பற்றி எப்படிச் சொல்வது என்று, இத்தனை நாட்களாக, அவள், திலோ என்னமாய்த் தவித்துப் போனாள்!

இப்போது கல்விச் சிறப்பு இருப்பது தெரிந்தாலும், இன்னமும்கூட, ரஞ்சன் ஒரு நல்ல வேலையில் அமரும் வரை, அவனைப் பற்றித் தந்தையிடம் பேச்செடுக்கவே முடியாதுதானே?

உன் சம்பாத்தியத்தில், உட்கார்ந்து சாப்பிட நினைக்கிற சோம்பேறி என்று, சட்டெனச் சொல்லி விடுவாரே!

அதனால், சீக்கிரமே ஒரு பெரிய வேலையைத் தேடிக் கொள்ளும்படி ரஞ்சனை வற்புறுத்த வேண்டும்.

சொல்லப் போனால், அவர்களது திருமணம் பற்றிய பிரச்சனையே இல்லாது போனாலும் கூட, அவனும் தகுதிக்கு உரிய சிறப்பில், வாழ வேண்டும்தானே? அதை விட்டு, ஏதோ கொஞ்சம் வந்தாலும் போதும் என்று, சரியான இலக்கற்று, அவன் சுற்றிக் கொண்டிருப்பது ரொம்பவே தப்பு! வடி கட்டிய அசட்டுத்தனம்!

ரஞ்சனின் காதைப் பிடித்துத் திருகியேனும், ஒரு நல்ல வேலை தேடிக் கொள்ளுமாறு, அவனிடம் சீக்கிரமே சொல்ல வேண்டும் என்று, திலோத்தமா முடிவு செய்தாள்.

ஆனால், முடிவு செய்வது வேறு. அதை செயல்படுத்துவது, இன்னொன்றல்லவா?

எப்படியோ, இது பற்றி, ரஞ்சனிடம் திலோ சரியாகப் பேச வாய்ப்பின்றியே, மேலும் சில நாட்கள் கடந்து போயின.

அல்லது, பேச்சை எடுக்க விடாமல் ரஞ்சன் தள்ளி விட்டானோ என்ற சந்தேகம், அன்று இல்லாதது, திலோவுக்கு இன்று வந்தது! ரொம்ப அதிகமாகவே வந்தது.

திருமணம் ஆகி இத்தனை நாட்களும், கோவை பற்றிய கடந்த காலப் பேச்சை எடுக்க விடாமல், வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமலே, அவன் தடுத்து விடவில்லையா? அதே போல, அப்போதும் அவன் செய்திருக்கலாமே!

ஆனால் ஏன்? அதுதான், அவளுக்கு இன்னும் புரியவில்லை! கூடவே, புரியாததை மீண்டும் மீண்டும் யோசித்துக் காலத்தை வீணாக்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

அதற்குப் பதிலாக, அவன் என்னவோ நினைவு படுத்திப் பார்க்கச் சொன்னானே, அதை முழுதாகச்

செய்வது மேல். அவளை அறியாமல், அவளே ஏதாவது தப்பு செய்திருக்கக் கூடுமா என்று அப்போதுதானே, தெரியும்? எந்தத் தப்பும் செய்யவில்லை என்று அவளுக்கு இருக்கும் உறுதியே மெய்யானால், அவனிடம் குர லுயர்த்திப் பேசவும் சீக்கிரமே முடியுமே!

மறுபடியும், வேகமாகப் பழசை எண்ணிப் பார்க்கத் தொடங்கினாள் அவள்.

ரஞ்சனின் உயர்நிலைப் படிப்பு தெரிய வந்த மறுநாளே, சென்ற வேலை முடிந்து, அடுத்த வாரம் கிளம்பி வருவ தாக, மாமா சுந்தரிடம் இருந்து தகவல் வந்தது.

இன்னமும் ரஞ்சனிடம் அவனது வேலை பற்றிப் பேசவில்லையே என்று திலோத்தமாவுக்குச் சிறு பதட்டம் உண்டாயிற்று.

அவளை மேலும் விரட்டுவது போல, அவளது வேலைக் கான அதிகாரப் பூர்வமான நியமனம் வந்திருப்பதாக தந்தை தகவல் கொடுத்தார்.

கூடவே, என்றைக்கு வந்து வேலையில் சேருகிறாள் என்று கேட்டு, ஒரு கடிதமும் வந்திருப்பதாகவும் தெரிவித் திருந்தார். சீக்கிரமே வருமாறு, ஒரு பின் குறிப்புடன்.

அதாவது, மாமா வந்த பின், மேலே தாமதியாமல், அவள் உடனே, சென்னைக்குச் சென்றாக வேண்டும்.

என்னவோ, நாலாபுறமும் இருந்து, தன்னைப் பயங் கரமாக அழுத்துவது போல, திலோத்தமா உணர்ந்தாள்.

இன்று ரஞ்சனிடம் இதைப் பற்றிப் பேசிவிட வேண் டியதுதான். இனித் தள்ளிப் போடக்கூடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டு திலோ காத்திருந்தால், அவசரமாக ஒரு சிறு பயணம் போவதாகவும், இரண்டு நாட்கள் சந்திக்க

முடியாமைக்கு வருந்துவதாகவும் எஸ்.எம்.எஸ். அனுப்பி விட்டு, ரஞ்சன் காணாமல் போனான்.

அடுத்த இரண்டு நாட்களும், எப்படிக் கழிந்தன என்றே, திலோத்தமா அறியாள்.

எதையும் அதிகம் கவனிக்காத பாட்டியே ''என்ன திலோம்மா, ஒரு மாதிரியே... இருக்கிறாயே?'' என்று கேட்கும் அளவுக்கு, பரபரத்துப் போயிருந்தாள் அவள்.

ரஞ்சன் எப்போது வருவான்?

வந்ததும், அவனது முன்னேற்றம் குறித்து, அவன் மனதில் படுமாறு, எந்தெந்த விதமாக எடுத்துச் சொல்வது?

அன்று காலையிலேயே, ரஞ்சன் திலோவுக்கு போன் செய்து விட்டான். ''வந்து விட்டேன் சுந்தரி!'' என்று.

அது யாரவள் சுந்தரி? முதலில் அவள் காதைப் பிடித்து... என்ற வழக்கமான கிண்டல் பேச்சு, அவளிடமிருந்து வரவில்லை!

''நான் உங்களிடம் பேச வேண்டுமே, ரஞ்சன்!'' என்றாள் திலோத்தமா, பேச்சில் முன்னுரை, முகவுரை என்று, எந்தவிதமான அலங்காரமும் இல்லாமல்.

அவனுக்கு இன்னமும் வேகம் போலும்!

''என்ன அவசரம் திலோ? நான் வேண்டுமானால், உடனே உன் மாமா வீட்டுக்கு வந்து, உன்னைப் பார்க்கட்டுமா?''

சரி என்று சொல்லி விடத்தான், திலோவுக்கு ரொம்பவும் தோன்றியது.

அவனைச் சீக்கிரமாகப் பார்க்கலாம் என்றாலும், அப் புறம் வீட்டில் வெளிப்படையாகப் பேச முடியாது! அவன்

இங்கே வீட்டுக்கு வந்து அப்புறமாக இருவரும் எங்கேனும் செல்வதை விட வழக்கமான பூங்கா, அல்லது காபி ஷாப்புக்கு வருமாறு கூறிவிட்டு, அவளும் கிளம்பிச் சென்றால், இருவரும் பாதிப் பாதி தூரத்திலேயே சந்தித்து விடலாம்!

தன் கணக்கை அவனிடம் திலோ சொல்ல ''பரவா யில்லையே! இவ்வளவு பெரிய கணக்கை இவ்வளவு சீக்கிரமே போட்டு விட்டாயே! அடுத்த ஆண்டு ராமா னுஜம் விருது, நிச்சயமாக உனக்குத்தான்!'' என்று கிண்ட லடித்தாலும், திலோத்தமா பூங்காவுக்குள் சென்றபோது, ரஞ்சன் ஏற்கனவே அங்கே வந்து காத்திருந்தான்.

''ஆஹா! அலங்காரம் முடித்து நீ வந்து சேர, இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகும் என்று நினைத்தால், நீ அதற்குள் வந்து, மூளையைக் கசக்கி நான் கணித்ததைப் பொய்யாக்கி விட்டாயே'' என்று அதிசயித்தான் அவன்.

மண்டைக்குள் அது இருந்தால்தானே, கசக்குவதற்கு என்ற கேலி, அவளுக்கு நினைவு கூட வரவில்லை.

ஆனால் அதற்குள்ளாகவே முகம் கனிய ''என்னம்மா, என்ன விஷயம்? ஏதேனும் பெரிய பிரச்சினையா? என்ன சொல்லு?'' என்று விவரம் கேட்டான்.

திலோ இப்போது தயங்கவில்லை.

''பிரச்சினை... பிரச்சினைதான். நீங்கள் சீக்கிரம் ஒரு பெரிய வேலை தேடிக் கொள்ளுங்கள், ரஞ்சன் அப்போது தான்...''

''ஏனோ? வேலை இல்லாதவன்தானே, வேலை தேட வேண்டும்? ஹைய்யா, எனக்குத்தான் 'கனவு இல்ல'த்து வேலை இருக்கிறதே!'' என்று பெருமைப் போலச் சொன் னான் அவன்.

இந்த சுண்டைக்காய் வேலை பற்றிப் பெருமை வேறா?

தன் தகுதியைப் பற்றிய எண்ணமே இல்லாமல், என்ன உளறுகிறான் என்று, அவளுக்கு எரிச்சல் தான் வந்தது.

‘‘அது என்ன பிசாத்து வேலை ரஞ்சன்? இந்த வீட்டுப் பாதுகாப்புக் கருவிகளை விற்றால் ஏதோ ‘கமிஷன்’ கொடுப்பார்கள்! அதுதான்? இதையெல்லாம் கௌரவமான வேலை என்று சொல்லிக் கொள்ள முடியுமா? உங்கள் படிப்பு, திறமை, தகுதிக்கு எவ்வளவு நிறைய சம்பாதிக் கலாம், தெரியுமா? ‘கனவு இல்லம்’ ஆட்கள், உங்களை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, ஒன்றும் தராமல் ஏமாற்றுகிறார்கள் என்று, எனக்குத் தோன்றுகிறது. வேறே நல்ல பெரிய நிறுவனங்களுக்குப் போய் பாருங்கள், ரஞ்சன். அப்போதுதான் உங்களுக்கு உண்மை நிலவரம் புரியும். மற்ற யார் என்றாலும் நிறைய சம்பளம் கொடுத்து, உங்களை ராஜா மாதிரி வைத்துக் கொள்வார்கள். அதை விட்டு, உங்கள் படிப்புக்கும், தகுதிக்கும் இப்படி வீடு, வீடாகவா, உங்களை அலைய வைப்பது? அநியாயம்! அந்தப் பணப் பெருச்சாளிகளை விடுங்கள், இந்த வேலை உங்களுக்கே கேவலமாக இல்லை?’’

‘‘ம்ம்ம்... அதாவது, நம் மக்களுக்கு இந்த வீட்டுப் பாதுகாப்புப் பொருட்களின் தேவை. தேவை அறியச் செய்து விற்பனையைப் பெருக்குவதற்காக, நான் வீடு வீடாக அலைவது, கேவலம் என்கிறாயா?’’ என்று நிதானமாகக் கேட்டான் ரஞ்சன்.

அந்த ‘கேவலம்’ என்ற வார்த்தை, ரஞ்சனுக்கு ஆத்திர மூட்டி இருக்குமோ என்று, இப்போது திலோத்தமாவுக்கு யோசிக்கத் தோன்றியது. ஏனெனில் ‘கனவு இல்லம்’ ஆட்கள் ஏமாற்றுவதாகச் சொன்னதை, அவன் எடுத்துப்

பேசவே இல்லை! தேவை இல்லை என்றாலும், பெயரள வுக்குக் கூட, மறுத்து அவர்களைத் தாங்கிப் பேசவில்லை.

செய்கிற வேலையைப் பற்றி மட்டும்தான், விளக்கம் கேட்டான்.

அதிலும் குறிப்பாகக் 'கேவலம்' என்ற வார்த்தையைச் சொல்லி!

ஆனால், எதையும் விளையாட்டாக எடுக்கும் அவனது மனதில் தைக்கும் விதமாக வேறு எப்படித்தான் சொல்வது?

அத்தோடு, அவனுக்குக் கிடைக்கக் கூடிய பெரிய வேலையோடு ஒத்திடும்போது, ரஞ்சன் இந்த வேலை பார்ப்பது கேவலம்தானே?

எனவே முன் சொன்னதையே தொடர்ந்து ''நான் சொல்வது இருக்கட்டும். என் அப்பாவிடம் உங்களை நான் என்ன விவரம் சொல்லி அறிமுகம் செய்வது? வெறுமனே, ஒரு சாதாரண விற்பனையாளன் என்றா? தொண்டையை விட்டு, வார்த்தைகள் வெளிவருமா? அப்பா முகம் திருப்ப மாட்டாரா? எவ்வளவு அவமானமாக இருக்கும்? அதன் காரணத்தை நினைத்துப் பாருங்கள்'' என்று படபடத்தாள் திலோத்தமா.

சொல்லப் போனால், திலோத்தமா தன்னை மிகவும் அடக்கிக் கொண்டு பேசினாள் எனலாம். உண்மையில், அவளுக்கு வாய்விட்டுக் கத்திக் கூச்சலிடலாம் போலத் தான், அப்போது இருந்தது.

தகுதிகளை வளர்த்துக் கொண்டு, ஒரு நல்ல வேலை யில் அமர இருக்கும் ஒரு பெண்ணை, இன்னும் உயர்ந்த நிலையில் இருக்கும் ஒருவனுக்கு மணம் செய்து கொடுக் கத்தானே, அவளுடைய பெற்றோர் விரும்புவார்கள்?

குறைந்த பட்சம், சம நிலையிலாவது இருக்க வேண்டாமா? தகுதிகள் இருந்தும் அவற்றை ஒதுக்கி, சாதாரண வேலை ஒன்றை ஏற்று சுற்றிக் கொண்டிருப்பவனை, மருமகனாக எப்படி ஏற்பார்கள்?

இது ஏன் இவனுக்குப் புரியவில்லை என்பது, அவளது அன்றைய தவிப்பு!

அந்தக் 'கனவு இல்லமே' அவனுடையது என்பதால், வேலையை மாற்றுகிற எண்ணம், ரஞ்சன் மனதில் படாமல் போயிருக்கலாம். ஆனால், உண்மை நிலை அறியாததால், தனது வருங்காலமே இந்த வேலை விஷயத்தில் தொக்கி நிற்பதாக எண்ணிய திலோத்தமாவுக்குத் தன்னை அடக்குவது, மிகவும் கடினமாக இருந்தது!

அவனது மன நிலையையும், அவனே யோசித்துப் பார்த்திருக்கலாம் தானே? ஆனால், பார்க்கவில்லையே!

அநாகரீகமாக அலறிக் கூக்குரலிடாமல், ரஞ்சனுக்குப் புரிய வைக்கவே, அப்போதும் அவள் முழு மூச்சுடன் முயன்றாள்.

பொறுமையை இழுத்துப் பிடித்து, ''பாருங்கள் ரஞ்சன், இந்த மாதிரி வேலை பார்க்கும் ஒருவருக்கு என் தந்தை, என்னைக் கல்யாணம் செய்து கொடுப்பாரா? அதை யோசித்துப் பாருங்கள்!'' என்று அமைதியாகத்தான் கேட்டுக் கொண்டாள்.

ஆனால், அப்போதும் சற்று உயரத்தில் படர்ந்து பூத்திருந்த அலமண்டாக் கொடியின் மஞ்சள் நிறப் பூக்களைப் பார்த்தபடி, அரைக் கவனமாக, ''உன் அப்பா நினைப்பது இருக்கட்டும். இந்த நிலையில் என்னை மணப்பது பற்றி, உன் கருத்து என்ன? அதைச் சொல்லு?'' என்றுதான் அவன் கேட்டான்.

அவள் இவ்வளவு சொல்கிறாள். அப்போதும், பார்க்கிற வேலையை மாற்ற வேண்டும் என்கிற எண்ணம் அவனுக்கு வரவேயில்லையே என்று திலோ கொதித்தாள்.

நிறுவனமே அவனது என்பதால், அந்த எண்ணமே வருவதற்கு இல்லை என்பது, இப்போது அவளுக்குப் புரிந்தது. ஆனால் அன்று அவள் எண்ணியது வேறு அல்லவா? இப்போது அவளுக்குப் புரிந்தது. ஆனால், அன்று அவள் எண்ணியது வேறு அல்லவா?

இனி அவளையே இழக்க நேரும் என்றால்தான் மாறு வான் என்று தோன்றிவிட, ''நீங்கள்தான் யோசித்துப் பாருங்களேன். என்னைப் போல ஒருத்தி, உங்களைப் போல நல்ல வாழ்வை வீணாக்கிக் கொண்டு இருக்கும் ஒருவனை மணப்பது, முட்டாள்தனம் ஆகாதா?'' என்று கேட்டாள்.

ஒரு வழியாகத் தலையைத் திருப்பிப் பார்த்தவனின் முகத்தில் வியப்பு தெரிந்தது.

அவளை நோக்கி ''நீ அந்த மாதிரி முட்டாளில்லை என்கிறாயா? ஓகே! நீ அவசரம் என்றதால், சாப்பிடாமலே ஓடி வந்தேன். நீயும் சாப்பிடவில்லைதானே? இப்போது வெளியே எங்காவது சாப்பிடலாம் வா!'' என்று அவளை அழைத்தான்.

இப்போது சாப்பாடா முக்கியம்?

''எனக்கு நீங்கள் பதிலே சொல்லவில்லையே! மாமா சென்னை வரை வந்தாயிற்று. அவர் இங்கே வந்தவுட னேயே, இன்னும் ஓரிரு நாட்களிலேயே, நான் சென்னைக் குக் கிளம்ப வேண்டும், தெரியாதா?'' என்று தாங்கலோடு கேட்டாள் திலோ.

"நீதான் முட்டாள் இல்லை என்று சொல்லிவிட்டா யேம்மா. இனித் திட்டங்களை மாற்ற வேண்டியதுதான்!" என்றான் அவன் குரலில் சிறு வருத்தம் தொனிக்க.



# 9

இருவருமாக, ரஞ்சன் விரும்பியது போலக் காலை உணவருந்தச் சென்றபோது, திலோத்தமா உள்ளூர மகிழ்ச்சியோடுதான் இருந்தாள்.

காரணம், அவனது 'திட்டங்களை மாற்ற வேண்டியது தான்' என்றதன் பொருள், ரஞ்சன் நன்மை தீமை புரிந்து கொண்டான். புரிந்து, தன் வழிக்கு வந்து விட்டான் என்று அவள் கருதியதே.

ஆனால், அன்று உணவருந்த அழைத்துச் சென்ற பிறகு அவனை அவள் சந்திக்கவே இல்லை!

அவள் கோவையை விட்டுக் கிளம்பும்வரை, செல்லி லாவது பேசிக் கொண்டிருந்தவனின் தொடர்பு, அதன் பிறகு, முழுமையாக அறுந்து போயிற்று!

ரஞ்சன் மாற்றிக் கொண்டது, அவளை மணக்கும் திட்டத்தையே என்று பெரும் மனவேதனைக்குப் பிறகே, திலோ புரிந்து கொண்டாள்.

சுந்தர் குடும்பம் திரும்பி வந்துவிட, அதற்கு மறுநாளே, திலோத்தமா சென்னைக்குக் கிளம்ப நேர்ந்தது. அவளது வேலையில் சேருவதற்காக.

அவளது முதல் வேலைக்காக அவளுக்கு வாழ்த்துச் சொன்னவன், வேறு பேசாமல், அவசரமாக செல்ல வேண்டும் என்று பேச்சை நிறுத்திக் கொண்ட போதும் கூட, அவனை, அவள் தப்பாக எண்ணவே இல்லை.

பெரிய வேலைக்கான ஏதோ முழு மூச்சான முயற்சி என்றுதான் எண்ணினாள்.

ஆனால், அதன் பிறகு, ரஞ்சனோடான தொடர்பு அடியோடு அறுந்து, செல்லில் அவனோடு பேசவே முடியாமல் போனபோதுதான், அவனது திட்ட மாற்றம் பற்றி, முதல் முதலாக அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அப்போதும், அதை ஒப்ப முடியாமல், கோவைக்குப் பலமுறை சென்று அவனைத் தேடிப் பார்த்தாள். இருவரும் சந்தித்த இடங்கள், அவன் வேலை பார்த்த ‘கனவு இல்ல’ அலுவலகம், அவன் தங்கி இருந்ததாகக் காட்டிய கட்டிடம்!

சென்று பழகிய இடங்கள், எங்குமே அவனைக் காணக் கூடக் கிடைக்கவில்லை! அலுவலகத்தில், அந்தப் பெயரில் யாரும் வேலையில் இல்லை என்றார்கள்!

அவளது தொல்லை தாங்க முடியாமல், சம்பளப் பட்டுவாடாப் பட்டியலையே காட்டியபோது, அவள் இடிந்து போனாள். கிட்டத்தட்ட ரஞ்சன் என்கிற மாதிரிப் பெயர் கூட, அதிலே இல்லை!

“பார்த்து விட்டாய் அல்லவா? இனிமேலாவது ஞை ஞை என்று வேலையைக் கெடுக்காமல் போம்மா!” என்றார், அந்தப் பொறுப்பில் இருந்தவர்.

அடுத்த மாதம் போனபோது ‘கனவு இல்ல’த்தின் அலுவலகமே அங்கே இல்லாது போயிற்று.

பெரிய வளர்ச்சிக்காகத் தலை நகரத்துக்குப் போய் விட்டதாகச் சொன்னார்கள்.

ஆனால், அதைப் பற்றிய ஆர்வம் எதுவும் அவளுக்கு இருக்கவில்லை.

ரஞ்சன் சொன்னான் என்பது தவிர, அந்த நிறுவனம் பற்றி, அவளுக்கு என்ன அக்கறை?

அவன் தங்கியிருந்ததாகக் காட்டிய விடுதிக்குப் போனால், அவளையே ஒரு மாதிரிப் பார்த்தார்கள்.

ரஞ்சனைக் காண முடியாது என்று, ஆனதும் பெற்றோரிடம் ஏதாவது சொல்லித் திருமணத்தை மறுப்பதில் மட்டும்தான், அவளுக்கு கவனம் இருந்தது.

அதிலும். அவளை மீறி, ரஞ்சனுடைய குடும்பம் அவளைப் பார்க்க வந்ததும், 'கனவு இல்லம்' என்ற பெயரால் மட்டும், வருகிறவனிடம் ரஞ்சனைப் பற்றிய விவரம் கிடைக்கக்கூடுமோ என்ற ஆசையால், அவள் அவனைப் பார்க்கப் போனதும், அங்கே அவளுடைய ரஞ்சனே மணமகன் என்று அறிந்ததும் சந்தோஷமாகத் தலையாட்டியதும், இப்போது நடந்த கதை!

மற்றபடி முழுக் கதையும் இவ்வளவேதான்.

இதில் அவளுடைய ரஞ்சன்... இன்றைய இந்த சித்த ரஞ்சன், தன் மனைவியான அவளிடம் ஆத்திரப்படும்படியாக என்ன இருக்கிறது?

இப்போதும், தன் பேச்சில் தப்பு இருப்பதாக திலோவால் எண்ண முடியவில்லை!

அவள் பயன்படுத்தியவை, சற்று கடுமையான வார்த்தைகளாக இருக்கலாம். ஆனால், அந்த வார்த்தைகளின் நோக்கம், முழுக்க முழுக்க அவனது முன்னேற்றம் தானே?

என்ன காரணத்துக்காகச் சொன்னாள் என்று எடுத்துச் சொன்னால், கணவன் புரிந்து கொள்வான் என்றுதான், திலோத்தமா அப்போதும் திடமாக நம்பினாள்.

ஆனால், நடப்புதான் நேர் எதிராக இருந்தது!

காலை உணவுண்டு, அலுவலைப் பார்க்க ஆண்கள் கிளம்பிச் செல்லுகையில், எந்த வீட்டுப் பிரச்சினையை யும், அந்த வீட்டில் பேசுவது இல்லை!

மாமியார் கற்றுக் கொடுத்த வழிதான் திலோவுக்கும்!

ஆனால், அன்று மாலை சித்தரஞ்சன் திரும்பி வரும் வரை, திலோத்தமா ரொம்பவே சங்கடப்பட்டுப் போனாள்.

மாலையில் வழக்கம் போல வீடு திரும்பிய சித்தரஞ்சன், அவனாக எதுவும் சொல்லப் போவதாக அவளுக்குத் தோன்றவில்லை.

அதுதான் மேலும் தேவை என்றால் பேசுவோம் என்று சொல்லி விட்டானே!

அவளுக்குத் தேவை என்றால்தான், அவள் தான் அந்தப் பேச்சைத் தொடங்கியாக வேண்டும்.

இரவு உணவு முடிந்து, எல்லோரும் அவரவர் அறைக் குள் முடங்கும்வரை பொறுத்திருந்துவிட்டு, அதன் பிறகே திலோத்தமா, தங்கள் பிரச்சினை பற்றிப் பேசத் தொடங் கினாள்.

“நீங்கள் சொன்னது போல, நம் பழைய வாழ்வு பற்றி யோசித்துப் பார்த்தேன். ஆனால், என் மீது எந்தத் தப்பும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சொல்லுங்கள் ரஞ்சன், என் பேச்சில் எது தப்பு என்கிறீர்கள்?” என்று முயன்று வருவித்த அமைதியுடன் கேட்டாள்.

ஆனால் "என்ன திண்ணக்கம்?" என்றான் சித்தரஞ்சன் "என்னை விடவும் பணம் தான் முக்கியம் என்று சொல்லி விட்டு, அதில் தப்பு இல்லை என்று வேறு சொல்கிறாயா?" என்றான் ஆத்திரத்துடன்.

"உங்களை விடப் பணம் முக்கியம் என்றேனா? எப்போது?" என்று புரியாமல் கேட்டாள் திலோ!

அவள் அறிந்த வரையில், அப்படி அவள் சொல்லவே இல்லையே! இவ்வளவு முக்கியமான வார்த்தைகளை, அவள் எப்படி மறந்திருக்கக் கூடும்?

அவள் முகத்தையே பார்த்தவன் "ஆஹா! என்ன நடிப்பு!" என்று பரிகாசித்தான். "ஒன்றுமே புரியாத மாதிரி, அப்படி விழிக்கிறாயே! என்னைப் போல ஒருவனுக்கு, உன் அப்பா பெண்ணைக் கொடுப்பாரா என்று நீ கேட்க வில்லை? அதை விடவும் 'நீ என்ன சொல்வாய்' என்று நான் கேட்டதற்கு, என்ன பதில் சொன்னாய்? உன்னைப் போல ஒருத்தி, 'உன்ன்...னைப்'போல ஒருத்தி, நல்ல்...ல வாழ்வை வீணாக்கிக் கொண்டிருக்கும் என்ன்...னைப் போன்ற ஒருவனை மணப்பது முட்டாள்தனம் என்று சொல்லவில்லை நீ அப்படிப்பட்ட முட்டாளில்லை என்றும்!"

"ஆமாம் சொன்னேன். அப்படியாவது, என்னை இழக்க நேருமே என்றாவது, உங்களது உயர் படிப்புக்கு ஏற்ற வேலையில் அமர்ந்து, பெரிய நிலைக்கு உயர்ந்து, உரிய வசதிகளை அனுபவிப்பீர்கள் என்று எண்ணிச் சொன் னேன். இதையா பெரிதாக நினைத்து... ஆனால், நான் சொன்னதிலே என்ன தப்பு இருக்கிறது? எல்லாம், உங்கள் நல்லதற்குச் சொன்னதுதானே?" என்று கேட்டாள் திலோ.

அவள், திலோ என்ன எண்ணிச் சொன்னாள் என்று, இப்போது ரஞ்சனுக்குப் புரிந்திருக்கும். தப்பு எண்ணங்கள் மாறுவதோடு, குழந்தை வேண்டாம் என்ற பிடிவாதம் கூடப் போனாலும் போய்விடும். அவனைப் போல ஓர்...

வேக வேகமாகத் திலோவின் கற்பனைகள் சிறகடிக்கத் தொடங்கிய போது "உன்னை எப்படி நம்புவது?" என்று நிதானமாகக் கேட்டான் சித்தரஞ்சன்.

திகைத்து "ஏன் நம்பக் கூடாது?" என்று திலோ கேட்டாள்.

"ஏனென்றால், நீ கனவு கண்டதையும் விடப் பல மடங்கு வசதியான வாழ்வு கிட்டியிருக்கிறதே! இதைத் தக்க வைத்துக் கொள்வதற்காக நீ பொய் சொல்லவில்லை என்று எனக்கு என்ன நிச்சயம்?" என்று கேட்டான் சித்தரஞ்சன்.

"எ... என்னது? பொய்யா?" என்று அவள் மேலும் திகைத்து, "ஐய்யோ, அப்படிக் கிடையாது ரஞ்சன்!" என்று அவள் தலையசைத்து மறுத்ததை, சித்தரஞ்சன் காதிலேயே வாங்கவில்லை.

"அன்று சுட்ட சட்டியாய்த் தூக்கி வீசிவிட்டுப் போனவள். இப்போது பணக்காரன் என்று தெரிந்ததும், மறு பேச்சின்றி, உடனே கழுத்தை நீட்டி விட்டாய்தானே? அதை நியாயப்படுத்திக் கொள்ள, இப்படியொரு பொய்யை, நீ ஏன் சொல்ல மாட்டாய், கரெக்ட்! அதுதான் உண்மை! இந்த வளமா....ன வாழ்வைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, இந்தப் பொய் சொல்கிறாய்! ஆனால், இதிலெல்லாம் ஏமாறுவதற்கு, நான் முட்டாளல்ல. திலோத்தமா, உன்னைப் போலவே, நானும் கெட்டிக்காரன்தான்!" என்றான் அவன், ஏளனமாகவே!

முட்டாள் அல்லவாமா? பெரீய கெட்டிக்காரன்தான்! எப்படித்தான் தொழிலில் ஜெயிக்கிறானோ?

அவனை வெறித்துப் பார்த்துவிட்டு "நீங்கள் நினைப்பது சரியில்லை ரஞ்சன். நான் சொன்ன எதுவும் பொய்யில்லை. இங்கே வேலையில் சேர்ந்த பிறகு, இரண்டு நாட்கள் விடுமுறை கிடைத்தாலும், கோவைக்கு சென்று, உங்களை எப்படித் தேடித் தேடி அலைந்தேன் தெரியுமா? நாம் சந்தித்த இடங்களில் எல்லாம்..." என்றவளின் பேச்சில் இடை யிட்டு "அங்கெல்லாம் நான் தேவதாசாகச் சுற்றிக் கொண் டிருப்பேன் என்று கண்டு ரசிக்க வந்திருப்பாய்! ஆனால், உன்னுடைய இந்தக் கதையையும் நம்புவதற்கு மெய்யா கவே, நான் அவ்வளவு அசடன் என்றா கணித்தாய்?" என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

"முன்பு இல்லை. இப்போதுதான் அப்படித் தோன்று கிறது!" என்று தனக்குள் முணுமுணுத்தாள் திலோத்தமா.

"என்னது?"

"ஒன்றுமில்லை!" என்றாள் அவள் கசந்த குரலில்.

இப்படிப் பேசுகிறவனிடம் என்ன விளக்கம் கூறி, என்ன பயன்?

நிராசையுடன் திரும்பியவளுக்கு ஒன்று தோன்ற, மறுபடியும் திரும்பி, கலக்கத்துடன் சித்தரஞ்சனைப் பார்த்தாள்.

பணம் ஒன்றையே மிகப் பெரிதாக எண்ணுகிறவள், மனித மனதைத் துச்சமாகக் கருதித் தூக்கிப் போட்டு உடைக்கிறவள்! இப்படி மோசமாகக் கணித்துவிட்டு, அவளையே திருமணமே... அதுவும் விரும்பி வந்து செய்வானேன்?

வாழ்வின் பாதியாக ஏற்று, அவனது எதிர்காலம் முழுவதையும் அவளிடம் எப்படி ஒப்புவிப்பான்?

இதற்குள், இன்னும் என்ன வெடிகுண்டு ஒளிந்திருக் கிறது?

அவனிடமே கேட்டாள் ''சொல்லுங்கள், ரஞ்சன். என்னை இவ்வளவு மட்டமாக நினைக்கிறவர், என்னைத் தேடி வந்து மணப்பானேன்?''

இந்த விஷயத்தில் சித்தரஞ்சன் அவளை ஏமாற்ற வில்லை. வெடிகுண்டு இருக்கத்தான் செய்தது.

முகம் கன்றி கறுத்த ஒரு சிறு தயக்கத்தின் பின், அது என்ன மாதிரியான குண்டு, என்று, அவளிடம் அவனே சொன்னான். ஒளிவு மறைவின்றி!

''பணத்தின் முன் உன் பாசம், நேசம் எதுவும் கிடையாது என்று அறிய நேர்ந்தது. எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. கத்தல், கதறல், அழுகை என்பன போன்ற எதுவும் இல்லாமல் அமைதியாகவே, உன்னைப் பிரிய முடிவு செய்தேன். அதற்காகத்தான், ஒன்றும் இல்லாதது போல, உன்னைச் சாப்பிட அழைத்துப் போனேன். உன்னைப் பார்ப்பது, அதுவே கடைசி என்று, உள்ளூர திட்டம். நீ கோவையை விட்டுக் கிளம்பியதும், அந்த 'ஸிம்' கார்டைத் தூக்கித் தூரப் போட்டேன். உன் குரல், முகம் எல்லாவற்றையும் ஒதுக்கி, விலக்கி விட்டதாக நினைத் தேன். ஆனால்...''

எவ்வளவு வெறுப்பு என்று மனம் தவித்த போதும், அப்புறம் நாடி வந்தது எப்படி என்று அறிய, அவள் மனம் துடித்தது!

''ஆனால்?'' என்று எடுத்துக் கொடுத்தாள் அவள்.

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டுத் தொடர்ந்தான் சித்தரஞ்சன்.

"ஆனால், எத்தனையோ விதத்தில் முயன்றபோதும், உன்னை மறக்க, என்னால் முடியவில்லை. ஏதோ காரணமாக... சும்மா காரணம் இல்லாமலே கூட, உன் முகம் என் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது! நாளாக ஆக குறையும் என்று பார்த்தால், அதிகம்தான் ஆயிற்று...!"

அவளைப் போலத்தான்! அவளுக்கு அவன் நினைவு மறக்கவே இல்லையே! இதுவே காட்டவில்லையா, அவர்களிடையே உள்ளது, எப்படிப்பட்ட நேசம் என்று!

ஆனால், சித்தரஞ்சனுக்கு அப்படி நினைக்கத் தெரிய வில்லையே!

"....கடைசியாக, அதிலிருந்து மீள, இந்த ஒரு வழிதான் என்று முடிவு செய்தேன். உனக்கும், நீ விரும்பிய பணம், பகட்டு எல்லாம் கிடைக்கும். எனக்கும் நீ கிடைப்பாய்! ஒரு வழியாக, உன்னைப் பற்றிய என் மயக்கம், ஏக்கம், எல்லாம் நீங்கும்... நம் இருவருக்கும், இது போதும் என்று எண்ணி னேன்!"

"போதாது! இன்னமும், ரஞ்சன் முழுசாகச் சொல்ல வில்லை. மயக்கம் தீருவதை எதிர்பார்த்து மணந்தவன், அந்த மயக்கம் தீர்ந்த பிறகு என்ன என்று சொல்லவில்லை!

இவ்வளவுக்கு மேல், அவன் அவ்வளவு பிடிவாதமாக மறுத்த குழந்தைக் கதை ஒன்று, இன்னமும் இருக்கிறது!

அல்லது... திக்கென்றது திலோவுக்கு!

இரண்டுமே ஒன்றுதானா? மயக்கம் தீர்வதை எதிர் பார்த்துதான், குழந்தை வேண்டாம் என்று நிபந்தனை விதித்தானா? அதாவது, அவனது மயக்கம் தீருகிற

காலத்தில் அவனது வாழ்வை விட்டு வெளியேற வேண்டியவள் அவள். கட்டிக் கிழித்த பழந்துணியாய், அவளைத் தூக்கி எறியும்போது, குழந்தை இருந்தால் பிரச்சினை ஆகும் என்பதால், பிரச்சினைக்கு இடமே இல்லாது பண்ணியிருக்கிறான்!

என்ன அநியாயம்? என்ன குரூரம்!

அவள் அறிந்த ரஞ்சன், அப்படிப்பட்ட கிராதகனா? எப்படி முடியும்?

நம்ப முடியாத திகைப்புடன் நோக்கி "அதற்காகத்தான்... பிரிவை எதிர்பார்த்துதான் குழந்தை வேண்டாம் என்கிறீர்களா? இதென்ன அநியாயம், ரஞ்சன்?" என்று திலோ கேட்டாள்.

ஆனால், அவனுக்கு அநியாயமாக ஒன்றும் தெரியவில்லை போலும்.

"தப்பென்ன?" என்று விட்டேற்றியாகவே கேட்டான் "யோசித்துப் பார், நமக்கு ஒரு குழந்தை உருவானால், அது உனக்கும் பிரச்சினையாகவே அமையும்."

குறுக்கிட முயன்றவளைக் கையுயர்த்தி தடுத்து, அவன் மேலே பேசினான். "இன்றைய நிலையில், ஒரு குழந்தை இருந்தால், வீட்டில் தன் உரிமையைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு கருவியாக உனக்குத் தோன்றலாம். ஆனால் என்னை விடப் பெரிய பணக்காரன் ஒருவனை உனக்குப் பிடித்துப் போய் விட்டால், அப்போது பிரிந்து போக முடியாதபடி, பிள்ளை குட்டி என்று இடைஞ்சல் கூடாது என்று நினைத்தேன்."

"ரொம்ப பரந்த மனது, உங்களுக்கு!" என்றாள் அவள் எரிச்சல் தாளாமல், குத்த முயன்று.

வழக்கம் போல, லேசாகத் தோளைக் குலுக்கினான் சித்தரஞ்சன். ''எனக்கு இதில் ஒரு நன்மை இருக்கிறது, திலோத்தமா. நீ பிரிய விரும்பு முன்னராகவே, எனக்கு நீ அலுத்துப் போய் பிரிவை நான் விரும்பினால், குழந்தையை வைத்து என்னைக் கட்டிப் போட, உன்னால் இயலாதிருக்க வேண்டும் அல்லவா? உன் பணத்தாசை பற்றித் தெரிந்து விட்டதால், அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும்தான், இந்த முடிவு செய்தேன்.''

உறுத்தலே இல்லாமல் சொல்லி முடித்தவன் ''முக்கியமாக, இன்றைய நிலையில், உனக்கு என்னைப் பிரிய மனம் வராதுதானே?'' என்றான் ஏளனமாக.

நொந்து, நைந்து என்று திலோ படித்திருக்கிறாள், உண்மையிலேயே, அப்போது, அவளது இதயம் அப்படித்தான் இருந்தது. மற்றபடி, இப்படி வலிக்காது!

கடைசி முயற்சியாக ''இவ்வளவு யோசித்துத் திட்டமிட்டுச் செயல்பட, உங்களால் முடிந்திருக்கிறது. ஒரே ஒரு தரம், இவள் நல்லவளாகவும் இருக்கலாமே என்று அந்த மாதிரியும் எண்ணிப் பாருங்களேன், ரஞ்சன்!'' என்று கெஞ்சுதலாகக் கேட்டாள்.

''எப்படி முடியும்?'' என்று கேட்டான் சித்தரஞ்சன். ''யாரோ சொல்லி, இதை நம்பி நான் செயல்படவில்லையே! என் கண் முன்னால், என்னிடமே அல்லவா கூறினாய்! என்னை மணப்பதற்கு, நீ முட்டாள் அல்ல என்றாயே! அதுவும் அவ்வளவு நாட்களும் ஒட்டி பழகிவிட்டு! அதற்கு மேலும், உன்னை நம்புவதற்கு, நான் பைத்தியக் காரனா?''

''ரஞ்சன், நான் அப்படிச் சொன்னது மெய்யாகவே உங்கள்...'' என்று மறுபடியும் காரணம் சொல்லத் தொடங்கியவள், அவன் முகம் கடுப்பதை கண்டு திகைத்துப் பேச்சை நிறுத்தினாள்.

அவள் சொல்வது எதையுமே அவன் நம்பத் தயாராக இல்லை என்றால், என்னதான் செய்வது? அவனை நம்ப வைப்பதற்கு, ஒரு வழியுமா இல்லாது போகும்? ஏதாவது ஒரு நிரூபணம்... சான்று...

சட்டென நினைவு வர, மீண்டும் நம்பிக்கையோடு... அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன், அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். ஓர் ஏளன உதட்டுப் பிதுக்கலுடன், ''புதிதாக என்ன கதை உருவாகியிருக்கிறது?'' என்று வினவினான்.

''எந்தக் கதையும் இல்லை! மீண்டும், மீண்டும் கோவைக்குச் சென்று, நான் உங்களைத் தேடினேன் என்பதற்கு ஆதாரம். உங்கள் கோவை 'கனவு இல்லம்' கிளையில் வேலை செய்த ஒருவர். வரவு செலவுக் கணக்குப் பிரிவு! நான், திரும்பத் திரும்ப சென்று, உங்களைப் பற்றிக் கேட்டு விசாரித்ததில் எரிச்சலடைந்து, சம்பளப் பட்டுவாடா 'லிஸ்டை'யே, 'நீயே பார்த்துக் கொள்' என்று என்னிடம் காட்டினார். அவர் பெயர் கூட கிட்டத்தட்ட மாமா பெயர் போல இருக்கும். சு... சுந்தரேசன்!'' என்றாள் அவள். ''அவரிடம் விசாரித்தீர்கள் என்றால், நான் கோவைக்கு அடிக்கடி போய், உங்களைப் பற்றிக் கேட்டது, கட்டாயம் தெரிய வரும்'' என்று உற்சாகத்துடன் கூறினாள்!

உயிருள்ள சாட்சி! அதுவும் அவனது அலுவலகத்திலேயே பணி புரிகிறவர்! அவர் பேச்சை நம்பாமல், சித்த ரஞ்சன் எப்படி விடுவான்?

ஆனால், ''பிரமாதம்!'' என்று கணவன் கை தட்டிய விதம், அவளது வயிற்றில் மீண்டும் புளியைக் கரைத்தது!

என்னவோ என்று அவள் விழி விரியப் பார்த்திருக்க, ரஞ்சன் தொடர்ந்தான். ''நீ கெட்டிக்காரி என்று எனக்குத் தெரியும், திலோத்தமா! ஆனால் இவ்வளவு குயுக்தி இருக்கும் என்று, எனக்குத் தெரியாதும்மா! நான் அந்த நிறுவனத்தின் உரிமையாளன். எனவே, சம்பளப் பட்டியலில் என் பெயர் இருக்காது என்று ஊகித்து, அதை நீ தேடிக் கண்டு பிடித்த மாதிரிக் காட்ட, ஏறத்தாழ நீ பிரிந்து சென்ற அந்த சமயத்திலேயே, பணியிலிருந்து விலகிப் போனவரைச் சாட்சிக்குக் கூப்பிடுகிறாயே! இப்போது, அவர் இருக்கும் இடமே தெரியாது! எவ்வளவு கெட்டிக் காரத்தனம் இருந்தால், அவர் பெயரைச் சொல்லுவாய்? அப்பப்பா! படு பயங்கரமான ஆள் நீ!''

பாராட்டுவது போலவே, ஒருத்தியை இவ்வளவு மட்டம் தட்ட, இவனால் மட்டும்தான் முடியும்!

ஆனாலும், அவளது தலைவிதியை என்னவென்று சொல்ல?

இருந்திருந்து, அந்த மனிதரா, வேலையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்?

அதுவும், அதே மூன்று ஆண்டுகளுக்கு முன்பு!

அலுத்துப் போய் விட்ட போதும், திலோத்தமா அத்துடன் விட்டுவிடவில்லை!

எப்படி விடுவது? வீணாவது, அவளது நிம்மதி ஆயிற்றே!

தன் சுய விளக்கப் பேச்சு அவனுக்குக் கடுப்பேற்றுவதை உணர்ந்து, அதை நிறுத்திக் கொண்டாள்.

ஆனால், அவள் எதெதற்கு ஆசைப்படுகிறவள்... பேராசைப் படுகிறவள் என்று சித்தரஞ்சன் சொன்னானோ, அவற்றை ஒதுக்கித் தன்னை நிரூபிக்க முயன்றாள்.

பெரிய நகைகள், உயர்ந்த உடைகள், வாழ்க்கை வசதிகள்!

எதுவுமே வேண்டாம் என்று இருக்கத் தொடங்கினாள்.

உணவில் உயிர் வாழப் போதுமானதை மட்டும் உண்டாள்.

அவளது அறையில் ஏ.சி. போடுவது இல்லை. காரைப் பயன்படுத்தி எங்கும் செல்வது இல்லை.

அவன் வாங்கிக் கொடுத்த விலை உயர்ந்த ஆடைகளை அணிவது இல்லை. பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்தவைகளில், மிகச் சாதாரணமானவைகளையே தேடி எடுத்து உடுத்தினாள்.

அவன் வாங்கிக் கொடுத்த நகைகளை, அவனது அறையிலேயே கொண்டு போய் வைத்து விட்டாள்.

இந்த செயல்களால் எந்தப் பயனும் விளையக் கூடும் என்று பெரிய நம்பிக்கை எதுவும் அவளுக்கு வர மறுத்தது! நடிப்பு என்று கூடச் சொல்லக் கூடும். ஆனால், எவை எவைகளுக்காக எதையும் செய்வாள் என்று, சித்தரஞ்சன் அவளைப் பற்றி மட்டமாகப பேசினானோ, அந்தப் பொருட்களை அனுபவிப்பது, பயன்படுத்துவது கூட, அவளுக்குப் பிடிக்காமல் போயிற்று.

இதெல்லாம் இல்லாமல் அவளால் வாழ முடியாதா? அல்லது, இவைகளுக்காக மட்டுமே அவள் யாரையேனும் மணப்பாளா?

குடிசையில் கூட, சந்தோஷமாக வாழ்கிறவர்கள் இல்லை!

இப்படியெல்லாம் எண்ணியவள், கணவனையும் முடிந்த அளவு தவிர்த்தாள்.

போகட்டும், அவன் சொன்ன பிரிவு நேரும்போது, இந்தத் துன்பம், அவள் அனுபவித்துத்தானே தீர வேண் டும்? இது ஒத்திகையாக இருக்கட்டும் என்று எண்ணிப் பல்லைக் கடித்து, சகித்தாள் திலோத்தமா.



## 10

சில் வண்டாய் அருகிலேயே இருந்து பேசிச் சிரித்து விளையாடி இருந்ததை விடுத்து, சித்தரஞ்சனிடமிருந்து விலகி நின்றது, திலோத்தமாவுக்குத் துன்பமாகத்தான் இருந்தது.

ஆனால், அவன் பேசிய பேச்சுக்களின் பின், அவளது எதிர்ப்பும், வேதனையும் அவனுக்கும் தெரிய வேண்டும் தானே?

ஒரு சில நாட்கள் கவனியாதது போல இருந்தவன், ஒரு நாள் திடுமெனக் கோபம் காட்டினான்.

''எதற்கு இந்த ஜாலம்? இதனாலெல்லாம் முன்பு நடந்தது இல்லை என்று ஆகிவிடுமா? இல்லை, உன்னைத் தான் நான் இனியும் நம்பி விடுவேனா? ஏங்கி இருந்தது

கிடைத்தால், அதை அனுபவிப்பது தானே?'' என்று கேட்டான்.

''என்றோ ஒருநாள், உங்கள் வாழ்வை விட்டு என்னை வெளியேற்றப் போகிறீர்கள்தானே? அன்றைய நிலைக்கு, இப்போதே பழகிக் கொள்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவள் பதிலுக்கு!

''ரொம்பக் குத்தலாகப் பேசிவிட்டதாக நினைப்போ? சட்டப் பூர்வமாக என் மனைவி, நீ பிரியும்போது கிடைக்கும் பெருந்தொகையே, வளமான வாழ்க்கைக்குப் போதுமானதாக இருக்கும். அதனால், இந்த அசட்டுப் பைத்தியக்காரத்தனங்களை நிறுத்திக் கொள்'' என்றான் அவன் அதிகாரமாக.

அவளது நகைகளை அவளது அறையிலேயே கொண்டு வந்து வைத்து, ''முதலில் இந்த நகைகளை எடுத்து உள்ளே வை! நான் நகை அணிவது இல்லை என்பதோடு, இவை உனக்காக வாங்கியவை. நாம் பிரியும்போதும், இவை உன்னோடுதான் இருக்கப் போகின்றன!''

பிரிவு. அதை அவன் விடுவதாக இல்லை! மறக்க விடுவதாகவும் இல்லை!

அவள் பேசாமலே நிற்கவும், ''இந்த ஒரு வாரத்து நடவடிக்கைகள் எல்லாவற்றையுமே இத்தோடு விட்டு விடு. எல்...லாவற்றையுமே இதனாலெல்லாம், நமக்குள் எதுவுமே மாறப் போவது இல்லை. முக்கியமாக உன் மீதுள்ள என் மோகம் இப்போதைக்கு, எனக்குத் தீருவதாக இல்லை. அதனால் இப்படி விலகியிருந்து, சீண்டி, தூண்டிவிட வேண்டிய அவசியமும் இல்லை!''

மனம் வெதும்பி ஒதுக்கினால், அவன் கனவிலும் கருதாத உள்ளர்த்தம் ஒன்றை, அதற்கும் கற்பிக்கிறானே!

கொதித்துப் போய் ''ஒருவேளை, எனக்கு நீங்கள் அலுத்துப் போய் விட்டீர்களோ, என்னவோ?'' என்றாள் அவள் ஆத்திரத்தோடு.

அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஏளன நகைப்பு!

''அருகிலே வந்தேன் என்றால், உன் பொய் ஒரு வினாடி கூடத் தாங்காது என்பது, உனக்கும் தெரிந்த உண்மை! அதனால், இந்த அசட்டுப் பேச்சுக்களை விட்டு விட்டு, அசட்டுத்தனங்களையும் விட்டு விட்டு, எப்போதும் போல இரு'' என்றான் அழுத்தத்துடன்.

ஒத்துக்கொள்ளப் பிடிக்கவில்லை என்றாலும், அவன் சொன்னது உண்மைதான்!

அடுத்தவரின் அருகாமை இருவருக்குமே சொர்க்க மாகத்தான் இருந்தது!

ஆனால், தனியாக இருந்து யோசிக்கும்போதுதான், திலோத்தமா ரொம்பவும் தவித்துப் போனாள்.

தன்னை இவ்வளவு மட்டமாக நினைக்கிறவன் தொட்டால் ஒட்டிக் கொள்கிறோமே என்று அவமான உணர்வு. அவளைக் குன்றிக் குறுக வைத்தது.

அதே சமயம், அவன் உறுதியாகச் சொல்லுகிற அந்தப் பிரிவு நேரும்போது, அதைத் தாங்குவது எப்படி என்கிற கவலை வேறு, அவளை நெஞ்சடைக்கச் செய்தது.

இரண்டுமாகத் திலோவை உலுக்கி எடுத்தது, அவளது உடலில் தெரியத் தொடங்க, அது மற்றவர்களின் கவனத்தையும் கவர்ந்தது.

தாய் வீட்டுக்கு வந்து, நாள் கணக்கில் தங்காவிட்டாலும், வெளியே போய் வருகிற வேளைகளில், திலோ

அவ்வப்போது வந்து தலையைக் காட்டிவிட்டுப் போவாள். சில மணி நேரம் தங்கிவிட்டுக் கூடச் செல்வதுண்டு.

சித்தரஞ்சனே, உத்தம மருமகனாக மனைவியை அழைத்துப் போய் வருவான்.

இப்போது இருவருக்குமிடையே நேர்ந்த உரசல், கணவன் மனைவி இருவரையுமே பாதித்து, பல பழக்க வழக்கங்களை மறக்க வைத்தது.

என்னதான் திட்டம் போட்டுத் திலோவை மணந்திருந்த போதும், அதை இவ்வளவு சீக்கிரமாக வெளிச்சத்துக்குக் கொண்டு வர, சித்தரஞ்சன் எண்ணவில்லை போலும், திட்டம் மாற நேர்ந்ததினாலோ என்னவோ, அவனுக்குப் பல்வேறு மனப் பிரச்சினைகள்! அதனூடே, அவனது உத்தமப் போர்வையைக் கூட அணிய மறந்து போனான்.

திலோவைப் பொறுத்த அளவில் அது உள்ளார்ந்த உணர்ச்சியில்லை. வெறும் பார்வை என்று அறிய நேர்ந்ததே, மாபெரும் அதிர்ச்சி!

பயங்கர அதிர்ச்சியும், அதையும் ஒதுக்கி, ஏதேதோ முயன்றும் நிலைமையைச் சீர் செய்ய முடியாத தவிப்புமாக, அன்றாடக் கடமைகள் கூட, அவளுக்கு மறந்து போயின. உணவு உட்பட!

மெல்ல இது, மற்றவர்களின் கவனத்தையும் கவரலாயிற்று.

தொடர்ந்து ஒரு மாதமாகியும் மகள் வராதிருக்கவும், பெற்றவள், தானே மகளைப் பார்க்க வந்தாள்.

மகளின் சிறு மெலிவு தாயின் கண்களுக்குத் தப்பவில்லை.

முதலில் ஆவலாக மகளின் முகத்தைப் பார்த்த செந்திரு. அங்கே இருக்க வேண்டிய பூரிப்பைக் காணாமல் திகைத்துப் போனாள்.

அது மட்டுமல்ல ''ஏதேனும் விசேஷமா?'' என்று ஆர்வத்துடன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுமுன், பார்த்ததே பொய்யோ என்று ஐயமுறும் வேகத்தில் மகளின் முகத்தில் தோன்றி மறைந்த வலி, தாயின் நெஞ்சை கனக்க வைத்தது.

கவலையோடு, பிரச்சினை என்னவென்று மகளிடம் விசாரித்தாள்.

நிர்மலமான முகத்துடன் ''பிபி... பிரச்சினையா? ஏனம்மா திடீரென்று, இப்படி ஓர் அசட்டுக் கேள்வி?'' என்று வேடிக்கை போலக் கேட்டாள் மகள்.

தோன்றியதா, இல்லையா என்றே நிச்சயமில்லாத ஒன்றை எப்படிக் கேட்பது? செந்திரு சற்று தயங்குகையி லேயே ''இங்கே வாங்கம்மா'' என்று திலோ, தாயை எழுப்பித் தன் அலமாரியைத் திறந்து காட்டினாள்.

சித்தரஞ்சன் திருப்பித் தந்த நகைகளைக் காட்டினாள்.

''எல்லாம், வைரம், ரூபி, எமரால்டு என்று ஒரிஜினல் ரத்தினங்களம்மா. இவ்வளவு நாட்களுக்குள், உங்கள் மருமகன் எனக்கு வாங்கித் தந்தவை. நீங்களானால், என்னவோ கேட்கிறீர்களேம்மா!'' என்று சலுகையாகத் தோளைக் கட்டிக் கொள்ளவும், தாயின் கவலை அகன்று, அப்போதைக்கு நிலைமை சரியாயிற்று.

ஆனால், வீட்டுக்குத் திரும்பிச் சென்று, மகளின் வீட்டுக்குப் போய் வந்தது குறித்துக் கணவனிடம் விவரிக் கும் போதுதான், செந்திருவுக்கு உள்ளூர உறுத்தியது.

பிரச்சினை பற்றிக் கேட்டபோது, கண்ணைப் பாரா மலே, திலோ பதில் சொன்னாளோ? அதற்கு வசதியாகத் தான், சலுகை போலத் தோளில் அவள் சாய்ந்து கொண் டதேயோ?

உடனே மகளிடம் இது பற்றிக் கேட்டறியச் செந்திரு வின் உள்ளம் துடிக்கத்தான் செய்தது. ஆனால், கணவன் மனைவிக்கிடையே கூடல் போல ஊடலும் இல்லாதிராது.

பெற்றவளே என்றாலும், இதிலெல்லாம் மூக்கை நுழைப்பது அநாகரீகம்! புது மணமக்களுக்கு நல்லது மில்லை!

தானாக அமர்ந்து விடக்கூடிய கங்கு, ஊதி, பெரும் தீயாக்கி விடக்கூடாது.

சற்றுத் தள்ளித்தான் என்றாலும், உள்ளூரிலேயே வசிக்கும் மகளைப் பார்க்க, பேசத் துடித்த மனதை, அடக்கிக் கொண்டு செந்திரு சும்மா இருந்தாள்.

பொதுவாக தொழில், கிளப் நண்பர்கள் தவிர வேறு எதையும் அதிகம் கவனியாத நடேசனுக்கும், மருமகளின் வேறுபாடு கண்ணில் பட்டு உறுத்தியது.

ஆனால், அவரும் பெரிய மனிதர் அல்லவா? கணவன் மனைவி தகராறில் அழையா விருந்தாளியாக உள்ளே புகுந்து குட்டை குழப்ப அவரும் விரும்பவில்லை.

ஆனால், சும்மா ஒதுங்கி விடாமல், வேறு வழி கையாண் டார்!

மகள் வீட்டுக்கு மனைவி சென்று சில மாதங்கள் கடந்து போயிருந்தன. தானும் சென்று சில தினங்களை மகள் வீட்டிலேயே கழித்து விட்டு, மனைவியோடு திரும்பலாம் என்று திட்டமிட்டார்.

மனைவி வந்தால், எல்லாம் சரியாகிப் போகும் என்பது, அவரது அசைக்க முடியாத நம்பிக்கை!

ஆனாலும், மகனிடம் மருமகள் மெலிவது குறித்து, ஒரு முறை குறிப்பிட்டுப் பேசி விட்டே போனார்.

அதன் பிறகே விழிப்பு வந்தவன் போலக் கவனித்த போது, மனைவியின் மெலிவு சித்தரஞ்சனின் கண்களை யும் உறுத்தியது.

ஆனால், அதற்காக அவளிடமே ஆத்திரப்பட்டான்.

''சுற்றிலும் ஒவ்வொரு பிடியாகப் பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறாயாக்கும்? அப்பா பார்த்து, உனக்காகப் பேச வைப்பதற்காகத்தானே, இந்த அரைப் பட்டினி, முக்கால் பட்டினி எல்லாம்? இன்னும், அம்மா வந்ததும், அவர்கள் வேறு விசாரிக்க வேண்டும்! அதுதானே, குறிக்கோள்? நான்தான், இப்போதைக்கு நாம் பிரியப் போவது இல்லை என்று, தெளிவாகச் சொன்னேனே! அப்புறமும் எதற்கு இந்த அசோக வனத்து சீதை வேஷம்?'' என்று காய்ந்தான்.

''வேஷம் போடுவது, எனக்குப் பழக்கம் இல்லாதது'' என்றாள் அவள் மொட்டையாக.

முகம் கன்றிய போதும் ''அதை நான் சொல்ல வேண் டும்!'' என்று திருப்பிக் கொடுத்துவிட்டு, ''பின்னே ஒழுங் காகச் சாப்பிடுவது தானே? ஊறுகாயும், மோர் சாதமும் மட்டு மாய், உன் வீட்டில் கூட உண்டு பழக்கமில்லை என்று எனக்கும் தெரியும்'' என்றான் சித்தரஞ்சன் கோபமாக.

மேஜை மீது இருந்த உணவு வகைகளை ஆராய்ந்து விட்டு கண்களில் யோசனையோடு ''அன்பிலாச் சோறு என்பிலே குத்தியது'' என்று எதிலோ படித்தேன். உங்கள் வீட்டுச் சோறு அல்லவா? எதுவும் மனதுக்குப் பிடிக்க வில்லை'' என்றாள் திலோத்தமா.

திலோத்தமாவின் திருமணத்தின்போது, செல்வநாய கிக்குக் காய்ச்சல், வேறு வந்துவிட, தாய்மாமா மட்டுமே மனைவியோடு, கல்யாணத்துக்கு வந்து விட்டுப் போனான்.

அப்போதே தாயாரின் காலுக்கு ஏதோ புது மருத்துவம் பார்க்க முடிவு செய்திருப்பதாக சுந்தர், தமக்கையிடம் சொன்னான்தான்.

ஆனால், இப்படிப் பல வகைகளில் முயன்று பார்த்துப் பலனில்லாமல் போயிருந்ததால், இதையும் செந்திரு பெரிதாக எண்ணவில்லை. அத்தோடு, பல்வேறு மருந்து களின் பக்க விளைவுகளால், தாய் இன்னமும் சோர்வாகத் தான் அவள் கருதினாள்.

எனவே, ''புது மருத்துவம் என்று அம்மா உடம்பு இன் னமும் அதிகமாக நொந்து விடாமல், பார்த்துக் கொள்ளடா'' என்று மட்டும் தம்பியிடம் சொன்னாள் அவள்.

திலோ, நரேனுக்கும் கூட, அதே எண்ணம்தான்.

ஆனால், பாட்டிக்கு குணமாவதாகக் கிடைத்த தகவல், திலோத்தமைக்குக் குதூகலத்தை அளித்திருந்தது.

இந்தச் செய்தி, கணவனுக்கும் மகிழ்ச்சியைத் தரும் என்பது, அவளுக்கு நிச்சயம். அதனால் அவனோடு விஷ யத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று ஆவலாகக் காத் திருந்தால் அவன் தலையை அல்லவா பிடித்துக் கொண் டிருக்கிறான்!

அவன் வலியில் வருந்தும் இப்போது, அவள் எப்படி மகிழ்ச்சியைக் காட்டுவது?

கணவனின் விருப்பம் போலக் காபியைக் கலந்து கொண்டு வந்து கொடுத்த போதும், நினைத்தது போல, நல்ல விஷயத்தை உடனே சொல்ல முடியாது போனது, திலோத்தமாவுக்குக் குறையாகத்தான் இருந்தது!

காபி அருந்திய பிறகும் கூட, அன்று முழுதுமே அவனது முகச் சுளிப்பு மாறாததால், அவளது நல்ல செய்தி, அன்றைக்கு அவள் உள்ளேயே உறைந்து போயிற்று!

அன்றைய மனச் சோர்வுக்கு ஈடு செய்கிறவனைப் போல, மறுநாள் சித்தரஞ்சன் மனைவியைக் கூட்டிப் போய் ரூபியில் ஒரு நகை செட் வாங்கிக் கொடுத்தான்.

அதற்கு முந்திய வாரம் வாங்கிய சேலைக்குப் பொருத்தமாக வாங்கியதாக, அவன் காரணம் சொல்லவும், திலோவுக்குக் குபீர் சிரிப்பு வந்தது!

குளிர்பானம் குடிப்பதற்காக 'ஸ்டிரா' வாங்கிவிட்டு, அப்புறமாக குளிர்பானம் வைப்பதற்காக ப்ரிட்ஜ் வாங்கிய தோழியின் கதை பொருத்தமாக நினைவு வர, அதனால் பொங்கிய சிரிப்பு. விஷயத்தைச் சொல்லவும், ரஞ்சனும் கூடச் சேர்ந்து நகைத்தான்.

சிரித்தாலும், ''நகைக்காக சேலையோ, அன்றி சேலைக்காக நகையோ, பெரிது சிறிது இரண்டையும் வாங்கப் பணம் இருக்கும்போது, எதை, எப்போது வாங்கினால் என்ன? விருப்பம் போலச் செலவு செய்வது குறித்து சந்தோஷப்பட வேண்டியதுதானே?'' என்றான் அவன். ''சொல்லு, இன்று இந்த நகை வாங்கியது உனக்கு சந்தோஷம்தானா, இல்லையா?''

''சரிதான், சேலையும், நகையுமாக கணவர் வாங்கிக் கொடுத்தால், அது ஒரு தனி மகிழ்ச்சியாகத்தானே இருக்கும்? இல்லையென்று எப்படிச் சொல்லுவேன்?'' என்று மந்தகாசப் புன்னகையோடு பதிலிறுத்தாள் மனைவி.

''பரவாயில்லை! உண்மையை ஒத்துக் கொண்டாயே அதுவே எனக்கும் மகிழ்ச்சிதான்!'' என்றான் அவன்.

மறுத்தாலும், அது உயிர் நேசமே என்பதில், திலோவுக்கு ஐயமே கிடையாது! அப்படிப்பட்ட அன்பு, எப்படிப் பிரிவில் முடியக்கூடும்?

தடுப்பதற்கு ஏதாவது வழி இருக்கத்தான் செய்யும். அது என்ன?

தன் தாய் மாமா சுந்தரிடம் சொல்லி, 'கனவு இல்லம்' சுந்தரேசனைத் தேட வைத்து, ஒரு முயற்சி செய்து பார்த்தாள்.

ஆனால், பணி விலகிய மனிதர் பற்றி, அக்கம் பக்கத்தில் கூட எந்த விவரமுமே கிடைப்பதாக இல்லை. வெளி நாட்டிலோ, வெளியூரிலோ இருக்கும் உறவினரோடு வசிக்கிறார்.. என்று அதுவும் தெளிவற்ற வதந்திதான் கிடைத்தது.

ஒரே ஒரு நல்ல சேதியாகப் பாட்டியின் உடல்நிலை, பெரிதும் தேறியிருப்பதாகத் தாய்மாமன் சொன்னான். மற்றபடி, அவளது பிரச்சினை அப்படியேதான் இருந்தது.

வழக்கம்போல, இல்லாத வழியைத் தேடித் தேடி அலுத்துப்போய், இருளை வெறித்தவாறு திலோத்தமா மனம் சலித்து நின்றாள்.

பழைய பாட்டின் ஒரு பகுதி, காற்றோடு எங்கிருந்தோ வந்து, காதில் மோதியது.

..... உணவு செல்லவில்லை சகியே, உறக்கம் கொள்ள வில்லை. கணமும் உள்ளத்திலே அமைதி, காணக்கிடைக்க வில்லை....

பாட்டின் முன்னும் பின்னும் என்னவோ? ஆனால், கணமும் உள்ளத்திலே அமைதி இல்லாதபோது, பசி, தூக்கம்கூட இல்லாது போய்விடும் போல!

''ம். இது அடுத்த மிரட்டலா? மொட்டை மாடியில் இருந்து, எப்போது குதித்து என்னமும் செய்து கொள் வாயோ என்று, நான் பயந்து நடுங்க வேண்டுமாக்கும்?'' என்றது சித்தரஞ்சனின் கடுமையான குரல்.

விதியை நினைத்துச் சும்மா நின்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், அதுவும் குற்றமா?

''நடுங்குவானேன்? நல்லதாயிற்று. பிரிவின்போது, கொடுக்க வேண்டிய பெரும் பணம் மிச்சமாகும் என்று சந்தோஷப்படுங்கள். செத்தவர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்கத் தேவை இராதல்லவா?''

''ஏய்...'' என்று கையை ஓங்கிவிட்டான் சித்தரஞ்சன்.

கை ஓங்குகிற அளவு கோபமா?

எத்தனை தரம் மரண அடி கொடுத்தாலும், மீண்டும், மீண்டும் தலை தூக்கிப் பதில் கொடுக்கிறாளே என்ப தாலா? அவ்வளவுகூட இல்லை என்றால், அவள் படித்துப் பட்டம் பெற்று, மூன்று ஆண்டுகள் வேலை பார்த்ததில் என்ன பயன்?

அவள் வெறித்துப் பார்த்தபடி அசையாது நிற்கவும், ஓங்கிய அவனது கரம் தானாக கீழே விழுந்தது. குரலும் இறங்கியது.

''வா. உள்ளே வந்து படு. பனியில் நிற்க வேண்டாம்'' என்று இறங்கிய குரலில் கூறியவன், ''வா!'' என்று அவளைத் தோளோடு அணைத்து உள்ளே கூட்டிச் சென்றான்.

அவனது வார்த்தைகளுக்காக மட்டுமாக, அவள் பணிந்து வரமாட்டாள் என்று எண்ணினானோ, என்னவோ? பாவம்தான்!

ஆனால், இப்போது யார் பாவம்?

இந்நிலையில், செந்திருவிடம் இருந்து, மகளுக்கு ஒரு சேதி வந்தது.

கோவையிலிருந்து பாட்டி, வெகு அபூர்வமாகச் சென்னை வருகிறார்களாம்.

அபூர்வம் என்கிற அடைமொழியைப் பாட்டியின் வருகைக்காக கட்டாயம் சேர்த்தே ஆக வேண்டும். ஏனெனில், வீட்டை விட்டுப் பாட்டி வெளியே எங்கும் சென்றதாகத் திலோ கேள்விப்பட்டது கூடக் கிடையாது.

அப்படியானால், மெய்யாகவே, பாட்டி எவ்வளவோ தேறித்தான் இருக்க வேண்டும்!

வழக்கம்போலவே, உத்தம மருமகனாக, பெரியவர்களை அலைய விட வேண்டாம் என்று, மனைவியை மாமியார் வீட்டுக்கு சித்தரஞ்சன் அழைத்துச் சென்றான்.

ஆனால், திலோத்தமா எதிர்பார்த்துச் சென்ற அளவுக்குப் பாட்டியிடம் பெரிய வேறுபாடு எதுவும் தெரியவில்லை. கிட்டத்தட்ட அதே சோர்வு, சோபாவில் சாய்ந்துதான் அமர்ந்திருந்தாள். அதே பஞ்சடைந்த கண்கள்!

பயண அலுப்பு என்றாள் செந்திரு!

ஆனால், பேத்தியுடைய கணவனைப் புருவம் சுருக்கிப் பாட்டி நன்கு பார்க்க முயன்றதும், அது சரி வராமல் தலையை அசைத்துக் கொண்டதும் சின்னவளுக்கு வருத்தத்தையே அளித்தது.

இந்த வயதான பெண்மணிக்கு, எதற்கு இந்த அலைச்சலும், வேதனையும்?

அவளது வாழ்க்கை ஒழுங்காக அமைந்திருந்தால், கணவனும் மனைவியுமாகப் பெரியவள் இருக்கும் இடத்திற்குப் போய் பார்த்திருக்கலாம்!

அவன்தான், கோவைப் பற்றிப் பேசவே, முதலில் இருந்தே விடவில்லையே!

'பிரச்சினையா' என்று கேட்ட பிறகு, தாய் வீட்டில் தனித்திருக்கத் திலோத்தமாவுக்கே அவ்வளவாக விருப்பமில்லை.

பிரச்சினைகள் எதையும் பெற்றவளிடம் சொல்லி விடுவாளோ என்ற பயமோ, என்னவோ, மனைவியை அங்கே விட்டுச் செல்ல, சித்தரஞ்சனும் பிரியப்படவில்லை.

எனவே, சற்று நேரம் பாட்டியோடு உட்கார்ந்திருந்துவிட்டு, பெரியவர்கள் ஒருவரும் ஊரில் இல்லாததால் பொறுப்பு.. என்று காரணம் காட்டி, பெரியவள் பேத்திக்குக் கொணர்ந்திருந்த சீரைப் பெற்றுக் கொண்டு, இருவரும் கிளம்பிவிட்டனர்.

என்னவோ ஏமாற்றம் திலோத்தமாவின் நெஞ்சைப் பெரிதாக அரித்தது. அவள் என்ன எதிர்பார்த்தாள்?

சித்தரஞ்சனைக் கண்டதும், பாட்டி அடையாளம் தெரிந்து கொள்வாள் என்றா?

தெரிந்து கொண்டு, உன்னைத் தேடி, என் பேத்தி எத்தனை முறை வந்தாள் தெரியுமா என்று கேட்பாள் என்றா? ஆனால், அவள் ரஞ்சனைத் தேடி அலைந்த விவரம், பாட்டிக்கோ, மாமன் வீட்டாருக்கோ, யாருக்குமே, சரியாகத் தெரியாதே.

குடும்பப் பின்னணி, இருப்பிடம் எதுவும் தெரியாத ஒருவனைத் தேடுவதாகச் சொல்லக் கூசி, ஒரு தோழியோடு ஊரைச் சுற்றியதாகத்தானே வீட்டினர் எல்லோரையும் எண்ண வைத்திருந்தாள்!

இப்போது பாட்டி மூலமாக நிஜமே தெரிந்தால் கூட, சித்தரஞ்சன் இருக்கும் மனநிலைக்கு, அதை அவன் நம்பப் போவதில்லை. ஆனால், கிடைத்திருக்கக் கூடிய சிறு சிறு வழிகளையும், தன் கையாலேயே மூடிவிட்டது போல, ஒரு வருத்தமும், சோர்வும் திலோவை ஆட்கொண்டன.

வீட்டுக்குத் திரும்பிச் சென்றவள், கண்களை மூடிக் கொண்டு, அப்படியே படுத்துவிட்டாள்.

அன்று மட்டுமல்ல. தொடர்ந்து சில நாட்கள் அப்படியே கழிந்தன.

பாட்டி கோவைக்குத் திரும்புகிறபோது மட்டும், கஷ்டப்பட்டு, ரயில் நிலையத்துக்குப் போய் வந்தாள்.

என்ன செய்கிறது. டாக்டரிடம் போகலாமா என்று சித்தரஞ்சன் கேட்டதற்கு, அவள் பதிலே சொல்லாமல் வெறுமனே 'உச்'சுக் கொட்ட அவனும் எரிச்சலோடு திரும்பிக் கொண்டான்.

இந்நிலையில், அலுவலகத்தில் இருக்கையில், சித்தரஞ்சனுக்கு ஒரு போன் வந்தது.

"உங்களிடம் சற்றுப் பேச வேண்டும். எங்கள் வீட்டுக்கு வர முடியுமா?" என்று கேட்டவள் செந்திரு! அவனுடைய மாமியார்!



## 11

பொதுவாக, மாமியாரைப் பொறுத்தவரையில், சித்தரஞ்சனுக்குப் பிரச்சினை எதுவும் கிடையாது.

அந்த வீட்டில் திலோத்தமா தவிர, எல்லோருமே அப் படித்தான்.

பணத்துக்கு அதிக மதிப்புக் கொடுக்கும் விதமாகத் திலோவை வளர்த்து விட்டார்கள் என்பது ஒன்றுதான், அவர்களிடம் குறையாக அவன் உணர்ந்தது.

ஆனாலும், இப்போது அதிகமாக ஒட்டி உறவாடினால், பின்னர் பிரியும்போது சங்கடமாக இருக்கக் கூடும் என்பதால், தேவை என்கிற அளவுக்குமேல், சித்தரஞ்சன் மாமனார் வீட்டுப் பக்கம் போனதில்லை. தங்கி இருந்ததும் இல்லை!

மாமியாரும் இப்படிக் கூப்பிட்டுப் பழக்கம் கிடையாது. அன்பு காட்டினாலும், மட்டு மரியாதையும், அதிகமாகவே வெளிப்படும்.

அந்தப் பையன் நரேந்திரன் விஷயமாக ஏதாவது ஆலோசனை கேட்க, மாமியார் விரும்புகிறாளோ என்று யோசித்துவிட்டு, அப்படி இராது என்று ஒதுக்கினான், மருமகன்.

நரேந்திரன் வயதுக்கு, அவன் அமைதியான பையன். அவனால் பிரச்சினை எழும் பேச்சுக்கே இடமிராது.

பின்னே, பேச வேண்டியது, தன்னைப் பற்றியே தானோ?

குப்பென்று வியர்த்தது, அவனுக்கு.

திலோ ஏதேனும் சொல்லியிருப்பாளோ?

ஆனால், அப்படிச் சொல்லியிருக்க மாட்டாள் என்று தான், அவனுக்கு நிச்சயம். சில மோசமான ஆசைகள் உண்டு என்றாலும், திலோ ரோஷக்காரி. தான் தோற்றுவிட்டதாகத் தாயிடம் கூறக்கூட, அவளுக்குப் பிடிக்காது.

அது மட்டுமல்ல. எப்போதோ நடக்கப்போகிற விஷயத்துக்காக, இப்போதே பெற்றவள் மனதை வருத்த வேண்டாம் என்று, வேதனையைத் தனக்குள்ளே வைத்துக் கொண்டு, வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்கக் கூடியவளும் கூட!

அந்த அளவுக்குத் தாயிடம் பாசமும் உண்டு! தாய், தந்தை, உற்றம் சுற்றம் எல்லாரிடமும்.

அவனுடைய பெற்றோரிடமுமே அன்புதான். அவள் காட்டிய அன்புதானே. அவர்களிடம் இருந்தும், திரும்பக் கிடைத்திருக்கிறது! திலோவிடம் என்னதான் அளந்தாலும், அவன் திட்டமிட்டிருந்த பிரிவு பற்றி அவர்களிடம் சொல்வது, அவ்வளவு எளிதல்லதான். அவனுக்குமே கடினம்தான்.

திலோவிடம் நல்லவை நிறையத்தான்! ஆனால், அந்தப் பணத்தாசை.. அது எல்லாவற்றையும் கெடுத்துவிட்டதே! பாத்திரம் நிறையப் பாலை, ஒரு துளி விஷம் நாசமாக்குவது போல..!

அது மட்டும் இல்லையென்றால், வாழ்க்கை சொர்க்கமாக இருந்திருக்குமே!

ஆனால்.. இல்லை.. இப்போது அந்தப் பிரச்சினை பற்றி யோசித்து, மனதைக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

மாமியார் எதற்காக வரச்சொல்லுகிறாள்? என்ன கேட்கப் போகிறாள்?

என்னவாக இருந்தாலும், ஒரு மூத்த தலைமுறை பேச வேண்டும் என்று சொல்லும்போது செல்லாமல் இருப்பது மரியாதை அல்ல. அவன் மரியாதை அறியாதவனும் அல்ல!

எதுவானாலும், அங்கே போய் விஷயத்தை அறிந்து கொண்டு, நிலைமைக்கேற்ப நடந்துகொள்ள வேண்டியது தான் என்று முடிவு செய்து, சித்தரஞ்சன் திலோவின் பிறந்த வீட்டுக்குச் சென்றான்.

முகம் வாடியிருந்தபோதும், மருமகனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்கள் எதையும், செந்திரு விட்டுவிட வில்லை.

வரவேற்று, உட்காரச் சொல்லி, உண்ண, குடிக்க எடுத்து வைத்த பிறகே, அவனை வரவழைத்த காரணத்தைச் சொன்னாள்.

ஆனால், சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கே வந்தாள்.

''என் அம்மா உங்களைக் கோவையில், தம்பி வீட்டில் நேரில் பார்த்திருப்பதாகச் சொன்னார்கள், மாப்பிள்ளை! மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, என் தம்பி வேலை விஷயமாக வெளிநாடு சென்றபோது, பாட்டிக்குத் துணை யாக, அங்கே திலோ போயிருந்தபோது.. அங்கே வீட்டுக்கே போயிருக்கிறீர்களாமே! அம்மாவின் கண் பார்வை அவ் வளவு சரி கிடையாதல்லவா? சந்தேகத்துக்குத் திரும்பத் திரும்பக் கூர்ந்து பார்த்தார்களாம். உங்கள் அங்க அசைவு களெல்லாம் அதேதான் என்று அடித்துச் சொல்கிறார்கள்! இருவரும் சேர்ந்து, அடிக்கடி வெளியே கூடப் போயிருக் கிறீர்களாமே! அப்போது.. அப்போது ஏதேனும் தப்.. உங் களுக்குள் தகராறு வந்து, அவளைப் பழி கிழி வாங்க வென்று திலோவை மணந்தீர்களா?''

திடுமென விழுந்த கேள்வியில், சட்டென விறைத்தான் சித்தரஞ்சன்.

தன் வாட்டத்தின் காரணம் என்று திலோ, தன்னைப் பெற்றவளிடம் என்ன சொல்லியிருக்கக் கூடும்?

மனதைக் காட்டிக் கொள்ளாமல் ''திலோ அப்படிச் சொன்னாளா?'' என்று கேட்டான்.

''ஐயோ!'' என்றாள் செந்திரு கலங்கிப்போய்.

உடனேயே, ''இல்லையில்லை. திலோ அப்படிச் சொல்லவே இல்லை. எனக்கே ஒரு சந்தேகத்தில் அவளிடம் லேசாகக் கேட்ட போது கூட, சும்மா ஏன் இந்த அசட்டுக் கேள்வி என்றாளே! நீங்கள் வாங்கிக் கொடுத்த நகைகளைக் காட்டி, என்னை.. என்னைத் திசை திருப்பி விட்டாளே! ஆனால், கடவுளே! நீங்கள் இரண்டு பேருமே, நேரடியாக, மறுக்கவில்லையே! அப்படியானால், ஏதோ பெரும் பிரச்சினைதான். இல்லையா? ஐயோ, என் பெண் முகத்தில் ரொம்ப நாளாகச் சிரிப்பையே காணோமே! கள்ளமில்லாத அந்த சிரிப்புதானே, நாலு பேர் அவளை அழகி என்று சொல்ல முக்கியமான காரணமே!'' என்று பொருமிப் புலம்பினாள், பெற்றவள்.

''நீ.. நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை, அத்தை'' என்று பொதுப்படையாகப் பேசியே, சித்தரஞ்சன் சமாளிக்க முயன்றான். திலோ எதையும் தெரிவித்து விடவில்லை எனும்போது, அவனும் வாயை விட்டுவிடக்கூடாது.

கூடவே, பெற்ற தாயிடம் கூட, மனைவி தன்னை விட்டுக் கொடுக்கவில்லை என்று ஒரு பெருமிதமும் உண்டாயிற்று.

ஆனால், தாயின் பாசம் பொறுமையற்றுத் தவியாய்த் தவித்தது.

''பின்னே என்ன? சொல்லுங்கள் மாப்பிள்ளை! வேறே என்ன நடந்தது? ஆனால், என் அம்மா சொன்னது

மெய்தான், இல்லையா? அப்போது, அங்கிருந்து வந்த பிறகே.. அவளிடம் பழைய துள்ளல் இருக்கவில்லை! வேலைக்குப் போகிறவள், பொறுப்பு வந்துவிட்டது என்று நினைத்தேனே! எல்லாம் தப்பு!

"என் திலோ.. இரண்டு நாள் விடுமுறை கிடைத்தாலும், சும்மாச் சும்மாக் கோவைக்கு ஓடினாளே! உங்களைப் பார்க்கத்தானா? 'பாட்டி வீட்டு மோகத்தில், வாங்குகிற சம்பளத்தை ரயிலுக்குக் கொடுத்தே தீர்த்து விடுவாய் போலிருக்கிறதே' என்று அவள் அப்பா கூடத் திட்டுவார்.

"ஆனால், அங்கேயும் வீட்டில் தங்க மாட்டாளாமே! பக்கத்து வீட்டுப் பெண்ணின் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு போய், ஊரெல்லாம் சுற்றிவிட்டு, வாடி வதங்கிப் போய் வருவாள் என்றார்கள், அம்மா! இருவரும் தான் சுற்றினீர்களா? அப்படியானால், வாடி வதங்குவானேன்?

"கிட்டத்தட்ட ஒரு வருஷம், இந்த அலைச்சல் அலைந்தாள். தம்பி கேட்டால், முகவரி தவறிவிட்ட ஒரு தோழியைத் தேடினேன் என்பாளாம். இப்போது கூட, என் தம்பியிடம் அவன் மாதிரியே பேர் கொண்ட ஒருவரைத் தேடச் சொன்னாளாமே! யார் அவர்? மாப்பிள்ளை, என்னவோ என் பெண்.. அவளுக்கு என்ன? அங்கே என்ன நடக்கிறது? அவள் நன்றாக இல்லை. வே... வேதனைப் படுகிறாள். அது தெரிகிறது. ஆனால், கேட்டால் சொல்ல மாட்டேன் என்கிறாளே. என் அம்மா மாதிரி, திலோவும் ரொம்ப ரோஷக்காரி. கஷ்டத்தை வாய்விட்டு யாரிடமும் சொல்கிற பழக்கம், அவளுக்கும் கிடையாது. ஆனால்...

"என்ன என்று, நீங்களாவது சொல்லுங்கள் மாப் பிள்ளை! அன்று ஒரு கணம், அவள் கண்ணில் தெரிந்த வலி.. சோர்வு.. மெலிவு! என்னால் தாங்க முடியவில் லையே!" என்று பரிதவித்தாள் பெற்றவள்.

மாமியாரின் தவிப்பில் பொய்மை இருப்பதாக சித்தரஞ்ச னுக்குத் தோன்றவில்லை! எல்லாமே மெய்தான்.

மருமகன் முன்னிலையில் அழக்கூடாது என்று, அடக்கிக் கொண்டு பேசுகிறாள்.

மகள் சொல்லாவிட்டாலும், நேரடியாக மருமகனிடம் பேசிச் சிக்கலைத் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையில் தான், அவனை வரவழைத்திருக்க வேண்டும்.

ஆனால், அந்த அளவுக்கு வாக்குறுதி கொடுப்பதற்கு, அவன் இன்னமும் தயாரில்லை! நெஞ்சு நிறையக் காதலோடு, அவன் காத்திருந்தபோது, பணம் சம்பாதித்த வனை விட்டு, உன்னை மணப்பதற்கில்லை என்று, அவளேதானே சொன்னாள்!

அதைக் கேட்டு, ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல உணர்ந்தது, அவனது சொந்தக் காதுகளே அல்லவா? அதில் சந்தேகப்படவே வழியில்லையே!

இப்போது, உன் நன்மைக்காகத்தான் அப்படிச் சொன் னேன் என்று சமாளித்தால் எப்படி நம்புவது?

அதாவது, சந்தேகத்துக்கு இடமற்று, எப்படி நம்புவது?

இவர்கள் சொல்வது போலக் கொஞ்ச காலம்.. மாமியார் குறிப்பிட்ட ஓர் ஆண்டு காலமே கூடத் திலோ கோவை யில் அவனைத் தேடியிருந்தாலுமே, அப்புறம்?

அடுத்த இரண்டு ஆண்டுகளில், என்ன வேண்டு மானாலும் நடந்திருக்கலாமே! நல்ல வரன் கிடைத்திருந் தால், எவனையோ கல்யாணம் பண்ணிக் கொண்டிருப் பாள்தானே?

அவனைப் போல, அவளையே நினைத்தபடி இருந் திருப்பாளா, என்ன?

அவன் மெல்ல எழுந்தான். ''நீங்கள் அழைத்தீர்களே என்று, நான் பாதி வேலையில் தொழிற்சாலையிலிருந்து வந்தேன்... அப்பா கூட ஊரில் இல்லை...''

சட்டென்று செந்திருவுக்கு மனம் பொங்கிவிட்டது.

பத்து மாதம் சுமந்து பெற்ற மகளது வாழ்வைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறாள், அவள். இந்த மருமகனின் வாழ்வும், அதுதான். ஆனால் இவனுக்குத் தொழிற்சாலை தான் பெரிதாகத் தோன்றுகிறதா?

அவர்களைப் போல ஒருவனை.. சற்று மேல் தட்டு மத்திய வகுப்பில் ஒருவனை, மகள் மணந்திருந்தால், இப்படித் தொழிற்சாலையைப் பெரிதாக நினைப்பானா? மனைவியின் மகிழ்ச்சிதான் முக்கியம் என்று, அதற்கானதைப் பார்த்திருக்க மாட்டானா?

அந்த மாதிரி எத்தனை பேர்...

மனம் நினைத்தது, வார்த்தையிலும் வந்தது.

''திலோவைப் பெண் கேட்டு, நல்ல நல்ல இடங்களில் இருந்து.. உங்கள் அளவு பணம் இல்லாவிட்டாலும், எங்களை விடக் கூட மேலாக, அரை லட்சம், முக்கால் லட்சம் ஊதியம் வாங்குகிற பையன்கள் பலர், அவள் அழகைப் பார்த்து ஆசைப்பட்டுக் கேட்டார்கள்.ஆனால், அவள் கண்ணெடுத்தும் பார்க்க மறுத்துவிட்டாள்! இரண்டு ஆண்டுகள் அவளோடு மல்லாடினோம். கடைசியாக, உங்களை மட்டும்தான், ஒரு தரம் பார்த்ததுமே சிரித்துக் கொண்டு சரி என்றாள். மூன்று ஆண்டுகளாக, உள்ளே புதைத்து வைத்திருந்தது என்று இப்போது புரிகிறது. ஆனால்.. சாப்பிடக் கூட இல்லாமல், படுத்தே கிடக்கிறாளாமே! உங்கள் வேலையாள் சொன்னாள். போனையும்

எடுப்பது இல்லை! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், மாப்பிள்ளை! உடனே போய், என் பெண் ணைப் பாருங்கள்! உங்களுக்கு நேரமில்லாவிட்டால், சொல்லுங்கள், நானே அவளை இங்கே கூட்டி வரு கிறேன்!'' என்றாள் அவள் வேதனையோடு.

இங்கே கூட்டி வருவதா?

ஒரு கணம் திகைத்தவனுக்கு உடனே புரிந்தது!

குரலில் கனிவோடு ''கவலைப்படாதீர்கள், அத்தை! விஷயத்தை என்னிடம் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது, இனி என் பொறுப்பு. நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் அமைதியாக இருங்கள்'' என்று தேறுதலாகக் கூறிவிட்டுக் கிளம்பினான்.

அவனுக்குச் சற்று யோசிக்க வேண்டியிருந்தது.

போக்குவரத்து அதிகம் இல்லாத சந்துத் தெரு ஒன்றி னுள் காரைச் செலுத்தி, மர நிழலில் நிறுத்திச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இந்தக் கடைசி விவரம், திலோ கூறவில்லை. ஆனால், அவள் குணத்துக்கு, இது போலெல்லாம் பெருமையடிக்க மாட்டாள். அவளுக்காக எத்தனை பேர், வரிசையில் நின்றார்கள் என்று... அது போன்ற பேச்சையே அருவருக் கிறவள்!

அவ்வளவு அழகாக இருந்துகொண்டு, அதையுமே, அவள் பெரிதுப்படுத்திப் பேசியதில்லை.

தம்பட்டம் பிடிக்காது. தற்பெருமை கிடையாது. இன்னும், இன்னும், இன்னும் நிறையத்தான்..!

அவனுடைய பெற்றோரின் அன்பும், நம்பிக்கையுமே, அவளுக்கு மிகச் சிறந்த நற்சான்றுகள் ஆயிற்றே!

'இவள் நல்லவளாகவும் இருக்கலாம்' என்று எண்ணிப் பார்க்கச் சொன்னாளே!

அவள் சொன்னது போல, ஒருவேளை, அவனது படிப்பும் பட்டமும் வீணாகி விடக்கூடாது என்று அவனை உந்தி விடுவதற்காகவே திலோத்தமா திருமணம் பற்றி, அப்படிச் சொல்லியிருந்தால்?

திலோ, மறுபடி கோவை சென்று அவனைத் தேடியது நிஜமாகவே இருக்கலாம். இப்போது, நிஜமாகத்தான் தோன்றுகிறது. அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றதுமே, பொய்யாயிருக்க வழியில்லை. ஏனெனில், கண்டுபிடித்திருக்க முடியாது!

சித்தரஞ்சன் அப்போது சென்னையிலிருந்து, நேராகச் சென்று, வீட்டுப் பாதுகாப்புக் கருவிகளின் தேவை பற்றித் தனிப்பட்ட ஒரு கணக்கீட்டை நடத்திக் கொண்டிருந்தான். அவர்களது 'கனவு இல்லம்' நிறுவனம் கட்டும் வீடுகளில், இந்தக் கருவிகளைப் பொருத்தி, அதற்கு ஒரு தொகை சேர்த்தால், எடுபடுமா என்கிற ஆராய்ச்சி. யார் என்று தெரிந்தால் நிறுவன அலுவலர்களின் வழிசலும், குறுக்கீடும் ஏற்படக் கூடும் என்பதால், கோவைக் கிளையில் இவன் பெயரே கூறாது வைத்திருந்தான். அவன் கோவையில் இருந்ததே, அங்கே யாருக்கும் தெரியாது. கூடவே 'ரஞ்சன்' என்று பாதிப் பெயரை மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருந்தான்.

திலோ அறிந்தது, அந்த வெறும் 'ரஞ்சனை'யே... அந்தப் பெயரைக் கோவைக் கிளையில் கேட்டால், தெரியாது என்றுதான் சொல்லியிருப்பார்கள். சம்பளப் பட்டியலிலும் பெயர் இருக்க வாய்ப்பில்லைதானே?

ஒரு நம்பகத்தன்மைக்காக மட்டுமே 'கனவு இல்லம்' பெயரைப் பயன்படுத்தினானே தவிர, கோவைக் கிளை யோடு, அவன் தொடர்பே வைத்துக் கொள்ளவில்லை.

சுந்தரேசன், பணக் கணக்குப் பகுதியில் பணி புரிந்தது மெய்யே! திலோத்தமாவின் தொல்லை தாளாமல், அவர் சம்பளப் பட்டியலைக் காட்டியும் இருக்கலாம்!

கோவைக் கிளையை இரண்டாகப் பிரித்து, அனுபவப் பட்ட அலுவலர்களைக் கொண்டே, ஈரோடு, திருப்பூர் கிளைகளைத் தொடங்கியதால், கனவு இல்ல நிறுவனமே, அங்கே இல்லாது போனதாக அவள் சொன்னதும் சரியே!

அதற்கு மேல், திலோவுடைய தாயார் சொன்னதை வைத்துப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட எல்லாமே, திலோ சொன்னதோடு பொருந்தித்தான் வருகிறது!

கிட்டத்தட்ட!

ஆனால் இதை நூறு சதவீதமாக எப்படி ஏற்பது?

ஆனால், வாழ்வில் எதுதான் நூறு சதவீதத்தை எட்டு கிறது?

சர்வ வல்லமை பொருந்திய அரசாங்கத்தின் எத்தனை எத்தனை திட்டங்கள்! எல்லாம் சரியாக நிறைவேறியிருந் தால், இப்போது நாட்டில், பாலாறும், தேனாறுமாகத்தான் ஓட வேண்டும். அப்படியா நடக்கிறது?

தொழில் வெற்றிகளை எடுத்துக் கொண்டால், ஐம்பது சதவீதம் கிடைத்தாலே, ஆஹா என்றுதான் இருக்கிறது.

வாழ்க்கையையும், அப்படித்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமோ? குற்றம் பார்க்கில், சுற்றம் இல்லை!

'திலோ நல்லவளாக இருந்தால்..' என்று.. அதையே மந்திரமாக உருப்போட்டபடி, வாழ வேண்டியதுதான். யோசித்துப் பார்த்தாலும், அவள் நல்லவளாகத்தானே தெரிகிறது!

இந்தப் 'பிரிவு' என்கிற வார்த்தையை தூக்கி எறிந்து விட்டு, எல்லோரையும் போல குழந்தை குட்டி என்று குடும்ப உறவைப் பலப்படுத்திக் கொண்டால், எல்லாம் சரியாகிப் போய்விடும்.

'பிரிவை' கைவிடுவதும், அப்படி ஒன்றும் கடினம் அல்ல.

சும்மாவே, சற்று சிரமப்பட்டுத்தான், திலோவிடம் சொல்லுகிற சாக்கில், அதைத் தனக்குமே அவன் நினைவுப்படுத்திக்கொண்டிருந்தான். இனி, அந்தத் தொல்லை மிச்சம்!

எவ்வளவோ ஆறுதலாகவும், நிம்மதியாகவும் உணர்ந்த போதும், உடனே வீட்டுக்குச் சென்று, மனைவியோடு இதைப் பகிர்ந்துகொள்ள, சித்தரஞ்சன் விரும்பவில்லை.

இது பெரிய விஷயம். சும்மா வீட்டுக்குப் போய், திலோத்தமாவிடம் சொல்லிவிட்டு, மறுபடியும் அலுவலைப் பார்க்கக் கிளம்பிப் போவது கடினம்.

அலுவலகத்துக்குப் போகாமல் விடவும் முடியாது.

எனவே, வேலைகளை முடித்துக் கொண்டு, வீட்டுக்குச் சென்று, நிதானமாகத் திலோவிடம் சொல்லி, அவளது முகம் மலர்வதை ரசித்து...

முத்தாய்ப்பாக பல இனிய கற்பனைகள் தானாக மலர, முடிந்த அளவு விரைவாக வேலைகளை முடித்துக்

கொண்டு சித்தரஞ்சன் வீடு சென்றால், அங்கே அவன் மனைவி இல்லை!

மாடிக்குச் சென்றதுமே, மனைவி கண்ணில் படாததைச் சித்தரஞ்சன் பெரிதாக எண்ணவில்லை! கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக.. இவன் பிரிவு பற்றிச் சொன்ன நாளிலிருந்தே, முடிந்த அளவு அவள் ஒதுங்கித்தான் போனாள். அவனாக நெருங்குவதுதான்.

அதுகூட, அவனுக்கு உள்ளூரச் சிரிப்புதான்.

உண்மை தெரிந்த பிறகு, தானாக எப்படி ஒட்டிக் கொள்ளப் போகிறாள்! முதலில் இருந்த மாதிரி!

வழக்கம் போலக் குளித்துவிட்டு வந்தால், உணவு பற்றிக் கேட்கத் கதவருகில் கூட, அவளைக் காணோம்!

என்ன விஷயம்?

டாக்டரிடம் போகலாமா என்று அவன் காலையில் கேட்டதற்கு, திலோ அலுப்பாக 'உச்'சுக் கொட்டியதும், எரிச்சலுடன் அவன் திரும்பிச் சென்றதும், நினைவு வந்தன.

கரிசனமாகக் கேட்டால் அலட்சியமல்லவா காட்டினாள்!

சரியாகச் சொல்லப் போனால், அவன்தான் கோபப்பட வேண்டும். ஆனால், இனிமேல் திலோ மீது கோபமாவது, இன்னொன்றாவது?

கீழேதான் ஏதாவது செய்து கொண்டு இருப்பாள். வருவாள்.

தலை வாருவதற்காகச் சீப்பை எடுத்தபோதுதான் அவன் முதல் முதலாக அதிர்ந்தான்.

ஏனெனில், சீப்புக்கு அடியில், வெறுமனே, சித்தரஞ்சன் என்று, அவன் பெயர் மட்டும் எழுதப்பட்டிருந்த ஒரு கவர் இருந்தது.

கையெழுத்து, திலோத்தமாவுடையது!



## 12

சீப்பை எடுத்த கை அப்படியே அந்தரத்தில் நிற்க, சித்தரஞ்சன் சற்று நேரம் அசைவற்றுப் போனான்!

இப்படி ஒரு திருப்பத்தை, அவன் எதிர்பார்க்கவில்லையே!

அதுவரை கண்ணில் படாத திலோ, அந்த வீட்டிலும் இல்லையா? பிரிவு பிரிவு என்ற அவனை விட்டு, அவள் பிரிந்தே போய் விட்டாளா?

மற்றபடி, வீட்டுக்குள்ளேயே கடிதம் எதற்காக? அவர்கள் இருவரும், ஒருவருக்கொருவர் பேசாமல் ஒன்றும் இருக்கவில்லை!

சீப்பை வைத்துவிட்டுக் கவரை எடுத்தபோது, தன் கை நடுங்குவதைப் பார்க்க, அவனுக்கே ஆச்சரியம்தான். அந்த அளவுக்கு மனம், உடலைப் பாதிக்குமா?

அல்லது, அதிர்ச்சிதான் ரொம்பப் பெரிதா?

ஒரு பெருமூச்செடுத்து, மனதையும் உடலையும் கட்டுப் படுத்திக் கொண்டு, அதன் பிறகே, காகித உறையைப் பிரித்தான்.

ஒரு சுருக்கமான கடிதமும், அதனோடு இணைக்கப் பட்டிருந்த திலோத்தமாவின் கையெழுத்துடன் கூடிய ஒரு வெற்றுத் தாளும், அதில் இருந்தன!

அவன் அஞ்சியது போல, விஷயம் பெரிதுதான்!

பிரிவைச் சொல்லி, அவன் மிரட்டிக் கொண்டிருந்தான். அவள் நிஜமாகவே பிரிந்து சென்றிருந்தாள்! எங்கென்று சொல்லாமல்!

அவன் உள்ளம் தேடிய நூறு சதவீதச் சான்று, இப்போது அவன் கையில் இருந்தது.

ஆனால், அவள்?!

சித்தரஞ்சன் கொடுத்த 'பிரிவு' என்ற அதிர்ச்சிக்குப் பிறகே, திலோத்தமாவுக்கு உடலில் பழைய உற்சாகம் இல்லை எனலாம். அது மனதில் இருந்தால், அல்லவா, உடம்பில் தெம்பு வரும்?

கணவனிடம் என்னவெல்லாமோ வாதாடிப் பார்த்தாள். போராடியும் பார்த்தாள்.

ஆனால், அவன் சற்றேனும் அசைந்து கொடுத்தால் அல்லவா?

உடும்பு போல, தான் கொண்ட கருத்தில் அவன் ஒரே பிடியாக இருக்கவே, ஒரு கட்டத்தில், அவளுக்கு வாழ்க்கை அலுத்துப் போயிற்று!

உணவு, உடை, அலங்காரம், அனைத்திலும் ஈடுபாடு குறைந்தது.

இவைகளுக்காகத்தானே, இப்போது, அவனை மணந் திருப்பதாகச் சொன்னான்!

அவன் சொன்ன வாழ்க்கை வசதிகள், உயர்வுகள் அனைத்தும் வெறுத்துப்போயின. அதிலும் உணவு! உயிர் வாழ, இதையெல்லாம் தின்றுதான் தீர வேண்டுமா என்று வெறுப்பாக உணர்ந்தாள்.

ரஞ்சனின் கோபத்துக்காக, அவற்றைக் கொறித்தாளே தவிர, விரும்பி உண்பது அடியோடு நின்றுபோனது! அவன் வீட்டில் இல்லாத நேரம், அதுவுமில்லை!

சத்தற்று உண்டது, திலோவின் உடம்பைச் சிறுக சிறுகப் பாதித்திருக்கலாம்.

ஆனால், பாட்டி வந்து போன பிறகு, அவள் ரொம்பவே சோர்ந்து போனாள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, அப்போதிருந்த சந்தோஷமும், எதிர்பார்ப்பும்.. நேர் எதிரான இன்றைய நிலையும்! நல்லது எதுவும் திரும்பக் கூடும் என்ற நம்பிக்கையே இல்லையே!

ஆனால், எல்லாவற்றையும் தனக்குள்ளேயே வைத்து மறுகினாளே தவிர, எதையும் பெற்றவளிடம் சொல்லவும் மனம் வரவில்லை.

கல்யாணம் வேண்டாம், வேண்டாம் என்று அப்போது ஒரு மூச்சு கஷ்டப்படுத்திவிட்டு, இப்போது விரும்பிச் செய்த திருமணம் தோற்றுவிட்டதாக, இன்னொரு துன்பமும் தருவதா?

இதே மன உழைச்சலில் இருந்ததாலோ என்னவோ, அன்று இரவுக்கும், மறுநாளைக்கும் உரிய மெனுவைச் சமையல்காரம்மாவிடம் சொல்லிவிட்டுத் திரும்பும்போது, தலை சுற்றித் தடுமாறிவிட்டது!

சுவரைப் பிடித்து சமாளித்தால், சமையல்காரம்மா அருகில் வந்து ''இதுபோல நேரம், ரொம்பப் பதனமாய்

இருக்க வேணும்மா. இப்படியெல்லாம் டக்கு டக்குன்னு திரும்பப் படாது'' என்று கரிசனமாக உரைத்தாள்.

என்ன நேரம்? என்ன பதனம்?

புரியாமல் பார்த்தாள் திலோத்தமா.

''நீங்கள், இந்தக் காலத்துப் புள்ளைக. ஒண்ணும் தெரியாது. பெரியம்மாவைச் சீக்கிரமாக வரச் சொல்லுங்க. அவங்க, உங்களை நல்லாப் பார்த்துக் கொள்வாங்க'' என்றாள் தொடர்ந்து.

என்னத்தைப் பார்ப்பது என்று எண்ணும்போதே, அந்த அம்மாள் சொல்வது புரிந்து, திலோவுக்கு நெஞ்சு காந்தியது.

அதற்கெல்லாம்தான் வாய்ப்பே கிடை... அல்லது.. எ.. என்ன இது?

ஒரு கணம் மூச்சே நின்றுவிடும் போல ஆயிற்று அவளுக்கு.

வெளியே காட்டிக்கொள்ளாமல் சமாளித்து ''இ.. இன்னும் பத்து பதினைந்து நாட்களில், அத்தை வந்து விடுவார்கள். சமையல்.. நீங்கள், நான் சொன்ன மாதிரியே செய்துவிடுங்கள்'' என்றுவிட்டு, மெல்ல அவளது அறைக்குச் சென்றாள்.

உட்கார்ந்து யோசித்தால், சமையல்காரம்மாவின் ஊகம் சரியாகவே இருக்கும் என்றே தோன்றியது.

சித்தரஞ்சன் 'பிரிவு' வெடிகுண்டு போட்டதிலிருந்து, கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களாக, மாத்திரை போட நினைவே இருக்கவில்லை! என்ன செய்வது, என்ன செய் வது என்று அதே நினைவாக, ஒன்றும் செய்ய முடியவில் லையே என்று ஒரே தவிப்பாக... வேறு என்னதான் நினைவு இருந்தது?

பெற்ற தாயைக் கூட மறந்து போனாளே!

சட்டென்று, இன்னொன்று தோன்றியது!

அனேகமாகத் தினமுமே, சித்தரஞ்சனும், இந்த மாத்திரையை அவளுக்கு நினைவுபடுத்துவான். அவனுமே, அவளிடம் மாத்திரை பற்றிக் கேட்கவே இல்லையே!

ஒருவேளை, அவனுக்குமே மனதில் பெரும் பாதிப்பாகத் தான் இருந்ததோ என்று ஒருதரம் யோசித்துவிட்டு, உடனேயே, அந்த யோசனைக்காகத் தன்னையே ஒரு முறை குட்டிக் கொண்டாள்.

இந்த மட்டி மனம் ஒன்று! கணவனிடம் இல்லாத மேன்மைகளை எல்லாம் கற்பனையிலேயே தேடிக் கண்டுபிடித்து, சந்தோஷப்பட்டுக் கொள்ளும்! பிறகு, உச்சந்தலையில் அடித்து, அவன் உண்மை புரிய வைக்கும் போது, உள்ளம் வெடித்து அழும்!

தெள்ளத் தெளிவாய்.. என்னமோ சொன்னானே, காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுகிறமாதிரி என்று, அதுபோல அவளை உணர வைத்துச் சொன்னானே!

பிறகும், பிரிவு பற்றி, எத்தனை முறை நினைவூட்டி யிருப்பான்?

இத்தனை தடவைகள் சொல்லியாயிற்று. இந்த மர மண்டைக்குக் கட்டாயமாக நினைவிருந்து, ஒழுங்காக மாத்திரைகளை விழுங்கியிருப்பாள் என்கிற நம்பிக்கை யில், அவன் ஞாபகப் படுத்தவில்லை. அவ்வளவே! அதற்குள், என்னென்ன பைத்தியக்கார எண்ணங்கள்! பட்டிருப்பது, போதாது? இன்னும் ஏன் இந்த அசட்டுக் கற்பனை?

தன்னைத்தானே நொந்துவிட்டு, திலோத்தமா மறுபடி யும் நடப்புக்கு வந்தாள்.

இது, ரஞ்சன் பிடிவாதமாக வேண்டாம் என்று மறுத்த குழந்தைச் செல்வமாகவே இருக்கலாம் என்று நினைக்கும் போதே, திலோவுக்கு, உடலும் உள்ளமும் பரபரத்தன.

'இருக்கலாம்' என்ன? நிச்சயமாகவே குழந்தைதான். மற்ற விஷயங்களோடு, ஒரு வாரம் பத்து நாட்களாகத் தலை தூக்க முடியாமல் கிடந்தது. அதனால்தானே இருக்க வேண்டும்?

ஒப்புக்காக வேண்டுமானால், ஒரு மருத்துவரிடம் உறுதிப்படுத்திக் கொள்ளலாமே தவிர, அவள் மனதில் இப்போது சந்தேகம் சிறிதும் இல்லை!

ஆனால், இதைக் கணவனிடம் சொல்லி, அவள் சந் தோஷப்பட முடியாது. அவன் நிச்சயமாக மகிழ்ந்து துள்ள மாட்டான்.

மாத்திரை உட்கொள்ள, அவள் மறந்ததாகவும் ஒத்துக் கொள்ள மாட்டான்.

சித்தரஞ்சனைப் பொறுத்த வரையில், அவனது குற்றச் சாட்டு உறுதிப்படுத்தப் பட்டுவிட்டதாகத்தான், பணக் காரன் என்பதால், பிணைப்பு வலுப்படுத்திக் கொள்ள, அவளது அடுத்த நடவடிக்கை என்றுதான் சொல்லுவான்! சர்..வ.. நி..ச்சயமாக.

பிணைப்பை நிரந்தரமாக்க இடம் கொடுக்கக் கூடாது என்றுதானே, அவளை கருத்தடை மாத்திரை உண்ண வைத்ததே!

இப்போது அவனைத் திலோ ஏமாற்றிவிட்டதாகக் கூறுவதோடு, கருவை அழிக்கவும் முயற்சி செய்வான்! இது உறுதியே!

சித்தரஞ்சனை இழக்க மனமின்றி, குழந்தை வேண்டாம் என்ற நிபந்தனையை ஒத்துக்கொண்டுதான், திலோ அவனை மணந்தாள்.

இப்போது, தன்னை மீறி உருவான இந்தக் கருவை அழிக்க விடுவதா?

கணவன்... குழந்தை யாரை இழப்பது?

மின்னல் வெட்டியது போலத் திலோவுக்குள் ஒரு தெளிவு உண்டாயிற்று! உடனடியாக முடிவும் கிடைத்தது.

அவளுடைய குழந்தை, அன்றைய நிலையில், ஓர் அணுக்கூட குறையாமல், முழுசாக, அவளுடையதாக, அவளுள் இருந்தது. ஆனால், அவளுடைய கணவன் மனமும் உடலுமாக முழுதாக அவளுக்குச் சொந்தமாக இருந்ததே இல்லையே!

இல்லாத ஒன்றை இழப்பதில், பெரிதாக யோசிப்பதற்கு என்ன இருக்கிறது!

அவளுக்குக் குழந்தை வேண்டும். அதே சமயம், அவன் சொன்ன சொத்து, பணம் எதுவுமே வேண்டாம். எதையுமே தொடக்கூடாது! குழந்தையை நல்லபடியாக வளர்த்து ஆளாக்க, அவளாலேயே முடியும்! அவளுடைய பெற்றோரின் தயவில், அதற்குத் தேவையான கல்வியும், திறமையும் அவளுக்கு இருக்கின்றன!

கணவனின் உதவியே இல்லாமல், கிடைத்த வலிமை!

ஒரு முடிவை எடுத்தபின், அதற்கேற்பச் செயல்பட, திலோவால் முடிந்தது.

குறைந்தபட்சமாகச் செய்வதறியாத மலைப்பு இல்லை!

உட்கார்ந்து வேகமாகத் திட்டமிட்டாள்.

எப்போது சமையல்காரம்மாவால் ஊகிக்க முடிந்ததோ, அதன் பிறகு, இங்கே ஒரு நாள் தங்குவது கூட ஆபத்து என்று தோன்றியது. எனவே, அன்றே கிளம்ப முடிவும் செய்தாள்.

முக்கியமாகப் பணம் பிரச்சினை ஆகாது. அவள் வேலை பார்த்துச் சம்பாதித்ததே, பாங்கில் நிறைய இருந்தது. அதிகம் என்றால், சித்தரஞ்சனுக்கு அப்படித் தோன்றாவிட்டாலும், அவளது பல மாதச் செலவுகளை இலகுவாகத் தாங்கும் அளவுக்கு மேலாகவே இருந்தது.

அவளது கல்வித் தகுதிக்கு, இன்னொரு வேலை தேடிக் கொள்வதும், கடினம் அல்ல. அந்தப் பணமும் சேரும்!

எனவே, எங்கேனும் மறைந்து வாழ்ந்து பிள்ளையை பெற்றெடுப்பதோடு, அதை நல்லபடியாக வளர்த்து, வாழவும், திலோவால் முடியும்!

ஆனால், பல காரணங்களால், இந்த ரகசியத்தில், இனிமேல் தாயையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், திலோத்தமா தீர்மானித்தாள்.

அன்னை அறியாமல் காணாமல் போனால், பாவம், ஏங்கியே செத்துவிடவும் கூடும் என்பது, ஒரு காரணம்! வெறும் செல்களாக வயிற்றுக்குள் இருக்கும் சிசுவுக்காகவே, அவள் இவ்வளவு பார்க்கும்போதுதானே, பத்து மாதம் சுமந்து பெற்று, இத்தனை ஆண்டுகள் வளர்த்தவளுக்கு எப்படி இருக்கும் என்று, நன்கு புரிந்தது!

அத்தோடு, இந்த நிலையில், தாயின் ஆலோசனை அவளுக்குத் தேவையாகவும் இருக்கக் கூடும்!

அடுத்து வரும் மாதங்களில், எப்படியெப்படி நடந்து கொள்வது என்று பல புத்தகங்களில் படித்துக் கூட தெரிந்து கொள்ளலாம்தான். ஆனால், அதே விவரம் தாயிடமிருந்து

வரும்போது, அனுபவ அறிவோடு அன்பும் பரிவும் சேர்ந்து கிடைக்கும்!

இப்போது இருப்பதைப் பார்த்தால், இன்னும் என்னென்ன உடல் உபாதைகள் ஏற்படக்கூடுமோ? அனாவசிய அச்சங் களைக் களைவதற்கும், அம்மா மிகவும் அவசியம் அல்லவா?

கணவனைப் பிரியப் போகிறோம் என்று எண்ணும் போது, திலோவுக்குச் சற்றுக் கலக்கமாகத்தான் இருந்தது. ஆனால், பிரிவதற்காகத்தானே, அவன் திருமணமே செய்தான்! அப்புறமென்ன?

குளிர்ந்த நீரை எடுத்து முகத்தில் நன்றாக அடித்துக் கழுவிய பிறகு, கண் கரிப்பு நின்று, உடம்பும் இன்னும் கொஞ் சம் சொன்ன பேச்சுக் கேட்டு, வேகமாகச் செயல்பட்டது.

ஒரு தோள்பையில், பணியாட்கள் சந்தேகப்படத் தோன்றாத அளவு துணிமணி எடுத்து வைத்தாள். வாக்காளர் அட்டை, பாங்க் பாஸ் புக், கல்விச் சான்றிதழ்கள்... கையில் இருந்த அவளது சொந்தப் பணம்.. யோசித்து, யோசித்து, வேகமாக சேகரித்தாள்!

'கால் டாக்சி'க்கு போன் பண்ணி வரச்சொல்லிவிட்டு, சித்தரஞ்சனுக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

குழந்தையைக் காப்பதற்காக என்று எழுத, அதைப் பற்றிக் குறிப்பிடக்கூட அவளுக்கு மனமில்லை. என்றா வது ஒருநாள் உரிமை கோர வருவாள் என்று, அதையும் அவன் தவறாகவே எண்ணக்கூடும்!

காரணமே காட்டாமல்தானே, குழந்தை வேண்டாம் என்று நிபந்தனையிட்டான்? அவளும்தான் எதற்காகக் காரணம் காட்ட வேண்டும்?

மொட்டையாகத் தொடங்கி ''நீங்கள் விரும்பிய 'பிரிவை' நீங்கள் கோருமுன்னே கொடுத்து பிரிந்து

போகிறேன். திரும்பி வர மாட்டேன். இத்துடன் ஒரு வெள்ளைக் காகிதத்தில் அடியில் கையெழுத்திட்டு வைத்திருக்கிறேன். விவாகரத்துக்கு என்ன காரணம் தேவையோ, எழுதிக் கொள்ளுங்கள். வாழ்க்கைப் பணம் தேவைப்படாது. வேண்டாம்'' என்று எழுதி, அதிலும் இன்னொரு வெள்ளைக் காகிதத்திலும் தெளிவாகக் கையெழுத்திட்டு மடித்து, உறையிலிட்டு அவன் பார்க்கும் வண்ணம் வைத்தாள்.

வீட்டுச் செலவுப் பணத்தில் மிச்சத்தை அலமாரியில் வைத்தாள்.

டாக்சி வருவதைக் கவனித்து, பையுடன் மாடியிலிருந்து இறங்கி வந்தாள். கண்ணில் பட்ட வேலையாளிடம் வெறுமனே தலையசைத்துவிட்டு, வண்டியில் ஏறிக் கிளம்பிவிட்டாள்.

அந்த வீட்டை விட்டுக் கிளம்புவது, இவ்வளவு எளிதாக இருக்குமென்று, திலோ சற்றும் எதிர்பார்க்கவில்லை!

திருமணமாகி வந்த நாள் தானாக நினைவு வந்து, தன்னை மீறி நெஞ்சை அடைத்தது.

ஆனால், அது பொய்யான வாழ்வு! முட்டாளின் சொர்க்கம். அதற்காக ஏங்குவது மடத்தனமே!

பிடிவாதமாக, அடுத்துச் செய்ய வேண்டியதில் மனதைச் செலுத்தினாள்.

ஏற்றாற்போல, பளிச்சென்ற தோற்றத்துடன் ஒரு மருத்துவமனை, செல்கிற வழியிலேயே இருந்தது. அவளது கண்ணில் பட்டது தாய், சேய் நல மருத்துவமனைதான்.

அனேகமாகப் பார்க்கிற எல்லோருமே, தனக்கு ஒரே பிள்ளைதான் என்கிறார்கள். ஆனால், இந்த மருத்துவ

மனைகள்தான் அதிகம் பெருகுகின்றன என்று எண்ணிய படி, டாக்சியை நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

அவளது கருத்து உறுதியான ஆறுதலுடன் மீண்டும் வந்து, வண்டியில் ஏறினாள்.

தன் வாழ்க்கை நிலை, இன்று எடுத்த முடிவு பற்றிச் செந்திருவிடம் சொல்வது, திலோத்தமாவுக்குச் சற்று கடினமாகத்தான் இருந்தது.

சற்று என்ன, ரொம்பவே!

ஆனால், மகள் நன்றாக இல்லை என்று ஏற்கனவே ஊகித்திருந்ததால், செந்திரு சீக்கிரமே சமாளித்துக் கொண்டாள்.

மகள் முட்டாள் அல்ல என்பதோடு, அவளது பிடிவாதமும் அறிந்திருந்ததால், ஒரே ஒரு முறை மருமகனிடம் அப்பாவை அனுப்பிப் பேச சொல்லலாமா என்று கேட்டவள், மகளின் முகம் போன போக்கைப் பார்த்துவிட்டு அத்தோடு நிறுத்திக் கொண்டு, மகளின் திட்டத்துக்கே உதவி செய்தாள்.

செந்திருவுடைய தோழி ஒருத்தி, திருச்சியில் புறநகர்ப் பகுதியில், புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், பெரியோருக்காக ஓர் இல்லம் அமைத்து நடத்திக் கொண்டிருந்தாள்.

கணவன் மனைவி இருவருமே பட்டம், பயிற்சி பெற்ற மருத்துவர்கள். சேவை மனப்பான்மையில், இருவரும் இந்தப் பணி செய்து வந்தனர்.

திலோவை அங்கே அனுப்பினால், மகளைப் பற்றி, அதிகக் கவலை இல்லாமல் இருக்கலாம் என்று செந்திரு எண்ணினாள்.

தோழிக்கு போன் செய்து கேட்டபோது, டாக்டர் தேவகியும், திலோத்தமாவை உடனே அனுப்பச் சொல்ல, சின்னவளின் தங்குமிடத்துப் பிரச்சனை, உடனே தீர்ந்தது!

இந்த டாக்சியிலேயே போகலாமா என்று யோசித்து விட்டு, வேண்டாம் என்று, திலோ தீர்மானித்தாள். பங்களா வில் யாராவது, டாக்சி எண்ணைக் குறித்து வைத்திருந் தால், வீண் ஆபத்து!

எனவே, அந்த வண்டியைக் கணக்குத் தீர்த்து அனுப்பி விட்டு, இன்னொரு 'கால் டாக்ஸி' நிறுவனத்தில், வேறு வண்டி கொண்டு வரச் சொன்னாள்!

திருச்சிக்குக் கிளம்புமுன், தன் தாயிடம் திலோத்தமா ஒரு வாக்குறுதி வாங்கினாள். எக்காரணம் கொண்டும் தான் இருக்குமிடத்தை, சித்தரஞ்சனிடமோ, அவன் சம்பந்தப் பட்ட வேறு யாரிடமுமோ சொல்வதில்லை என்று.

பிரிவுதான் சித்தரஞ்சனின் கடைசி முடிவு என்றாலும், இன்னமும் மோகம் தீரவில்லை என்று, அவனே சொல்லி யிருக்கிறானே! தேடி வந்தாலும் வரலாம். அப்போது, அன்னை இளகிவிடக்கூடாதே என்பது, அவளுக்கு!

அப்படி அவள் இருப்பிடத்தைச் சித்தரஞ்சனிடம் தெரிவித்தால், அப்புறம் தன்னை உயிருடன் பார்க்க முடியாது என்று எச்சரித்தும் வைத்தாள்.

தாயின் அடிபட்ட பார்வையில், ''அவருக்குத் தெரிந் தால், குழந்தையை என்னவும் பண்ணி விடுவாரோ என்று பயமாக இருக்கிறதம்மா!'' என்று காரணம் சொல்லிச் சமாளித்தாள்.

ஒருவாறு திலோத்தமா திருச்சிக்குப் போய் சேர்ந்த போது, அவளது உடலும் மனமும் மிகவும் களைத்திருந்த போதும், இன்னொரு தாயாய் டாக்டர் தேவகியின் அன்பான கவனிப்பு, அருமருந்தாக இருந்து அவளைத் தேற்றியது!

தேவகி கொடுத்த மருந்துகளின் வலிமையால், திருச்சியில் திலோத்தமா அயர்ந்து உறங்கியபோது

சென்னையில் சித்தரஞ்சன், கூண்டுப்புலிபோல, மாடி முழுக்கச் சுற்றி அலைந்து கொண்டிருந்தான்.

அவனைப் பிரிந்து, திலோ போகக்கூடுமா? எப்படி முடியும்?

அவனை விடவும் பெரிய பணக்காரனைக் கண்டால் அவள் மனம் அங்கே தாவிவிடும் என்றதும், மோகம் தீர்ந்ததும், அவளைப் பிரியப் போவதாகச் சொன்னதும், எல்லாமே இப்போது பயங்கரமான சிறுபிள்ளைத் தனமாகத் தோன்றின கொடூரமாகவும்.

ஒரு பொருளின் அருமை, அது இல்லாது போகும் போதுதான் தெரியும் என்பார்கள்.

திலோவை ஒருநாள் பிரியக்கூடும். பிரிந்து வாழ முடியும் என்று, எப்படி நினைத்தான்? அன்றைய ஓர் இரவு முழுவதும் கூட, அவள் இல்லாததைத் தாங்க முடியாது போலத் தவித்துப்போனான் அவன்.

குறைந்தபட்சமாகத் திலோ இருக்குமிடம் தெரிந் தாலாவது...

தெரிந்து போய்க் கேட்டாலும், திலோ திரும்பி வரு வாளா என்பது சந்தேகமே!

அவன் மிரட்டிய 'பிரிவை' அவளே தருவதாக எழுதிய தில், அவளது கோபம் புரிந்ததோடு, வாழ்க்கைப் பணம் வேண்டாம் என்றதில், அவளது வலியோடு, ரோஷமும் தெளிவாகத் தெரிந்ததே. இதில், எதை ஒன்றுமில்லை என்று ஒதுக்கி, அவனுடைய திலோ, அவனிடம் திரும்பி வரக்கூடும்?

ஆனால், அவள் இருக்குமிடம் தெரிந்தால், அவளது கையைக் காலைப் பிடித்துக் கெஞ்சினால்... ஒருவேளை அவள் மனமிளகி.

"நம் டிரைவரை அங்கே நிறுத்தி வைக்க வேண்டாம் என்று, டாக்சியில் போனாள் போல" என்று வேலையாட் களிடம் ஒன்றுமில்லாதது போலக் காட்டிக் கொண்டு, வாடகைக்காரின் எண், நிறுவனம் பற்றி, சித்தரஞ்சன் தெரிந்து கொண்டான்.

அந்த நிறுவனத்துக்கு போன் செய்து கேட்டால் "நம் நிறுவனத்துப் பேரில் ஓடினாலும், அந்த டாக்சி தனி யாளோடது. அவர் காலையில் ஒன்பது மணிக்குத்தான் வருவார். அதற்குமுன், அவரோடு தொடர்பு கொள்ள இயலாது" என்றார். அங்கு இரவுப் பொறுப்பில் உள்ளவர்.

முடியாது என்றால், வற்புறுத்திப் பார்க்கலாம். இயலாது என்பவரை என்ன செய்வது?

மாமனார் வீட்டுக்கு போன் செய்ய அவனுக்கு மன மில்லை.

ஒருவேளை அவர்களுக்கும் தெரிவியாமல் திலோ வேறு எங்காவது சென்றிருந்தால், அவர்களும் சேர்ந்து கலங்க நேரும். அவனுடைய பெற்றோரை விட இளமையே என்றாலும், ஒரு தலைமுறை மூத்தவர்களே அல்லவா?

அதிலும், பார்த்துக் கொள்கிறேன் என்று மாமியாரிடம் மதியம் சொல்லிவிட்டு, கோட்டை விட்டுவிட்டதாகக் கையைப் பிசைந்து கொண்டு எப்படி நிற்பது? திலோ அங்கேதான் இருப்பதாகத் தெரிந்தலாவது போய்ப் பார்க்கலாம்!

'முடியாப் பகலே, விடியா இரவே' என்பார்களே!

அவனைப் பொறுத்த அளவில், உலகிலேயே மிக நீண்ட இரவின் கும்மிருட்டு கலைந்து விடிவதற்காக, சித்தரஞ்சன் தவிப்புடன் காத்திருந்தான்.

வாடகைக் கார் நிறுவனத்தில் கிடைத்த தகவல் ஆறுதல் அளிக்க, நேரே மாமனார் வீட்டுக்குச் சென்றான். ஆனால்..!



13

எல்லாத் தாய்மாரையும் போல, செந்திருவுக்கும் மகள், கணவனோடு நெடுங்காலம் மகிழ்ச்சியோடு வாழ வேண் டும் என்று ஆசைதான்.

ஆனால், உயிர் விட்டுவிடுவதாக மிரட்டி, திலோ பெரிய குண்டு போட்டு வைத்திருந்தாளே! அதை மீறி எப்படிச் சொல்வது?

என்ன இது பேச்சு என்று எரிச்சல் பட்ட போதும், மணிகண்டனுக்கும், மகளை மீறத் தைரியம் இருக்க வில்லை! ஆனால் சித்தரஞ்சனை எதிர்பார்த்ததால், அன்று அலுவலகம் செல்லாமல், மனைவிக்குத் துணையாக வீட்டிலேயே தங்கியிருந்தார்.

மாமனாரையும் வீட்டில் பார்த்ததும், இவர்கள் அறியாமல் திலோ எங்கும் செல்லவில்லை என்று, சித்தரஞ்சனுக்கு உறுதியாயிற்று.

ஆனால், அதனால் நிம்மதி அடைய வழியின்றி, இரு வருமே, அவனுக்குத் தேவையான பதிலைத் தர மறுத்தனர்.

திலோவோடு சேர்ந்து நல்ல வாழ்வு வாழ்வதற்காகவே என்று எவ்வளவு எடுத்துச் சொல்லியும், பெரியவர்கள்

அதே நிலையில் நிற்கவும், சித்தரஞ்சன் பொறுமையிழந் தான்.

கணத்தில் முடிவு செய்து, "அத்தை, மாமா கவனி யுங்கள். நீங்கள் சொல்லாவிட்டால், என்னால் என் மனைவியைக் கண்டுபிடிக்க முடியாது என்று எண்ணா தீர்கள். நாளைக்கே நாட்டில் உள்ள அத்தனை பத்திரிகை களிலும், அவள் படத்தைப்போட்டு விளம்பரம் செய்யப் போகிறேன். அவளைக் கண்டுபிடித்துத் தருகிறவர்களுக் குப் பத்து லட்சம் ரூபாய் தருவதாக அறிவிக்கப் போகி றேன். அதற்குமேல், அவள் இருக்குமிடம் ரகசியமாக இருக்கும் என்றா நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"ஐயோ, அவ்வளவு பணமா?" என்று இருவருமே திகைத்தனர்.

பணத்தை விடவும், மருமகன் வழி கண்ட விதத்தில், மணிகண்டனுக்கு அவன் மீது மதிப்பும் உண்டாயிற்று.

அதற்குள், அவனே தொடர்ந்து பேசினான்."திலோ பற்றிய விவரம் உடனே வந்து சேர்ந்துவிடும் என்றாலும், இதில் ஒரு வகை ஆபத்தும் இருக்கிறது. இவ்வளவு பணமா என்று, அவளையே கடத்திச் சென்று, இன்னமும் பணம் பறிக்கவும், யாரேனும் முயற்சிக்கலாம்!

"ஐயோ, ஆமாம்!" என்றாள் செந்திரு அச்சத்துடன்.

மாமனார் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க, சித்த ரஞ்சன் மேலும் தொடர்ந்தான். "சுமார், ஒன்றரை மாதங் களாக, எங்களுக்குள் இந்த.. இந்தச் சச்சரவு இருக்கிறது. ஆனால் இதுவரை, அவள் உங்களிடம் கூட, அதுபற்றி, ஒரு வார்த்தை சொன்னதில்லை என்று எனக்குத் தெரியும். அவ்வளவு ரோஷக்காரி திலோ! அவளது குடும்பப்

பிரச்சினையை ஊர் அறிவது, அவளுக்குப் பிடிக்குமா என்று நீங்களே யோசியுங்கள். இதற்கு மேலும் மறைத்தீர்கள் என்றால், பத்திரிகை விளம்பரம் தவிர, எனக்கு வேறு வழியில்லை!'' என்று முடித்தான்.

''கெட்டிக்காரர் நீங்கள் மாப்பிள்ளை!''என்று சிலாகித்த மணிகண்டனின் முகம் உடனே மாறியது. ''இது ஒரு தினுசான பிளாக்மெயில்தான். ஆனால், உங்களுக்கு ஏற்றவளாக, உங்கள் மனைவியும் இன்னொரு தினுசாக, எங்களை ஏற்கனவே மிரட்டி வைத்திருக்கிறாளே! அவள் பற்றிய தகவல் எதையும் உங்களிடம் சொன்னால், உயிரை விட்டுவிடுவதாக, ரொம்பக் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறாள். முதலில் இதைத் தெரிந்துகொண்டு, பிறகு கேளுங்கள்'' என்றார்.

''என்னது?''என்று அதிர்ந்தபோதும், உடனே மறுப்பாகத் தலையசைத்தான் மருமகன். ''மாட்டாள், தற்கொலை செய்ய எண்ணுகிறவள், வாக்காளர் அடையாள அட்டை, பாங்க் புத்தகங்கள், கல்விச் சான்றிதழ்கள் எல்லாவற்றையும் தன்னோடு எடுத்துச் செல்ல மாட்டாள். எனக்கு சொல்லக் கூடாது என்பதுதான் குறிக்கோளாகத் தெரிகிறது! ஏன் அப்படி? இத்தனை நாள் கழித்து, இன்று என்ன திடீரென்று?'' என்று கேட்டான்.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது, கூர் நோக்கில் பட்டது.

லேசாகத் தோளை குலுக்கி ''உங்களுக்குத் தெரியும். ஆனால், சொல்ல மாட்டீர்கள்! அப்படித்தானே? பரவாயில்லை! நான் திலோவிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். நீங்கள், முகவரியை மட்டும் கொடுங்கள் போதும்'' என்றான்.

மீண்டும் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவும் ''அத்தை, மாமா இருவரும் கொஞ்சமும் கவலையே படாதீர்கள். தப்பாக நினைத்ததற்காக, அவளிடம் மன்னிப்புக் கேட்கத்தான் போகிறேன். வெட்கத்தை விட்டு சொல்லுகிறேன். திலோ காலில் விழுந்தேனும், அவளைத் திரும்பக் கூட்டி வருவதுதான் நோக்கம். அதனால் தைரியமாக, அவளது விலாசத்தைக் கொடுங்கள். ஆனால், ஒன்று நான் அங்கே செல்வது பற்றி அவளிடம் தெரிவித்து விடாதீர்கள். என்னைச் சந்திக்குமுன் அங்கிருந்து அவள் எங்கேனும் சென்றுவிட்டால் கண்டு பிடிப்பது, மிகவும் சிரமமாகிவிடும்! பத்திரிகை விளம்பரம் தவிர, வேறு வழியிராது!'' என்றான் மருமகன்.

புன்னகையை அடக்கியபடி, மனைவியிடம் பேனாவை எடுத்துக் கொடுத்தார் மணிகண்டன்.

பல தினங்களுக்கு பிறகு, திலோத்தமா நன்றாகத் தூங்கியிருந்தாள். சலசலவென்று நீரோடும் வாய்க்கால், பல வண்ண மலர்களோடு, செழிப்பாக வளர்ந்திருந்த செடிகொடிகள்! பல்வேறு பறவைகள் எழுப்பிய இனிய ஒலிகள்!

வித்தியாசமான உணவாகக் கேப்பைக் களியும், பருப்புத் துவையலும் ருசியாக இருக்க, சில பல நாட்களுக்குப் பிறகு, காலை உணவும் உள்ளே இறங்கியது.

எல்லாமாகத் திலோவுக்கு உடம்பு தென்பாக இருந்திருக்க வேண்டும்! தன் ஆயிரம் வேலைகளுக்கு நடுவே வந்து, அவளிடம் நலம் விசாரித்த டாக்டர் தேவகியிடம் நன்றாக இருப்பதாகத்தான் திலோ சொன்னாள்.

ஆனால், உண்மையில் அப்படி இருக்கவில்லை! எதையும் பார்க்கப் பிடிக்கவில்லை. எதையும் கேட்கப்

பிடிக்கவில்லை. யாருடனும் பேசவும் பிடிக்கவில்லை! பேசாமல், சுருட்டியடித்துப் படுத்துக் கொள்ள வேண்டும் போல மட்டும்தான் இருந்தது!

தங்குவதற்கு இடமும் கொடுத்து, உடல் நிலைக்கேற்ப மருத்துவம் கொடுத்து, மெனக்கெட்டு வந்து அன்பாக விசாரிப்பவளிடம், இதையெல்லாம் சொல்ல முடியுமா?

உதவி செய்தவளின் மனதுக்கு இதமாக அவள் பேச, மருத்துவராகத் தேவகி ஆலோசனை கூறினாள். "அறைக் குள்ளேயே அடைந்து கிடக்காமல், அப்படியே தோட் டத்தைச் சுற்றிப் பார், திலோ. பச்சென்றிருக்கும் இடங் களில் உலாவினால், மனதுக்கும் உற்சாகமாக இருக்கும். கால் வலிக்கிற மாதிரி இருந்தால், அங்கங்கே உட்கார்ந்து கொள். இப்படி மரம் செடிகொடிகளுக்கிடையே திறந்த வெளியில் உலாவுவது உனக்கு உடம்புக்கும் நல்லது. மனதுக்கும் தென்பாக இருக்கும்."

என்னத்தைத் தென்பாக இருப்பது?

கண் விழித்து எழுந்ததிலிருந்து, ஆறடி மனிதன் ஒருவனை நினைத்துக் கொண்டே இருந்தால், தென்பு எங்கிருந்து வரும்?

நல்லது என்று அவளே யோசித்து எடுத்த முடிவுதான். இப்போதும், அதுதான் சரி என்று, அதுவும் நன்றாகத் தெரி யும்தான்.

ஆனால் அதற்காக ஒருத்தி சந்தோஷமாக இருக்க முடியுமா, என்ன?

மதிய உணவும் அங்கே நன்றாகத்தான் இருந்தது. ஆனால் திலோவால் சாப்பிட முடியவில்லை. அவளுக்கு

அளிக்கப்பட்டிருந்த அறையில் ஓய்வாகப் படுக்கச் சென்றவளுக்குப் படுக்க முடியாமல் அங்கேயும் மனம் அலை பாய்ந்தது!

அங்கே, சென்னையில் ரஞ்சன் என்ன செய்கிறானோ?

வழக்கமாக மதிய உணவை, அவனுக்கு வீட்டிலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தாள். இன்று என்ன நடக்கிறதோ?

சாப்பிட்டானோ, இல்லையோ?

எழுந்து சென்று, மறுபடியும் தோட்டத்தைச் சரண் புகுந்தாள்.

ஒரு பெரிய மரத்தின் மீது அரைக் கண் மூடி அவள் சாய்ந்திருந்தபோது, அருகில் யாரோ அமர்ந்திருந்தார்கள்.

யார் என்று திரும்பிப் பார்த்தால் சித்தரஞ்சன்.

அவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால், உருவெளித் தோற்றமாகத் தெரிகிறதோ என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தால், உருவம் மறையாமல், அப்படியே இருந்தது.

அது மட்டுமல்ல, வாயைத் திறந்து ''கண்ணை இப்படிக் கசக்காதே, கண்மணி. வந்திருப்பது நானேதான்!'' என்றும் சொன்னது!

சொன்னதோடன்றி, அவளது கையைப் பற்றி கண்ணை விட்டு அகற்றவும் வைத்தது.

சுய உணர்வு வந்து விலுக்கென நிமிர்ந்து உட்கார்ந்தாள் திலோத்தமா.

முகத்தில் கோபம் படர ''நீங்கள் எப்படி இங்கே'' என்றவள் உடனே ஊகித்தாள்.

''இந்த அம்மா...'' என்று ஆத்திரத்துடன் தொடங்கிய வளை இடையிட்டு ''அத்தை மேல் கோபப்படாதே, திலோ. அவர்களை ஒருவிதமாக மிரட்டித்தான், அதற்கு மேல் வேறு வழியில்லாமல்தான் அவர்கள் இந்த முகவரியை... ஆனால் அது இருக்கட்டும். முதலில் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். என் உயிர் இருக்குமட்டும், உன்னை நான் ஒரு நாளும் பிரிய மாட்டேன். என்னால் உன்னைப் பிரிய முடியாது. எப் போதும் பிரியாமல் என்னுடனேயே இருக்க, நீ ஒத்துக் கொள்ள வேண்டும்!'' என்றான் வேகமும், சிறு பதற்றமு மாக.

''அடுத்துச் செய்ய வேண்டியதையும், செய்து விடு கிறேன். இதோ, நீ கையெழுத்துப் போட்டு வைத்திருந்த, வெற்றுக் காகிதம், இதோ பார்'' என்று காட்டிவிட்டு? அந்தக் காகிதத்தை சுக்கு நூறாகக் கிழித்தான்.

துணுக்குகளை தூர வீசப் போனவன். கையை அடக்கி ''இங்கே குப்பைத் தொட்டி எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

பதிலாக அவள் சுற்றுமுற்றும் பார்க்கவும் ''பரவா யில்லை'' என்று, அருகில் கிடந்த சிறு கல்லால் தரையில் ஒரு பள்ளம் தோண்டினான். பள்ளத்தினுள், காகிதத் துணுக்குகளைப் போட்டு மூடினான்.

பிறகு, மீண்டும் அவளது கையைப் பற்றி ''என் தப்பான கருத்துக்கள், தப்பான பேச்சுகள், செயல்கள் எல்லாவற் றையும் மன்னித்து, மறந்து, என்னை ஏற்பாயா, கண் ணம்மா? திருமணத்துக்கு முன், டாக்டர் அனுசூயாவிடம் கூட்டிப் போனேனே, அதிலிருந்து என் சொல்.. செயல்கள்...

உன்னை வருத்திய அனைத்தையும் அடியோடு மறந்து, என்னை நீ மனதார ஏற்க வேண்டும். செய்வாயா? தயவு செய்து ஒத்துக் கொள் கண்மணி. ஏனென்றால்... ஏனென்றால்...'' என்று குரல் கரகரக்கத் தடுமாறினான்.

என்ன இது? எல்லாம் தலைகீழாக அல்லவா இருக்கிறது?... அல்லது, இப்போதுதான் தலை சரியாக மேலே நிற்கிறதோ? ஆனாலும் எ... எப்படி?

திகைப்புடன் ''ஏனென்றால்...'' என்று எடுத்துக் கொடுத்தாள் மனைவி.

''ஏனென்றால், உன்னைப் பிரிந்து என்னால் வாழவே முடியாது, திலோ. நிச்சயம்! பிரிந்தால், ஏங்கி, ஏங்கியே செத்துவிடுவேன்!'' என்றான் சித்தரஞ்சன்.

எளிதான வார்த்தைபோல! அவளும் அப்படித்தானே, பெற்றவளை மிரட்டி விட்டு வந்தாள் 'செத்து விடுவேன்' என்று.

ஆனால், அப்படி மிரட்டக் காரணம் இவன்தானே?

ஓரக்கண்ணால் பார்த்து, ''நான்தான் பணத்துக்காக உங்களை...'' என்று தொடங்கியவளின் வாயைப் பொத்தி, ''இல்லை, நீ அப்படிப்பட்டவளே கிடையாது! நீ முன்பு சொன்னது எல்லாமே, நிஜம்! ஒரு பயங்கரமான ஏமாற்றத்தில், உன் மீது அந்தக் குற்றத்தைச் சுமத்தியிருந்தேனா? வேறு யோசிக்கவே வரவில்லை. ஆனால் அன்று நல்லவளாக இருந்தால் என்று ஒரு தரம் யோசிக்கச் சொன்னாய் அல்லவா? அப்படி யோசிக்கையில், உன்னிடம் தப்பையே காண முடியவில்லை, திலோ! தப்பே அறியாத உன்னை எப்படியெல்லாம் வாட்டிவிட்டேன்! பிரிவு, பிரிவு என்று

சொல்லிச் சொல்லி... உன்னை மட்டுமின்றி, என்னையும் வாட்டி.. மெய் தான், கண்ணம்மா. பிரிவைப் பற்றி உன்னிடம் சொல்லும் போதெல்லாம் எனக்கும் பெரும் வேதனைதான். ஆனால், ஒரேயடியாக உன் காலில் விழுந்து விடக் கூடாது என்று நானே நினைவூட்டுவதற்காகவே, வலிக்க வலிக்கத் திரும்பத் திரும்பச் சொன்னேன்'' என்றான் அவன் வருத்தத்துடன்.

அவனுக்கும் வலித்திருக்கிறதே! பாவம்தான் என்று திலோ எண்ணுகையில், ரஞ்சன் மேலும் பேசினான் ''நீ விலகி நின்றபோது, ஒரு நாள் கூட என்னால் தாங்க முடியவில்லை, தெரியுமா? ஆனால், இதுவும் பழக வேண்டியது தானே என்று, சகித்துப் பார்த்தேன். ஆனால் முடியவில்லை. பக்கத்தில் நீ இருக்கிறாய் என்பது இல்லாமல், என்னால் தூங்க முடியவில்லை. காலையில் உன் முகம் பாராமல் எழ முடியவில்லை! அதனால்தான் அதட்டுவது போல, மறுபடியும் உன்னை என் அறைக்கே கொண்டு வந்தேன்! ஆனால்... உண்மையைச் சொல்லு. உனக்கும் அப்படித்தானே?'' என்று கெஞ்சலாகக் கேட்டான்.

இப்படி உருகிப் பேசுகிறவனிடம், வறட்டு கௌரவம் பாராமல் மன்னிப்பை வேண்டுகிறவனிடம், எப்படி விறைப்புக் காட்டி, மறைத்துப் பேசுவது?

அல்லது, இப்போது எதற்காகத்தான் மறைப்பதாம்?

செவ்விதழ்கள் புன்னகையால் விரிய, ஒப்புதலாகத் தலையாட்டினாள் திலோத்தமா.

''ஆஹ்ஹா!'' என்று அவளை நோக்கி எழுந்த கைகளை அடக்கி, மடக்கி வைத்துக் கொண்டான் சித்தரஞ்சன்.

''இது மட்டும் நம் வீடாக இருந்தால்... ஹூம்!'' என்று பெரிதாக ஏக்கப் பெருமூச்சு விட்டவனைப் பார்க்கையில், திலோவுக்குச் சிரிப்பு வந்தது.

ஆறுதலாகப் புன்னகை செய்தவன், ஏதோ நினைவு வர, விவரம் கேட்டான் ''ஆனால் திடீரென்று என்ன ஆயிற்று, திலோ? இத்தனை நாள் பொறுத்திருந்தவள், இப்படி பட்டென்று என்னை விட்டுக் கிளம்பி விட்டாய்?'' என்ற கேள்வியில், வியப்புடன், கண்டனமும் தொனித்தது!

''நேற்று இரவு முழுவதும், நான் படுக்கக் கூட இல்லை, தெரியுமா? சொல்லு, என்ன ஆயிற்று? கூண்டுப்புலி மாதிரி எதுவும் செய்ய முடியாமல் நடந்து, நடந்து காலே ஓய்ந்துவிட்டது! எதற்காக இப்படி ஓர் அதிர்ச்சி வைத்தியம்?''

''அது...'' என்று ஓரக் கண்ணால் கணவனைப் பார்த்தாள் மனைவி.

இனி, இவனிடம் மறைக்கத் தேவையில்லை. ஆனால், எப்படிச் சொல்வது?

''நாம் டாக்டர் அனுசூயாவுக்கு ஃபீஸ் கொடுக்கவில்லை, அல்லவா? மருத்துவர்களிடம் கடன் வைத்துக் கொள்ளக்கூடாது என்று என் தாத்தா சொல்வாராம். அம்மா என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்!''

புரியாமல் விழித்தான் அவன் ''ஆனால், நான் கொடுக்கப் போனபோது, அவர்கள்தானே, மறுத்தார்கள்?''

''ஆனாலும், கொடுக்க வேண்டிய பணம் கொடுத்துதானே, ஆக வேண்டும்? அதனால், சென்னை சென்றதும் அவர்களைப் போய் பார்க்க வேண்டும்.''

''அவர்களையா? டா...க்டர் அனுசூயா...'' என்று ஒரு கணம் யோசித்தவனின் கண்களில் பிரமிப்பு பரவியது. ''அது... அப்படியானால்'' என்று ஆச்சரியத்துடன் வினவினான் அவன்.

ஒப்புதலாகத் தலையசைத்து, ''சாரி ரஞ்சன். இந்த ஒன்றரை மாதமாக அனுபவித்த மனக்குழப்பத்தில், அவர்கள் சொன்ன மாத்திரையை, அடியோடு மறந்து போனேன்!'' என்றாள் அவள், மெல்லிய குரலில்.

சொல்லிவிட்டு, சிறு இறுக்கத்துடன் காத்திருந்தாள்.

இதை, அவன் எப்படி எடுத்துக் கொள்ளக்கூடும்? இதுதான், அவனுக்கான 'லிட்மஸ் டெஸ்டா?'

''குழப்பம் என்று நகாசாகச் சொல்லுகிறாயா, திலோத்தமா? என் கொடுமையால் ஏற்பட்ட வேதனையில் என்று, சும்மா வெளிப்படையாகவே சொல்லு. செய்த தப்புக்குத் தண்டனையாக, வருத்தமும் பட வேண்டும்தானே? ஆனால் உன்னை வாட்டும்போதே, எனக்கும் குழப்பம், வேதனை இரண்டுமே இருந்தன, திலோத்தமா. வெளிப்படையாகச் சொல்லி, உன்னை வேதனைப்பட வைத்ததிலிருந்து, மிகவும் அதிகமாக! இரண்டுமாக என்னை ஆட்டிப் படைத்த விதத்தில், எனக்குமே, எல்லாம் மறந்துவிட்டது என்று தோன்றுகிறது!'' என்றான் பழைய நினைவு தந்த வருத்தப் பாதிப்பில் இறங்கிய குரலில்.

திலோவின் மனம் சட்டெனத் துள்ளியது.

கணவனும் மனக் குழப்பத்தில் மறந்திருக்கக் கூடும் என்று அவள் நினைத்தது சரியாகத்தானே இருந்திருக்கிறது? அப்படியானால், அவன் குணத்தை, அவள் சரியாகத்தானே, கணித்திருக்கிறாள்?

சின்ன விஷயமாக இருக்கலாம். ஆனால், ஒரு சிறு விதைதானே, பெரு மரமாக வளர்வதும்?

அவள் மனம் குளிர்கையிலேயே, திடுமென "யாஹூ!" என்று உற்சாகத்துடன் கூவினான், சித்தரஞ்சன்.

செய்தியைச் சந்தோஷமாகவே ஏற்கிறான்!

திலோத்தமா புன்னகையோடு நோக்க, கண்ணில் சிரிப்புடன் அவன் தொடர்ந்தான். "ஆக, அம்மா திரும்பி வரும்போது, அவர்களுக்கான நல்ல சேதி தயார் என்று சொல்லு! மாமியார் சொல் தட்டாத மருமகள்! உச்சி குளிர்ந்து போவார்கள்!" என்றுரைத்த சித்தரஞ்சன் சட்டென எழுந்தான்.

"கிளம்பு, கிளம்பு திலோ! நம் வீட்டுக்குக் கிளம்பு! இதற்கு மேல், இப்படிப் பொது இடத்தில் இருந்து நல்ல சேதி கேட்டுத் தாங்க முடியாது! நம் வீட்டில், தனி அறையில், ஒழுங்கான முத்தாய்ப்பு வைக்கக் கூடிய விதமாகத்தான் சொல்ல வேண்டும். வா!" என்று அவள் பிடித்து எழுவதற்கு வசதியாக கையை நீட்டினான்.

உறுதியும் வனப்புமான அவனது கையை மறுக்காமல் பற்றி, மகிழ்ச்சியோடு எழுந்தாள் மனைவி!

# காதல் ஒருவனைக் கைப்பிடித்தேன்



ரமணிசந்திரன்